R. Annex Shelf. 22B

வாரப் பதிப்பு விலை சதம் 10

சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO- 12

Office of the Registrar of Books & Newspapers
1 - JAN 1955
CEYLON.

BEREC
TRADE MARK

ப்ளாஷ் லைட் பெரெக் பட்டரிகள் இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டவை.

அதிக பிரகாசமான வெளிச்சத்தையும் நீண்ட உழைப்பையும் அளிக்கிறது.

புத்தகம் 8 ஜய ஆ மார்கழி மீ 18உ [2-1-55] ஞாயிற்றுக்கிழமை ஜமாதுல் அவ்வல் பிறை 7 இதழ் 31

இலவச கல்விக்கும், சிகிச்சைக்கும் முற்றுப்புள்ளி?

மாணவரிடமும் நோயாளரிடமும் பிரவேசக் கட்டணம் அறவிட ஆலோசனை

அரசாங்க நிதிநெருக்கடியைச் சமாளிக்க திட்டக் கமிட்டியின் சிபார்சு

(நமது நிருபர்)

இலங்கை மக்களுக்கு இலவசக் கல்வி வளங்கிவிட்டதாக அரசாங்கம் பெருமை பீத்தி வந்ததல்லவா? அதன்பின் இலவசக் கல்விக்கு தலை முழுக்குப் போடவும் திரை மறைவுச் சதிகள் நடந்தனவல்லவா?

இப்போது எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் பிரவேசக் கட்டணம் வசூலிப்பது என்று அரசாங்கம் தீர்மானம் எடுக்கலாம் என நம்பப்படுகிறது. இந்த யோசனை மந்திரி சபையில் பலத்த பூசலை ஏற்படுத்தியுள்ளதாகவும் இதை கல்வி மந்திரியார் மூர்க்கமாக எதிர்ப்பதாகவும் தெரிகிறது.

இந்த ஆலோசனையை அரசாங்கத்திடம் ராஜ்ய திட்ட கமிட்டி சமர்ப்பித்திருக்கிறது. அத்துடன் 150 ரூபா அடிப்படைச் சம்பளம்பெறுவோர் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்படும் போது அந்த நோயாளிகள் மீதும் பிரவேசக் கட்டணம் விதிக்கவேண்டும் என்று திட்ட கமிட்டி மேலும் யோசனை தெரிவித்துள்ளதாம்.

நாட்டின் நிதி நிலைமையை ஆழ்ந்து பரிசீலனை செய்த பின்னே திட்ட கமிட்டி மேற்படி யோசனைகளை முன்வைத்துள்ளது.

தேசத்தின் நிதி நிலைமை 'படுமோசமாக' உள்ளது என்றுஅபிப்பிராயம் தெரிவித்துள்ளமேற்படிகமிட்டிஉடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுக்காவிட்டால் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் பெரிதும் பாதிக்கப்படும் என்று எச்சரித்திருக்கிறது.

திட்ட கமிட்டியின் இந்த ஆலோசனை மந்திரி சபையில் பலத்த அபிப்பிராய பேதத்தை சிருஷ்டித்துள்ளதாகவும், இதை கல்வி மந்திரி திரு பண்டா பலமாக எதிர்ப்பதாகவும் அறியக்கிடக்கிறது.

இது சம்பந்தமான தஸ்தாவேஜில் தமது குறிப்பை கல்வி மந்திரியார் வெளியிட்டுள்ளார். அதில் இந்த ஆலோசனைகளை ஒப்புக் கொண்டால் இன்றுள்ள அரசாங்கம் நாட்டிற்கு செய்துள்ள ஒரு சிறு நன்மையைக் கூட தலை முழுக்குப் போடுவதாகும் என்று தெரிவித்துள்ளார்.

மூலம்

சகலவித மூலநோய் சங்காரி

மூல நோய்களுக்கு ஓர் வரப் பிரசாதம், ஒரே போத்தலில் குணம் தெரியும். தவிர, சகலவித வாதங்கள் ஊறல், படை (ECZEMA) இரந்தி, மறமறப்பு முதலானவைகளுக்கும் அதியற்புத குணமளிக்கும்.

காலம் கடத்தாமல்

உடனே வாங்கிச் சாப்பிடுங்கள்.

ரிச்லெட் ப்ளட் பியூரியர்

கேட்லாக் இனாம்

வெஸ்டன் ஏஜன்ஸீஸ்,
170, ஆட்டுப்பட்டி தெரு
கொழும்பு. போன்: 2885

கம்யூனிஸ்ட் நாடுகளுடன் இலங்கை வர்த்தக உறவு?

சேர் ஜோன் செய்யவிருக்கும் புத்தாண்டு முடிவு

(நமது நிருபர்)

இலங்கை, கம்யூனிஸ்ட் நாடுகளுடன் வர்த்தக உறவு கொள்வதா என்பதை புத்தாண்டின் முதல் கடமையாக பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை தீர்மானிக்க இருக்கிறார் என்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து ஒரு செய்தி கூறுகிறது.

இது அடுத்த மாதம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிகிறது. கம்யூனிஸ்ட் நாடுகளுடன் வர்த்தகம் சம்பந்தமான கொள்கையை விரைவிலேயே தெரிவிப்பதாக வர்த்தக மந்திரி திரு ஷெர்லி கொரியா மக்கள் சீனாவுக்கு வாக்குறுதி கொடுத்திருந்தாரல்லவா? எனவேதான் இதை ஒட்டிய தீர்மானத்தை அரசாங்கம் விரைவிலேயே எடுக்கவிருக்கிறது.

மக்கள் சீனா இலங்கையுடன் நடத்தும் வர்த்தகத்தை வியாபிக்க விரும்புவதாயும், ஆனால் இலங்கை அரசாங்கம் வர்த்தக தூதர் உறவு ஏற்படுத்துவது சம்பந்தமான முடிவுக்கு வர தாமதிப்பதே இதற்கு முட்டுக்கட்டையாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

சக ஜீவியம்பற்றி மகாநாடுகளில் பேசித் திரியும் இலங்கைப் பிரதமர் கம்யூனிஸ்ட் நாடுகளுடன் வர்த்தக உறவுகொள்ள தாமதிப்பதன் அர்த்தம் என்னவென்று கேட்கப்படுகிறது. சகல நாடுகளுடனும் வர்த்தகம் செய்வதே சக ஜீவனக் கொள்கையின் அத்திவாரம் என்றும் கருதப்படுகிறது.

பிரயாணச் செலவு என்று கூறி பெரும் மோசடி

16 அதிகாரிகள் 1 லட்சம் ரூபாவுக்கு பதில் கூறவேண்டும்

(நமது நிருபர்)

நாட்டின் நிதி நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருவதற்கு பெரிய பதவியில் உள்ள அரசாங்க ஊழியர்களே முக்கிய பொறுப்பாளிகள் என்பதை இதுவரை தெரிந்தும் தெரியாதது போல் இருந்த அரசாங்கம் இப்போது வெளிப்படையாக ஒப்புக்கொள்ள முன் வந்திருக்கிறது.

கடந்த பதினைறு வருஷங்களாக அரசாங்க ஊழியர்கள் பலர் பிரயாணச் செலவு என்ற போர்வையில் பெருந் தொகை பணத்தை அரசாங்கத்திடமிருந்து பறித்துக் கொண்டதாகத் தெரிகிறது. இது விஷயத்தில் திறைசேரி அதிகாரிகளும் அரசாங்க கணக்குப் பரிசோதனை இலாகா அதிகாரிகளும் கூட்டாக விசாரணை நடத்தி வர வேண்டி ஏற்பட்டிருக்கிறது.

கணக்குப் பரிசோதனை இலாகா இதுவரை பதினைறு அரசாங்க உயர் பதவியாளர்களைப் பல கேள்விகளுக்குத் தக்க பதில்தரக் கோரியிருக்கிறது. இவர்கள் மாத்திரமே ஒரு லட்சத்திக்கு அதிகமான தொகைக்குப் பொறுப்பாளிகளாம்.

இது போகக் கூட்டு விசாரணை இன்னும் விசித்திர விஷயங்கள் பலவற்றை அம்பலப்படுத்தும் என நம்பப்படுகிறது.

புத்தாண்டு வாழ்த்துக்கள்

"சுதந்திரன்" எஜமானர்களான வாசக நேயர்களுக்கும் மற்றும் எமது விளம்பரதாரர்களுக்கும், ஏஜண்டு நண்பர்களுக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.

—ஆசிரியர்

இந்த எழுத்துக்கள்!

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் புதிய 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும்சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

நவீன முறைப்படி அச்செழுத்துக்களை வார்க்கும் உயர்தரமான இயந்திர சாதனத்தை நாம் புதிதாக நிறுவியுள்ளோம் என்பதை நமது நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

8, 10, 12, 14, 16, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

நாம் இப்பத்திரிகையில் உபயோகிக்கும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. இவ்வெழுத்துக்கள் உயர்தரமான உலோகத்திலும், தரம் சற்று குறைந்த உலோகத்திலும் விலைக்குத் தக்கபடி கிடைக்கும். வேண்டியவர்கள் விவரத்திற்கும் விலைப் பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக்கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக்கொள்ளலாம்.

சுதந்திரன் ரைப் பவுண்டரி,
194 ஏ, தட்டா தெரு, கொழும்பு—12.

சிங்கம் மார்க் சுருட்டுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலம் அதிகாரபீடத்திலிருப்பது அடிமைத் தனத்தின் மானங்கெட்ட சின்னம்

இலங்கை பூராவும் இரண்டு மொழிகளும் பயிற்றுவிக்கப் படலாம்

ஆனால் அது இஷ்ட பூர்வமானதாக மட்டுமே இருக்க வேண்டும்

எஸ். வீரசிங்கம்
புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்த கல்லூரி முன்னை நாள் அதிபர்

"நாட்டை அடிமைப் படுத்தியவர்களின் மொழி அந்த அடிமைப்படுத் தப்பட்டவர்களின் வாயில் பேசப்படும்போது அடிமை களின் மொழியாகிறது." (The Language of the Conque—ror in the mouth of the conquered is the language of the slave) என்று உரோமாபுரி அறிஞர் தாசிட்டஸ் (Tacitus) பல்லாயிரம் ஆண்டு களுக்கு முன் கூறினர். இது இன்றும் நம் நாட்டு முன் உள்ள பிரச்னைக்கும் பொருந் தும். எனவே இந்த நாட்டில் ஆங்கிலம் அரசோச்சுகிறது என்றால் அது அடிமைகளின் மொழியாக, அடிமைத்தனத் தின் பிரதிபலிப்பாகத்தான் இருக்க முடியும். எனவே தான் ஆங்கிலேயர் ஏடுகட் டின பின்னராவது மானத் தைக் காக்கக் கூடாதா என்ற பிரச்னைக்கே இலங்கை மக்கள்பதிலிறுக்கவேண்டும்.

ஆனல் ஆளும் கூட்டத் தைச் சேர்ந்தவர் கள் ஆங்கிலக் கல் வியின் உதவியால் தாம் பெற்ற பெருமையையிழக்க விரும்புகிறவர்களல்ல. வாக் குறிமை சர்வசனங்களுக்கும் உரியதாக வந்தபின்னர் கூட் டங்களிலும் மகாநாடுகளி லும் மேடைமீது நின்று சுதேசிய மொழிகள் அரசி யல் மொழிகளாயும், கல்வி பயிற்றும் மொழிகளாயும் கட்டாயம் வரவேண்டு மென்று பறையறைகின்ற னர்.

மக்கள் பேசும் மொழி களே அரசியல் மொழியாக வேண்டுமென்பதும், அவர் களுடைய மொழிமூலமே சகலவித கல்வியும் பயிற்றப் படவேண்டு மென்பதும் யாவராலும் அங்கீகரிக்கப் படவேண்டிய ஓர் உண்மை. நமது இலங்கையில் இந்தக் கொள்கை எப்படி அனுசரிக் கப்படலாம்? ஓர் சிறு தீவு. ஆக 80 லட்சம் மக்கள் கொண்ட ஒரு தீவு. இப்படி யிருக்க இரண்டு மொழிகளை எப்படி அரசியல் மொழி யாக்குவது; எப்படி கல்வி யூட்டும் மொழிகளாக்குவது? இப்பிரச்னை ஓர் கஷ்டமான பிரச்னையல்ல. ஐக்கிய சோவியத் சோஷலிஸ்ட் குடி யரசில் (U. S. S. R.) சேர்ந் துள்ள பல சுயாட்சிபெற்ற நாடுகளையோ அல்லது கன டாவையோ அல்லது தென் ஞபிரிக்காவையோ அல்லது சுவிட்சர்லாந்தையோ உதா ரணமாகக் காட்டலாம்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் தொகை அண் மையிலருகி வந்திருக்கிறது. தமிழ் பேசும் மக்கள் இலங் கையின் பிறபாகங்களிலும் வசிக்க நேர்ந்த காலங்களில் தங்கள் வசதிகளைக் கருதி இடவசதி காலவசதிக்கேற்ப பறங்கிக்காரரா யோ, தமிழராயோ, சிங்களவராயோ அங் கீகரிக்கப்பட்டு வந்தி ருக்கின்றனர். இத ற்கு உதாரணமாக ஒஸ்டார்ஜிக் குடும் பத்தைச் சொல்ல லாம். இவ்வுதார ணத்திற்கு நேர்மாறு கச்சோனகர் நடந்து வந்திருக்கின் றனர். சிங்களம் நானு பக் கத்திலும் பேசப்ப டும் இடங்களிற்ரு னும் வசித்துவந்த சோனகர் தமிழ் மொழியிலுள்ள பற் றை மறந்திலர். அவர் களுடைய மொழிப்பற்று ஒப்பு யர்வற்றது. அன் னிய நாடுகளில் மக் கள்நடந்துகொண்ட முறைகளை இலங் கைச் சோனகருடன் ஒப்பிட மிகப் பெரிய ஆச்சரியம் ஏற்படு கின்றது. உதாரணத் திற்கு ஒரு நாட்டை எடுப்போம். ஆங்கில மன்னனுகிய எட் வேட் உவேல்சு நாட் டைக் கைப்பற்றிய போது மக்களைத் திருப்திப்படுத்துவ தற்காக ஆங்கிலந் தெரியாத தனது குழந்தை ஒருவனே உவேல்சு நாட்டுக்கு இளவரசனுக்கப்படு படும்போது பெரும்பான் மையினராகிய சிங்களவர் மிகச் சாவதானம் காட்ட வேண்டும். சிறுபான்மை யினர் எதுவிதமான பயமும் கொள்ளாத முறையில் திட் டங்களைத் தயாரிக்கவேண் டும். இலங்கை முழுவதிலும் இரண்டு மொழிகளும் பாட சாலைகளில் பயிற்றப்பட வேண்டும். தமிழ் பிள்ளைகள் தமிழை தாய்ப் பாஷையாக வும் சிங்களத்தை இஷ்டபூர் வமான இரண்டாம் பாஷை யாகவும், சிங்களப் பிள்ளை கள் சிங்களத்தைத் தாய்ப் பாஷையாகவும் தமிழை இஷ்டபூர்வமான இரண் டாம் பாஷையாகவும் பயில வேண்டும். அப்படிக்கில் லாது சிங்களத்தை மட்டும் அரசியல் பாஷையாக்க வேண்டும் என்று சிலர் எழுப் பும் கூச்சல் மிருகத்தனமான மிலேச்ச சகாப்தத்தையே ஞாபகப்படுத்துகிறது. ஒரு மொழி மட்டும் அரசியல் பாஷையாக்கப் படும்போது மற்றைய மொழி நசுக்கப் படுவது சரித்திரம் கண்ட உண்மை. ஆங்கிலம் அர சோச்சிய காலத்தில் சிங்கள மும்:- தமிழும் நசிவுண்டன. இன்று சிங்களத்தை மட்டும் ஆட்சி மொழியாக்குவதென் ருல் தமிழ் நசிக்கப்படும் என்பதுதானே. எனவேதான் தமிழ் பகுதியில் தமிழும், சிங்களப் பகுதியில் சிங்கள மும் பிரதேச பாஷையாக வும், இலங்கை முழுவதற் கும் இரு பாஷைகளும் அரசி யல் பாஷைகளாகவும் இருக் கவேண்டும். இது ஒன்றே இரு மொழிகளையும் வளர்ப் பதுடன் நாட்டின் தேசிய ஒற்றுமையையும், சகோ தரப் பிணைப்பையும் பேண உதவும். மேற்கு றிப்பிட்ட விதப் பயிற்சி மாணவர் 11வயது மட்டும் பயிலவேண்டும். அப்புறம் ஆற்றல் படைத்த மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வி, மற்றும் உலக பாஷைகளையும் அவ ரவர்களின் இஷ்டத்தைப் பொறுத்துப் பயிற்றலாம். இப்படியான ஓர் திட்டத் தை அரசாங்கம் அனுசரித் தால் சிறுபான்மையரிடம் ஒருவிதப் பயமும் ஏற் படாது. மலைப் பிரதேசங் களில் குடியேறிய தமிழ் மக் களுடைய பாஷைக்கோ, பண்பாட்டுக்கோ ஒரு ஆபத் தும் நிகழமாட்டாது.

சுயபாஷைகள்மூலம் அர சியல் கருமங்கள் நடத்த முடியாதென்றும், கல்வி பயிற்ற முடியாதென்றும் சாதிப்பது மிகவும் பேதமை. 1944ம் ஆண்டு கல்வி முறை யை ஆராய்ந்த கல்வி சம் பந்தமான விசேஷ கமிட்டி (Special committee) தாய்ப் பாஷைமூலமே கல்வி பயிற் றப்படல் வேண்டு மென்றும், அத்திட்டம் 1948-ம் ஆண்டு அமுலுக்கு வரவேண்டுமென்றும் விதித் தது. 1948-ம் ஆண்டு மார் கழி மாதத்திற்கு முன்னர் தாய்ப்பாஷை மூலம் கல்வி பயிற்ற முடியாத ஆசிரியர் கள் யாபேரும் வேலையில் நின்று விலகவும் வசதிகளும் உபகாரச் சம்பளங்களும் ஏற்படுத்தப்பட்டன. 10 ஆண்டுகளாய் அரசாங்கம் நித்திரை செய்துகொண்டே யிருந்தது. தாய்ப் பாஷை மூலம் கல்வி பயிற்ற முடியா தென்பது ஓர் போலி நியா யம். தமிழ் மொழியிலாயி லும் சரி, சிங்கள மொழியா யிலும் சரி எப்பதத்தையும் இரவல் பெறும் ஆற்ற லுண்டு. சமஸ்கிருத பாஷை யிலிருந்து பல்லாயிரம் பதங் களை கவ்விய மொழிகள் இவை. அன்னிய மொழிகளி லிருந்து இரவல் வாங்கும் சொற்களையும் உபயோகிப்ப தற்குத் தேவையான இலக் கண விதிகளையும் உண்டு பண்ணியிருக்கின்றனர். இம்

[13-ம் பக்கம் பார்க்க]

கருக்கமேடை

விழாவில் வெற்றி கொட்டிய குமாரி ஷீலா முகர்ஜி

சென்ற நவம்பரில் இந்திய சர்வகலாசாலை மாண வர்களின் 'வாலிபர் விழா' நடந்தது. பாடப் புத்தகங் களிலே லயித்திருந்த இளம் உள்ளங்கள் ஆடல்-பாட லிலே பரமானந்தம் கொட் டின. 26 சர்வகலாசாலைகளி லிருந்து 700 மாணவர்கள் கலந்துகொண்டார்கள். விழாவை கல்வி மந்திரி மௌலானு அபுல் கலாம் ஆஸாத் ஆரம்பித்து வைத் தார்.

வெவ்வேறு பல்கலைக் கழ கங்களிலிருந்து 26 நாடகங் கள் நடிக்கப்பட்டன. பெர் னட் ஷாவின் "நீ என்றும் சொல்ல முடியாது" என்ற நாடகம் தொட்டு இம்ரி யாஸ் அலியின் 'கம்ரா நெம் 5'வரை நடிக்கப்பட்டது. ஆடிக்காட்டப்படாத ஒரு நடன வகை கூட இல்லை என்று சொல்லலாம். பரத நாட்டியம், கதகளிபோன்ற நடனங்களை கண்ணைக் கவ ரும் உடை அலங்காரங்களு டன் இளம் அணங்குகள் பிர மிக்கத்தக்கவகையில் ஆடி னர்கள். இனிமை ஊட்டும் முறையில் பல கிராமிய நட னங்களும் ஆடப்பட்டன.

பல்கலைக் கழக மாணவர் களின் இந்த விழா இந்தியக் கலையின் சரித்திரத்தில் ஒரு புதிய சகாப்தத்தைஏற்படுத் தியது என்று சொல்லலாம். இந்தியாவில் உருவாகும் புதிய மனிதர்கள் பாரதத் தின் அமரத்துவம் பெற்ற பண்பாட்டை-கலை-காவி யங்களை புஷ்டியுள்ளதாக செழித்தோங்கச் செய்வார் கள் என்பதையும்-எதிர் காலத்தில் பாரதக் கலைகள் அவனியை 'ஆடல்-பாட லால்' வெல்லும் என்பதை யும் இந்த விழா ஸ்பட்சமாக எடுத்துக்காட்டியது.

புளக் உபயம்
—இந்திய தூதராலயம்

சலங்கையின் ஒலியையும் சதிர வலைவால் வென்று நிற்கும் குமாரி பிரத்தியா பண்டிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடச்சூட

★ இலங்கைத் தமிழ் மக்கள் கலாரசனை மிக்கவர்கள். பிரபல நாடக விற்பன்னர் ஸ்ரீ டி. கே. ஷண்முகம் பாராட்டு.

—செய்தி

ஏன்சார், நான் சொல்லுகிறேனே என்று கோபித்துக் கொள்ளாதீர்கள். இந்த மாதிரி தலையைத் தடவி இலங்கை மக்களை ஒட்டாண்டிகளாக்கத்தானே இந்த பாடு. இலங்கை தமிழ்மக்கள் ரசனை கெட்டவர்கள் என்று நான் சொல்லவில்லை. என்ன இருந்தாலும் இவ்வளவு பெரிய கட்டணத்தைக் கொண்டு கலாரசிகர்களை ஆசைகாட்டி மோசம்பண்ணியிருக்கக் கூடாது.

★ இலங்கைக்கு வெளி நாட்டு மூலதனம் தேவை. ஜப்பானிய வர்த்தகர்கள் விருந்தில் சர் ஜோன் கோரிக்கை.

—செய்தி

இவைகளை விழுங்கி ஏப்பமிட பெரியவாய்கள் தேவை என்று விளம்பரம் செய்தால் கூட அதை உடனே பூர்த்தி செய்ய வாயை பிளந்துகொண்டு காத்திருக்கிறார்களே சிலர்.

★ ஒரே மூச்சில் ஐம்பத்தி ஏழரை மணி நேரம் சைக்கிள் சவாரி.

—செய்தி

அப்பாடா 'படக்' கென்று நின்ற மூச்சு இப்பொழுது தான் வெளிவந்தது. எனக் கொரு சந்தேகம். ஐம்பத்தி ஏழரை மணிக்கு மேலேயும் சென்றிருந்தால் இந்த மனிதன் மூச்சை விட்டிருக்கவே மாட்டார்கள் போலிருக்கிறது.

★ பெரியவர்களுக்குச் சிறியவர்களாகுவதில் எப்படி ஆசையோ அப்படியே சிறுவர்களுக்கும் பெரியவர்களாகுவதில் ஆசை.

—'கேசரி' யதார்த்தன்

அதை ஏங்கேக்கிறிங்க, போங்க. பொம்பளைங்க ஆம்பிளைங்களாகவும் ஆம்பளைங்க பொம்பளைங்களாகவும் மாறிவிட ரொம்ப ஆசைப்படற காலமுங்க இது....

★ சமீபத்தில் ரோயல் கல்லூரி மண்டபத்தில் ''சங்கர் ஆர்ட்ஸ்'' தயாரித்த ''ஆழ்கடல்'' என்ற நாடகத்தை பார்த்துவிட்டு 'ஆழ்கடல்' என்றால் என்ன என்று கேட்டுக் கொண்டார்களாம் 'கலாரசிகர்கள்'

—வதந்தி

விடிய விடிய ராமாயணம் கேட்டுவிட்டு சீதைக்கு மாப்பிள்ளை யார் என்று கேட்ட கதையாகிவிட்டது நாடகம் பார்த்த லட்சணம்.

★ உயர் பதவி வகிக்கும் சிவில் சேவை (ஸி. ஸி. எஸ்) அதிகாரிகள் இருவர் பணக் கஷ்டத்தைச் சமாளிப்பதற் காகத் தமது மனைவிமாரின் நகைகளைக் கூட்டுறவு நகை அடகு பிடிக்கும் நிலையத்தில் அண்மையில் அடகு வைத்தனர்.

—செய்தி

என்னமோ இவர்கள் நல்ல மனிதர்கள்போலத்தான் எனக்கு தோன்றுகிறது. மனைவிமார்களின் நகைகளுக்குப் பதிலாக மற்றவர்களைப் போல் மனைவிமார்களையே அடகு வைக்கவில்லை அவ்வளவுதான்.

★ ஹாஸ்ய நடிகை அங்கமுத்து முறைப்படி நடனம் கற்றுக்கொண்டு பல மேடைகளில் ஆடியிருக்கிறார், அவருக்கு சங்கீதமும் தெரியும். ஆர்மோனியமும் வாசிப்பார்.

—தமிழ் சினிமா

நாசமாப் போச்சு, இந்த அம்மாள் ஆடுகிற ஆட்டத்திலே பாட்டும் ஆர்மோனியமும் மேடையில் [(க)தக்காளி) பட்டபாடுதான். மேடை என்னவென்று நினைக்கிறீர்கள் வெறும் 'கேடர்' தான்.

அழுவதா? சீறுவதா?



"தமிழ் நாட்டில் எழுதிப் பிழைக்க எண்ணுவதிலும் பார்க்க வயிற்றைக் கட்டிக்கொண்டு சாகலாம்" என்று தமிழ் நாட்டுச் சிறுகதை மன்னனுகிய புதுமைப் பித்தன் கூறினார். தமது எழுத்திலே அவருக்கு உறுதியான நம்பிக்கை இருந்தது. தன்னுடைய திறமையை அவர் உணர்ந்திருந்தார் மற்றும் எழுத்தாளர்கட்கு வழமையாக இருக்கும் கர்வமும் கொஞ்சம் அவரிடம் இருந்தது. தன்னைப்போன்ற ஒரு எழுத்தாளன் வறுமையில் வாடுவதா? என்ற கொதிப்பே அவரை இப்படிக் கூறச் செய்தது. வாழும் போது நாம் அவரின் திறமையை உணரவில்லை, மாண்டபின்னர் தான் அறிந்து வருந்துகிறோம். போற்றுகிறோம். இதே வழி தமிழ் நாட்டில் அவருக்குமட்டுமல்ல. பாரதியாருக்கும் நடந்தது. திரு வி. க. விற்கும் நடந்தது. வாழும்போது தூற்றுவதும் மாழும்போது போற்றுவதும் தமிழ் நாட்டின் பரம்பரைச் சொத்தாகி விட்டது. இது இன்னும் நடைபெற்றுவருகிறது.

இறந்தபின் போற்றப்படுவது எழுத்தாளனுக்கு எவ்வித பயனுமற்றது. வாழும்போது தூற்றப்படுவதையும் அவன் தாங்குவான். ஆனல் தனது படைப்பிற் கேற்ற ஊதிய மில்லை; வாழ்விற்கேற்ற வழியில்லை; என்பனதான் அவன் உள்ளத்தைக் கொதிப்படையச் செய்ய வல்லன. பாரதியாரும் புதுமைப்பித்தனும் இந்நிலையிலேயே உள்ளக் குமுறலுடன் வாழ நேரிட்டது.

அவர்கள் வாழ்விலே வறுமையும், குமுறலும் இருந்ததனல்தான் அழியா இலக்கியங்களைப் படைக்க முடிந்தது என்று கூறுவது பன்றியை அணுவணுவாக கடித்துக் கொன்றுதான் சுவையான இறைச்சி கிடைக்கும் என்று சொல்வதை ஒக்கும்.

எம் நாட்டில் விவசாயிகளுக்குப் பேச்சளவில் எவ்வளவு மதிப்பு உள்ளதோ அதே மதிப்புத்தான் எழுத்தாளர்களுக்கும் இன்றுஇருக்கிறது.

ஜெர்மனியிலே எந்தத் தந்தையும் தனது மகளை அரசாங்கத்தில் உயர்ந்த பதவி வகிக்கும் ஒருவனுக்குக் கட்டிக் கொடுப்பதிலும் பார்க்க ஒரு சாதாரண எழுத்தாளனுக்கு கொடுப்பதில் அதிகப் பெருமைப் படுவானும். எழுத்தாளனுக்குக் கிடைக்கும் வருமானம் மிக உயர்ந்ததென்பதல்ல அதன் பொருள். பிரான்ஸிலேயும் எழுத்தாளர்களுக்குச்சமூகத்திலே ஒரு தனி மதிப்பு உண்டு. இங்கிலாந்து, அமெரிக்காவிலே எழுத்தாளருக்குள்ள மதிப்பிலும் பார்க்க பிரான்சு, ஜெர்மனியில் பேனு மன்னர்கட்கு மிக்க மதிப்புண்டு. ஆனல் இங்கிலாந்து அமெரிக்காவில் உளள எழுத்தாளர்களே நல்ல வருமானம் உள்ளவர்களாக உள்ளனர்.

வெறும் பணந்தான் உயர்ந்த இலக்கியப் படைப்பிற்கு வழி என்று கூறுவதும் தவருனதே. உலகிலே உயர்ந்த இலக்கியங்கள் படைக்கப்படும் மொழி ஆங்கிலம் என்று பலர் தப்பாகக் கருதியுள்ளனர். சோமசெட் மோகம் என்ற பிரபல ஆங்கில எழுத்தாளர் உயர்ந்த இலக்கிய வளம் மிக்கதும், சிறந்த இலக்கியங்கள் படைக்கப்படும் மொழியும் பிரெஞ்சு மொழியே என்று கூறுகிறார். சோவியத் நாட்டிலேயும் எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் ஆட்சியாளர் நன்மதிப்புக் கொடுத்துப் போற்றி ஆதரிக்கின்றனர்.

ஒரு எழுத்தாளனுக்கு முக்கியமாக வேண்டியது ஓய்வு; நிம்மதி; வாழ்க்கைப் போராட்டம்பற்றியே நாள் முழுவதும் எண்ண வேண்டிய நிலையில் உள்ளவன் நிரந்தரமான உயர்ந்த இலக்கியம் எதையும்படைத்துவிட முடியாது.

''5 'சிலிங்' கோடு ஒருவாரம் முழுவதையும் எப்படிக் கழிக்கலாம் என்ற சிந்தனையிலேயே எனது இளம்வயது முழுவதையும் கழித்தேன். அப்போது எப்படி இலக்கியம் படைக்க முடியும்'' என்று அறிஞர் பர்ணட்ஷா கூறினர்.

எழுத்தாளர்களுடைய வாழ்வுக்கும் தாழ்வுக்கும் பொறுப்பாளர்கள் அவர்கள் உழைப்பைக் கொண்டு இன்பமும் அறிவும் பெறுபவர்கள். அவர்கள், தாம் படித்துப் பயன் பெறும் அளவிற் குரிய ஊதியத்தை எழுத்தாளனுக்குசெலுத்த வேண்டும் அதை எப்படிச் செலுத்தலாம் என்று பலர் கேட்கலாம். இறுதி நாளில் வறுமையில் துன்பப்பட நேர்ந்த போதும் தமக்குப் பணம் சேர்த்துக் கொடுப்பதைத் திரு வி. க. மறுத்தார். நான் பிச்சைக்காரனல்ல என்று கூறினர். ஒரு குறிப்பிட்ட எழுத்தாளரையோ, அல்லது குறிப்பிட்ட பத்திரிகையையோ நீங்கள் ஆதரிக்க வேண்டுமாயின் அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அந்த நூலில் ஒரு பிரதியையோ, பத்திரிகையையோ சொந்தமாக வாங்கிப் படிப்பதுதான். யாவற்றிற்கும் இரவலை நம்புபவர்கள்தான் எழுத்தாளரை உயிரோடு கொன்று உயர்ந்த இலக்கியம் எதிர்பார்க்கும் கசாப்புக் கடைக்காரர்!

மேல் நாடுகளிலேயும், கீழ் நாடுகளில் முக்கியமாக ஜப்பானிலும் ஒருவர் படிப்பதற்கு வாங்கிய பத்திரிகையைமற்றவர் இரவலாகவாங்கிப் படிப்பது பிச இழிவாகக் கருதப்படுகிறது. 'உங்கள் உடையில் ஒன்றைத் தருவீர்களா, ஒரு இடத்திற்குப் போய்வந்து தருகிறேன்' என்று கேட்பது போலக் கேவலமாகக் கருதப்படுகிறது.

தமிழ் நாட்டின் பொருளாதார நிலை மோசமாக உள்ளது. அதனல்தான் எழுத்தாளர் நிலை அதிகம் வளர முடியவில்லை என்று கூறும் சமாதானம் ஓரளவிற்கு ஒப்புக்கொள்ளக் கூடியதென்றாலும் முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ளமுடியாததே பிறநாடுகளோடு ஒப்பிடும் போது இந்தியாவிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் தான் மிக மலிவாக உள்ளன. மேல் நாடுகளில் பல லட்சக் கணக்கில் வெளியிடப்படும் பத்திரிகைகளின் விலை இந்தியாவிலிருந்து வெளியிடப்படுபவற்றிலும் பார்க்க ஒரு மடங்கிற்கு மேல் அதிகமாக உள்ளன.

போலி இலக்கியங்களை மக்கள் ஒழிக்க வேண்டும். அதற்கு வழி அவற்றில் ஒரு பிரதியேனும் வாங்காது விட்டுவிடுவதுதான். அதே போது சிறந்த இதழ்களை அல்லது தாம் ஆதரிக்கும் கட்சியினர் வெளியிடும் இதழ்களைப் பணம்கொடுத்து வாங்க வேண்டும்.

பல வழிகளிலெல்லாம் வீண் செலவுகள் தினமும் செய்பவர்கள் சில சதங்கள் கொடுத்துச் சொந்தப் பத்திரிகை வாங்கிப் படிப்பதன் மூலம் பணத்தை மிச்சம் பிடித்து விட்டதாக எண்ணுகிறார்கள்.

உண்டு உறங்குவதுடன் மட்டும் மக்களனைவரும் திருப்தியடைந்திருப்பின் இன்று உலகம் இந்த அளவிற்கு வளர்ந்திருக்க முடியாது. ஒவ்வொருவரும் உழைக்கும் பணத்தைத் தமக்கு அவசியமாகத்தோன்றுபவற்றிற்கு முறைப்படியே ஒதுக்குகின்றனர். உணவு, உடை, வசிக்க இடம், அறிவு வளர்ச்சி, பொழுது போக்கு இப்படியாகப் பட்டியல் வளர்கிறது. உங்களுடைய உழைப்பிலே அறிவு வளர்ச்சி பொழுது போக்கிற்காகவும் ஒரு பகுதி பணத்தை ஒதுக்குங்கள். அப்பணத்திற்குப் பத்திரிகைகளையும் நூல்களையும் முடிந்தவரை சொந்தமாக வாங்கிப் படியுங்கள்.

கடிகாரம்
இனம்! இனம்!!

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 9—10.

மேற்குறிப்பிட்ட சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி ஒவ்வொன்றிற்கும் ஒரே கவரில் 150க்கு குறையாத கூப்பன்கள் அனுப்புபவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு அழகான மேசை அலாரம் கடிகாரம் இனமாகக் கொடுக்கப்படும்.

மானேஜர்
சுதந்திரன்

அறிமுகப்படுத்துகிறோம்

பாட்டுக்கொரு பாரதி—காவியத்துக்கொரு கம்பன்—சிறுகதைக்கோர் புதுமைப்பித்தன் என்ற நிலை இன்று மாறிவிட்டது. தமிழ்கூறும் நல்லுலகெல்லாம் புதுப்புது கம்பன்களும், பாரதிகளும், புதுமைப்பித்தன்களும் தோன்றுகிறார்கள் - தோன்றித்தான் ஆகவேண்டும்.

இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியிலும் வியக்கத்தக்க ஆற்றலும் - கலைத் திறமையும் கொண்ட பலநூறு எழுத்தாளர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் அத்தனை பேரின் ஆற்றலையும் ஆர்வத்தையும் ஒருமுகப்படுத்தினல், திறமைக்கு வாய்ப்பும் மதிப்பு மளித்தால், பிரமிக்கத்தக்க காவியப் படையல் - கலைப் படைப்பு படைக்கப்படும்.

இந்நோக்கத்துடன் ஈழத்திலுள்ள இளம் எழுத்தாளர்களை - நாளைய கம்பன்களையும், பாரதிகளையும் தமிழுலகுக்கு அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளோம். 'அறிமுகப்படுத்துகிறோம்' என்ற எமது புதிய அம்சத்தில் இளம் கவிஞர்களை, கலைஞர்களை, சிறுகதை எழுத்தாளர்களை, பேச்சாளர்களை மற்றும் கலைத்துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களை அறிமுகப்படுத்தப்போகிறோம்.

இதில் வரிசைக் கிரமம் இல்லை. எங்களது வசதியைப் பொறுத்தே அறிமுகப்படுத்துவதிருக்கும். எனவே, முதல், இரண்டு என்று தரம் பார்க்கும் பிரச்னை கிடையாது.

இளம் எழுத்தாளர்கள் தம் வாழ்க்கைக் குறிப்புக்களையும், கருத்துக்களையும் புகைப்படத்துடன் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

—ஆசிரியர்

ஒவ்வொருவர் ஒவ்வொரு நோக்கமாகப் பத்திரிகைகளை வெளியிடுகின்றனர். கட்சியே நோக்கமாக, பொது மக்கள் பணியே நோக்கமாக வெளிவரும் இதழ்களுக்கும் வேண்டியது பொது மக்கள் ஆதரவே. அதுயாதெனில் பணம். முடிந்தவரை சொந்தப் பத்திரிகை வாங்கிப் படியுங்கள். எழுத்தாளர் வாழ்வை உயர்த்துவதற்கு இது ஒன்றேவழியும் முடிந்தவரை சொந்தமாகும். வாங்கிப் படியுங்கள்.

—சந்தேகி

தலைவலிக்கு
ரிஷி நேத்ர சஞ்சீவி தைலம்

உபயோகத்தினல் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது. மேலும் இத்தைலத்தின் உபயோகத்தில் கண் சிகப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் அரிப்பு, கண் பார்வைகுறைவு, கண் கூச்சம், கண்ணிலிருந்து பீளை வடிதல், கண்வலி, கண்குத்து, வெள்ளெழுத்து, ஒருத்தலைவலி, கைகால் தேக எரிச்சல், மண்டையிடி, மூலச்சூடு, அஸ்திகாங்கை, கெர்ப்பச் சூட்டால் உண்டாகும் திரேக காந்தல், காதுநோய், காதுசெவிடு, காதுஇறைச்சல், காதில் சீழ்வடிதல், பீனிசம், தடுமல், மூக்கிலிருந்து நீர்வடிதல், மயக்கம், தலைமயிர்உதிர்தல், செம்பட்டை மயிர், பித்தநரை முதலியவைகளை ஆச்சரியமாய் குணம்செய்யும். கூந்தல் நன்றாய் வளரும். இத்தைலத்தை உபயோகித்த எவரும் குணமில்லை என்று சொல்ல முடியாது. ஆகையால் நீங்களும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். உண்மை விளங்கும்.

புட்டிக்கு ரூ. 3-00 தபால் செலவு சதம் 85

யாழ்ப்பாணம் சோல் ஏஜண்ட்:

எஸ். சுப்ரமணியம் அன் கோ.,
53, கே.கே.எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்

ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு.

சூடாதது

தங்கராஜாவுக்கு சினிமாவில் சேரவேண்டும் என்று மிகுந்த நாள் ஆசை. ஒரு நாள் இந்திய ஸ்டூடியோ ஒன்றிற்கு தனது ஆசை என்ன என்பதை தெரிவித்து விட்டு தான் ரேடியோவில் பாடப்போகும் தினத்தையும் குறிப்பிட்டிருந்தார். அப்படியே நாளும் வந்தது. நிகழ்ச்சியும் முடிந்தது. அடுத்த நாளே ஒரு தந்தி வந்தது அவருக்கு. அதில் ''ஓநாய் ஊளையிடும் சப்தமும், பேய்கள் கத்தும் சப்தமும்தான் கேட்டதே ஒழிய உங்கள் பாட்டு என்னவோ எங்களுக்கு கேட்கவில்லை. மழையின் காரணமோ அல்லது.....'' என்றிருக்க கண்டது. மனிதன் கீழே விழுந்தவர் எழுந்தாரேயில்லை.

''சிறில்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 9-10.



பிரவேசக் கட்டணம் சதம் 50



பிரவேசக கட்டணம் சதம் 50



மேல் இரண்டு கட்டங்களுக்கும் பிரவேசக் கட்டணம் ரூ 1-00 செலுத்தினால் இந்த மூன்றாவது விடையை இனாமாக அனுப்பலாம்

பெயர்.....

விலாசம்.....

.....

அனுப்பும் மொத்த விடைகளின் தொகை.....

கட்டணத்தின் தொகை ரூ.....சே.....

போஸ்டல் ஆடர் வவுச்சர் இலக்கங்கள்

விசேஷ கிறிஸ்தோதய-தைப்பொங்கல் வெகுமதிகள்

1வது விசேஷ பரிசு பெறுபவருக்கு தமிழ் நாட்டின் தலைநகரான சென்னை பட்டணத்திற்கு ஆகாய விமானத்தில் சென்று திரும்பி வர இலவச விமான டிக்கட். சென்னையில் ஒரு உயர்தர ஹோட்டலில் ஒரு வாரம் தங்குவதற்கு இலவசஏற்பாடுகள்-சென்னையில் தங்கி நிற்கும் காலையில் அங்குள்ள பொருட்காட்சிசாலை, மீன் காட்சிசாலை, மூர் மார்க்கட் முதலிய இடங்களைப் பார்வையிடுவதோடு இரண்டு பெரிய சினிமா ஸ்டூடியோக்களையும், அங்கு சினிமாப் படங்கள் பிடிக்கப்படுவதையும், தயாரிக்கப்படுவதையும் நேரில் சென்று பார்க்கவும் இலவச ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.

சென்னைக்குப் பிரயாணம் செய்ய முடியாத நிலையில் இருப்பவர்களுக்கு அல்லது விரும்பாதவர்களுக்கு மேற்படி பிரயாணத்திற்காக ஒதுக்கப்படும் தொகை ரொக்கப் பரிசாக வழங்கப்படும்.

2வது விசேஷ பரிசு-ஒரு பைசிக்கிள் அல்லது தையல் மெஷின்.

இந்தப் பொருட்கள் வேண்டாதாருக்கு அவற்றின் பெறுமதி ரொக்கப் பரிசாக வழங்கப்படும்.

எதிராக வரும் டிஸம்பர் ஜனவரி மாதங்களில் வரவிருக்கும் கிறிஸ்தோதயம்-தைப்பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 9ஐயும் 10ஐயும் இணைத்து இரண்டிலும் சேர்ந்தாப்போல் முதற் பரிசு பெறும் நேயருக்கு வழக்கமான ரொக்கப் பரிசுடன் ஆகாய விமானத்தில் சென்னை சென்று திரும்புவதான 1வது விசேஷ பரிசும் வழங்கப்படும். இரண்டு போட்டிகளிலும் ஏதாவதொரு போட்டியில் முதல் பரிசும் மற்றொன்றில் இரண்டாவது பரிசும் பெறும் நேயருக்கு வழக்கமான ரொக்கப் பரிசுடன், அவர் விரும்புகிறபடி, ஒரு பைசிக்கிள் அல்லது தையல் மெஷின் 2வது விசேஷ பரிசாக வழங்கப்படும்.



விசேஷ வெகுமதிகள் சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 9ம் 10ம் ஒன்றாக இணைக்கப்பட்டு விசேஷ கிறிஸ்தோதய-தைப்பொங்கல் வெகுமதிகள் வழங்கப்படவிருக்கின்றன. இந்த விசேஷ வெகுமதிகளுக்கும் ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியாகக் கொடுக்கப்படும் ரொக்கப் பரிசுகளுக்கும் சம்பந்தமில்லை. ஒவ்வொரு போட்டிக்கும் வழக்கம்போல் ரொக்கப் பரிசுகள் தனித் தனியாக வழங்கப்படும். ஆனால் 9ம் போட்டியிலும் 10ம் போட்டியிலும் முதற் பரிசு பெறுபவர் ஒருவராகவே இருந்தால் அவர் முதலாவது விசேஷ பரிசுக்கு உரியவராவார். இரண்டில் ஏதாவதொரு போட்டியில் முதல் பரிசும் மற்றொன்றில் இரண்டாவது பரிசும் பெறுபவர் ஒருவராகவே இருந்தால் அவர் இரண்டாவது விசேஷ பரிசுக்கு உரியவராவார். இரண்டு போட்டியிலும் சேர்ந்தாற்போல் உரிய விசேஷ பரிசுகளைப் பெறுபவர்களின் தொகை ஒன்றுக்கு மேற்பட்டால் அந்தந்த விசேஷ பரிசுகளுக்கு ஒதுக்கப்படும் தொகை ரொக்கமாகப்பகிர்ந்து அளிக்கப்படும்.

இரண்டு போட்டிகளிலும் ஒருவர் கலந்துகொள்ளும்போது ஒரே பெயரும் விலாசமும் கொடுக்கப்பட வேண்டும். பெயரோ விலாசமோ ஏதாவது ஒன்றில் மாறியிருந்தால் விசேஷ பரிசுகள் கிடைக்கா.

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 10.

(கிறிஸ்தோதய-தைப்பொங்கல் விசேஷவெகுமதித்திட்டத்தில்சேர்ந்தது)

முதற் பரிசு ரூ. 1,000 00
இரண்டாம் பரிசு ரூ. 250-00
அதிகப்படியான விடைகள் அனுப்புபவருக்கு 1 பரிசு ரூ. 150-00
முடிவு திகதி 12-1-55 பி. ப. 5 மணி
சரியான விடை 16-1-55ல் பிரசுரிக்கப்படும்
பரிசு பெற்றோர் விவரம் 30-1-55 ல் பிரசுரிக்கப்படும்
பரிசு பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை 5-2-55ல் செக் மூலம் அனுப்பப்படும்

இடமிருந்து வலம்

1. தமிழ் உழவர்களின் தனிப் பெரும் பண்டிகை.
3. எழுதுகோல்.
5. சேனை.
6. நவக்கிரகங்களிலொன்று.
7. இது ஏற்படாமல் குழந்தை நடை பழக முடியுமா?
8. தை முடிந்தால் இது பிறக்கும்.
11. கள்ளங் கபடம் அற்றவர்களுடைய அகத்தில் இது ஏற்பட்டால் உடனே அவர்கள முகத்தில் தெரியும்.
13. இதைக்கொண்டுகுழம்பு சமைத்தால் வாசனை மூக்கைப் பிடுங்காமல் இருக்குமா?
15. இடுக்கண் வருங்கால் இது செய்ய வேண்டும் என்கிறார் வள்ளுவர்.
18. மலர் குலுங்கும் சோலை.
20. இராமன் கதையைத் தமிழில் பாடிய மகாகவி.

மேலிருந்து கீழ்

1. இது உள்ளவர்கள் யாவராலும் போற்றப்படுவர்.
2. கயவர்களின் ஏமாற்று வார்த்தையில் இது உடைய பெண் மயங்க மாட்டாள்.
4. இது உள்ளவர்களுக்கு முதன் முதல் வியாபாரம் செய்தால் பலன் அதிகம் கிடைக்கும் என்று சிலர் நம்புகிறார்கள்.
5. இதை அனுசரித்து ஆடக்கூடியவர்கள்தான் பரத நாட்டியத்தில் புகழ் பெறுவார்கள்.
9. இது பிடித்தவர்கள் தலை வீங்கிகளாகவே இருப்பார்கள்.
10. உயரமான மாடிகளில் ஏறுவதற்கு திருடர்கள் இதைப் பயன்படுத்திக் கொள்வதுண்டு.
12. இதனாலும் அழிவு ஏற்படலாம்.
13. எந்தக் காரியத்திலும் இது உடையவர்கள் வெற்றி பெற முடியாது.
14. இது இல்லாமல் கமம் செய்ய முடியுமா?
15. நமக்கு..... செய்தவர்களை ஒருபோதும் மறத்தல் கூடாது.
16. பழங்காலத்து நாவலாசிரியர்கள் தங்கள் கதாநாயகியை இதனால் செய்த விக்கிரகம்போல என்று வர்ணிப்பதுண்டு.
17. இது இல்லாவிட்டால் அவள் என்ன பெண்?
18. மனிதர்.
19. தேகத்திலுள்ள உறுப்புகளில் ஒன்று.

போட்டியின் விதிகளை 21-11-54 சுதந்திரனில் பார்க்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுப் பாருங்கள்

குயுக்தி

எம். சுந்தரநேசன் பண்ணகம்

கே: நான் காதலித்துத் தான் கலியாணம் செய்து கொண்டேன். என் கையில் பணம் இருக்கும் வரை பாலும் தேனுமாயிருந்த என் காதலி இப்போது படங் கொண்ட நாக பாம்பைப் போல் என்மீது சீறி விழுகிருள். நான் இப்போது வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்கியிருப்பதுதான் காரணமாயிருக்குமோ?

ப: இந்த அற்புத மாறுதலுக்கு காரணம் காண மண்டையுடைக்க வேண்டியதில்லை. ''வறுமை கதவினுல் நுழைந்தால் காதல் ஜன்னலால் பறக்கிறது'' என்ற சீனப் பழமொழி இருக்கவே இருக்கிறது.

ஃ

பெ. பிச்சாண்டி, மன்னர்

கே: மனித வாழ்வுக்கு கடவுள் அவசியமா?

ப: எந்த மனிதருடைய வாழ்வுக்கு? கடவுளைக் காட்டி ஏமாற்றும் புரோகிதத் தொழில் புரியும் மனித வாழ்விற்கு கடவுள் மிக மிக அவசியம். அவர் இல்லாவிட்டால்தான் பிழைப்பே இல்லையே.

ஆர். பரஞ்சோதி, தெல்லிப்பழை

கே: உலகில் பெரியவன் யார்?

ப: யாருக்கு பணநாதன் கிருபை இருக்குதோ அவனே பெரியவனும்.

கே: உலகில் சிறந்த அழகன் யார், அழகி யார்?

ப: ஏன், கண்ணுடியில் பார்க்கும்போது தாங்களே சிறந்த அழகுபடைத்தவர்களாக ஒவ்வொருவரும் எண்ணிக்கொள்ளுகிறார்கள்.

கோ. தண்டபாணி, வல்வெட்டித்துறை

கே: சேனட்டராவதற்கு வேண்டிய தகுதிகள் யாவை?

ப: பெண்களைப் போல் வேண்டும்போதெல்லாம் கண்ணீர் சிந்த தெரிந்து கொள்ள வேண்டும். மஹியங்கனையில் இரண்டு சென்ட்டர்கள் கண்ணீர்விட்ட சரித்திர சம்பவமும், திருக்கேதீஸ்வரத்தில் ஒரு சென்ட்டர் கண்கலங்கிய சம்பவமும் இதற்கு அத்தாட்சிகள்.

ஃ

எம். கே. மூர்த்தி, கழுதாவளை

கே: சேர் ஜோனின் பூப் பிரதட்சணம் எதைக் காட்டுகிறது?

ப: பூமி உருண்டை என்பதைத் தவிர வேறொன்றையும் காட்டவில்லை.

ஃ

செல்வி எம். கிருஷ்ணவேணி, பதுளை

கே: தேவியின் அருள் யாருக்கு கிடைக்கும்?

ப: தேவியின் கடைக்கண் அசைப்பிற்கு கீழ்ப்படிந்து நடக்கும் கணவனுக்கு.

ஃ

மு. முருகேசு, கொட்டாஞ்சேனை

கே: பறக்கும் தட்டைத் தாங்கள் கண்டதுண்டா?

ப: பலதடவை கண்டிருக்கிறேன். சிலதடவைகளில் தட்டுக்கள் என்மீது மோதிக் கொண்டதுமுண்டு. ஸ்ரீமதி குயுக்தியாருக்கு ஆவேசம் ஏற்பட்டுவிட்டால் சாப்பாட்டு மேசையில் இருக்கும் தட்டுக்கள்அடுப்பங்கரைக்கு பறந்துதான் செல்லும்.

ஃ

ந. சுந்தரபாண்டியன், கொள்ளுப்பிட்டி

கே: கொழும்பில் உள்ள ஒரு தினசரி 'கல்கி' ஆசிரியரின் பிரிவுபற்றி ஒரு கட்டுரைதானும் பிரசுரிக்க மறுத்துவிட்டது. ஆனல் ஒரு ஆபாஸ எழுத்தாளரின் அபத்த நூல்களைப் பக்கம் பக்கமாக விமர்சனம் செய்கிறது. இது ஏன்?

ப: கற்றுரைக் கற்றூரே காமுறுவர், கற்பிலா மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்—முதுகாட்டில் காக்கை உகக்கும் பிணம்.

ஃ

க. கனகசுந்தரம், ஏருவூர்

கே: கழுதைக்கும் உமக்கும் என்ன வித்தியாசம்?

ப: உமக்கும் எனக்கும் உள்ள வித்தியாசந்தான். ஆனல் ஏருவூரில் உள்ள உமக்கு இது எங்கே ஏறப் போகிறது?

ஃ

ஞா. புவனேஸ்வரி, கச்சாய்

கே: சிந்திக்க தெரிந்தவன் மனிதன், சிந்திக்கத் தெரியாதது மிருகம். சிந்திக்க மறுப்பவன்.....?

ப: பக்தன்!

பூ. ராசமாணிக்கம், திரிகோணமலை

கே: கவலைக்கு மருந்தென்ன?

ப: மறதி

கே: உலகில் மிகப் பெரிய பொய்யன் யார்?

ப: மிகப் பெரிய கதாசிரியன்.

ஃ

பி. கார்த்திகேசு, வட்டுக்கோட்டை

கே; ஒரு மிருகக் காட்சிசாலையில் அவசியம் காட்சிப் பொருளாக வைக்க வேண்டிய ஐந்து எது?

ப: மனித ரூபத்தில் பிறந்தும் மிருக குணத்தோடு வாழும் இரண்டு கால் மானிடன்

ஃ

கே. கே. தியாகராசன் மட்டக்களப்பு

கே: ஏதாவது ஒரு சாபம் இடும்படி கடவுள் தங்களுக்கு ஒரு வரம் கொடுத்தால் தாங்கள் என்ன செய்வீர்கள்?

ப: ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர்களை அவமதிக்கும் சமூகமும் அரசாங்கமும் அடியோடு ஒழிக என்று சாபமிடுவேன்

ஃ

ஜி. பரமநாயகம், அனுராதபுரம்

கே: இந்த உலகிலே ஏழை எப்போது இன்பமடைகிறான்?

ப: மரணத்தின்போது

கே: ஆண்டவன் உகக்கும் பூஜை எது?

ப: மகேஸ்வர பூஜை (ஏழைகளுக்கு அன்னமிடல்)

கே: நீர் விரும்பும் மதம் எது?

ப: சுதந்திரன் ஆசிரியரின் சம்மதம்

ஃ

கி. பாக்கியம், அக்கரைப்பற்று

கே: ஒரு குடும்பஸ்தன் எதை அடைவதற்கு ஆவலுறுகிறான்?

ப: இழந்த சுதந்திரத்தை. ஓமகுண்டத்தின் முன்பு உட்கார்ந்த அன்றே அவன் சுதந்திரத்தை இழந்துவிடுகிறான் அல்லவா?

★ கே: ஆண்டவன் எங்கும் நிறைந்தவன் என்பதைத் தாங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா?

ப: இல்லை. அவன் நிறைய வேண்டிய இடம் இன்னும் பாக்கியிருக்கிறது. ஏழைகளின் வயிற்றிலும் அவன் நிறைய வேண்டாமா?

★ இவ்வாரம் ரூபா 3-00 பரிசு பெற்றவர்

பரிசு ரூபா 3

யாரும் கேள்விகள் அனுப்பலாம் ஆனல் கேள்விகள் போஸ்ட்கார்ட்டில் மட்டுமே எழுதப்படவேண்டும். தகுந்த கேள்விகளுக்கு நிச்சயம் பதில் கிடைக்கும். ஒவ்வொரு வாரமும் கஞ்சத்தும் ஹாஸ்யமான பதில் கிடைக்கக் கூடிய சிறந்த கேள்வியை அனுப்புபவர்களுக்கு ரூ. 3-00 பரிசு வழங்கப்படும்.

தினமணி

(தமிழ்நாட்டின் பிரபல தினப் பத்திரிகை)

சென்னையில் பிரசுரமான அன்றே கொழும்புக்கு விமான மூலம் வருகிறது.

உலகச் செய்திகளையும், இந்தியச் செய்திகளையும் விரிவாகவும், தெளிவாகவும் உடனுக்குடனும் அறிய வேண்டுமானல் தவருமல் ''தினமணி''யை வாசியுங்கள்.

தனிப் பிரதி	சதம் 10
1 மாதச் சந்தா (வெளியூர்)	ரூ. 4-50
1 மாதச் சந்தா (உள்ளூர்)	ரூ. 3-25

தினமணி கதிர்

(வாரப் பத்திரிகை)

ஆணித்தரமான 'தலையங்கங்கள்', சுவாரஸ்யமான 'கதைகள்', அறிவுக்கு விருந்தளிக்கும் 'கட்டுரைகள்', தெளிவான 'வாரக் குறிப்புகள்', ஹாஸ்யரசமான 'வராத செய்திகள்', 'செய்திப் படங்கள்', உள்ளத்தைத் தொடும் 'தொடர் கதைகள்', ரம்மியமான 'சினிமா' உலகச் செய்திகள் படங்களுடன், வயிறு குலுங்க வைக்கும் 'கார்ட்டூன்கள்' சுலபமாகவும், விரைவாகவும் தமிழ் மூலம் ஆங்கிலம் கற்க 'ஆங்கிலப் பாடம்', குழந்தைகளுக்கான வேடிக்கைக் 'கதைகள்' ஒவ்வொரு வாரமும் உங்களின் நக்ஷத்திரப் பலன்கள் தெளிவாகவும், சரியாகவும் வெளிவருகிறது 'வார பலனில்', செய்திக் கதம்பம், கோர்ட்டுச் செய்திகள், 'இந்திய மொழி ஸ்கொயர் வேர்டு' சம்பந்தமான பூரா விபரங்கள் மற்றும் அநேகம் அடங்கியது.

★

யோகி சுத்தானந்த பாரதி அவர்கள் தமது ''ஜப்பான் அநுபவத்தை'' எழுதுகிறார்; எல்லோரும் வாசித்து இன்புற்று அறியவேண்டிய விசேஷக் கட்டுரை.

★

உங்கள் அபிமான எழுத்தாளர் ''கோமு''வின் சரளமான தமிழ் நடையும், கை கொடுத்து அழகுபடுத்தும் சுவாரஸ்யமான புதிய இனிய தொடர் நாவல் ''கல்யாண கிராமம்'' 5—12—54 இதழில் ஆரம்பமாகிவிட்டது.

★

நமது பழம்பெரும் புராண இதிகாசக் கதைகளில் நவநவமான அழகுகளை சுவைமிக்க விதத்தில் ஸாஹித்திய வல்லப ஸ்ரீ டி. சுந்தராச்சாரியார் தொகுத்து தொடராக ''இதிகாசச் சோலை'' என 5—12—54 இதழ் முதல் எழுதுகிறார்.

குடும்பத்திலுள்ள அனைவரும் வாசித்து மகிழவேண்டிய பத்திரிகை.

120 பக்கங்கள் விலை சதம் 20 தான்

வருடச் சந்தா ரூ. 10-50

சோல் ஏஜண்டுகள்:

நவலட்சுமி புத்தகசாலை,

136, செட்டியார் தெரு, கொழும்பு.

50 சத சுவீப்

நேரில் பெற்றுக்கொள்ள வசதியற்றவர்கள் தபால் மூலம் பெற விரும்புவோர் தேவையான டிக்கட்டின் தொகைக்கு போஸ்ட் ஆடரும் தபால் செலவுக்கு 10 சத முத்திரையும் வைத்து அனுப்பவும்.

எமது சுவீப் வெற்றிகள்

18-12-54ல் நம்பர் 24 W 0732க்கு கிடைத்த இரண்டாவது பரிசு ரூ. 38479.

ரூ. 2-00 காலி ஜிம்கானா டிக்கட்டும் எங்களிடம் பதிவு செய்துகொள்ளலாம்.

தேவகி ஸ்டோர்ஸ்,

புத்தக வியாபாரம்

154, செக்கடித் தெரு, கொழும்பு-13.

வேல் தைலம்

இது ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய சமய சஞ்சீவி. தலைவலி, ஜலதோஷம், வாதம், வாய்வு, பிடிப்பு, வீக்கம், ரத்தக் கட்டு, சுளுக்கு முதலிய வியாதிகளை ஆச்சரியமாய்க் குணமாக்கும்.

உபயோக விபரம் மருந்துடன் இருக்கிறது.

புட்டி 1-க்கு ரூ. 1-25 தபால் செலவு வேறு.

இலங்கை ஏஜண்டுகள்:

எம். ஏ ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,

34, செட்டியார் தெரு, கொழும்பு-11.

அழகான புத்தக வேலைகள்

கதை - கட்டுரை நூல்கள், பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்கள், சஞ்சிகைகள் அச்சிட விரும்புவோருக்கு அரிய சந்தர்ப்பம்.

சுதந்திரன் ரைப் பவுண்டரியில் தயார் செய்யப்பட்ட அழகான புதிய 10 பொயிண்ட் 12 பொயிண்ட் எழுத்துக்களைக் கொண்டு புத்தகங்கள் அச்சிட விரும்புவோர் சுதந்திரன் ஜொப் டிபார்ட்மெண்டைக் கலந்தாலோசிக்கவும். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு பாஷைகளிலும் புத்தக வேலைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

குறைந்த கட்டணத்தில், சிறந்த வேலைப்பாடுகளுடன், குறிப்பிட்ட நேரத்தில் உங்கள் புத்தகங்களை அச்சேற்றித்தரவல்ல அச்சகம் சுதந்திரன் பிரஸ் ஒன்றுதான்.

இன்றே உங்கள் தேவைகளுக்கு எழுதுங்கள்.

194 A, தட்டா தெரு, கொழும்பு-12.

மானேஜர், சுதந்திரன் பிரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நவீனம்:

28. வாழ்வு புளித்தது

"நாளை" வரும் என்று எண்ணிக் கொண்டிருந்த எனக்குக் குமாரசாமி குறிப்பிட்ட நாளையும் வந்தது. என்னைக் கண்டதும் குமாரசாமி பேசத் தொடங்கினர்.

"மன்னிக்கவேண்டும். நான் கணக்குச் செய்ய இன்றைக்கும் தவறிவிட்டேன்.

"என்னால் மன்னிக்க முடியாது. தண்டனைதான் தருவேன்"

"அதற்கெல்லாம் நான் பயப்படமாட்டேன்"

"உண்மையாகவோ?"

"உண்மையாகத்தான்!"

"நீங்கள் பயப்பட வேண்டியவர்களுக்குத்தானே பயப்பட வேண்டும். எனக்கு ஏன் பயப்படுவான்?"

"இல்லை, இல்லை. அன்பு முதலிலே தோன்றிப் பின்பு பயம் தோன்றினால் நல்லது. பயம் முதலிலே தோன்றினால் அன்பு தோன்றுமல்விட்டாலும் விடும்"

"இப்படியாகப் பெரிய உளநூல் உண்மையை எடுத்துக் கூற எனக்குத் தெரியாது"

"ஆண்கள் உளநூலைப் படிப்பவர்கள். அது ஏட்டுச் சுரைக்காயைப்போல இருந்தாலும் இருக்கும். ஆனால் சில அலுவல்களில் பெண்கள் உளநூலைப் படிக்க வேண்டிய தேவை இராது. அவர்களுக்கு இயற்கையாகவே அதுவரும்"

"எந்த அலுவலில்?"

"நான் சொல்ல மாட்டேன், இருந்தறியுங்கள்"

"சரி இருந்தறிவேன்"

இதனை நான் சொல்லும் போது எனக்குப் பின்னால் காலடி ஓசை கேட்டது. பேராசிரியர் நாதன் கண்களை அகல விரித்து முகத்தைச் சுருக்கிக் கண் புருவத்தை நெறித்தார். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. குமாரசாமியின் நிலையைச் சொல்லத் தேவையில்லை. பயத்தினால் அவருடைய உடலே உருகும் போல இருந்தது. இந்த நிலையில் இருந்து தப்புவதற்காக நானே பேச்சைக் கொடுத்தேன்.

"நீங்கள் வீட்டுக்குப் போவதானால் என்னையும் மோட்டார் வண்டியில் ஏற்றிச் செல்லுங்கள்" என நாதனிடம் சொன்னேன்.

"நான் போகின்றேன் வருவதாக இருந்தால் வரலாம்" என்றார் நாதன்.

"ஓம்" என நான் சொன்னேன்.

நான் அந்த இடத்தைவிட்டுப் போகும்போது குமாரசாமி என்னை ஏக்கத்துடன் பார்த்தார். நாளைக்கு இதே இடத்தில் வாருங்கள் என்பதைக் குறிப்பதற்குக் கையைக் காட்டிவிட்டு நான் போனேன். மோட்டார் வண்டியில் முன் இருக்கையில் நாதன் இருந்தார். பின்னிருக்கையில் நான் இருந்தேன். மோட்டார் ஓட்டியும் தன் தொழிலில் ஈடுபட்டான். சீதையை வண்ணன் சொல்லைக் கேட்ட தமையனின் கட்டளைப்படி காட்டில் விடுவதற்கு இட்டுச் சென்ற இளையபெருமாள் தேரிலே ஒன்றும் பேசாமல் முகத்தை இரும்புபோல வைத்திருந்தார் என நான் எங்கோ படித்திருந்தேன். நாதனும் அப்படித்தான் இருந்தார்; ஆனால் அவர் என்னை எந்தக் காட்டிற்கு அழைத்துச் செல்லப் போகின்றார்? இருவரும் வீட்டிலே இறங்கும்போதும் சரியாகப் பத்துமணி. சடார் என்று என்னுடைய அறைக்கு நான் போனேன். நாதனும் தன்னுடைய அறைக்குப் போனார். உடுப்பை மாற்றியதும் படுக்கையில் இருந்தேன். நாதன் இன்று என்னை இப்படி ஏன் பார்த்தார்? குமாரசாமி அதற்கு ஏன் வெருண்டார்? குருவும் மாணாக்கனும் என்ற பயம் இருந்திருக்கலாம். நாதன் இதைப்பற்றி என்னிடம் கேட்டால் நான் என்ன சொல்லலாம். அவர் ஏன் கேட்கப் போகின்றார்? இரண்டு மணிபோல் நாதன் என்னுடைய அறைக்கு முன்னால் வந்தார். "என்னுடைய அறைக்கு வாருங்கள். வேலை இருக்கின்றது," என்று சொல்லிவிட்டுப் போனார். அவருடைய குரலில் எவ்வித மனமாற்றமும் இல்லாதபடியால் வழக்கம் போல நான் எழுந்து போனேன். நான் அந்த அறைக்குள்ளே போக முன்னர் கண்களில் இருந்து நெருப்புக் கக்கும்படி நாதன் பார்த்தார். நான் அந்தப் பார்வையில் பயந்தேன். நாதன் பேசினார்; நாதன் ஏசினர். தலையை நான் தொங்கவிட்டேன். "பல்கலைக் கழகத்திற்கு வரும் போது நான்.....நான் சொன்னவை நினைவிலிருக்கின்றனவோ? — ஏன் மறுமொழி இல்லை— சொல்லு, சொல்லேன், சொல்ல மாட்டாயா, வாயிலே என்ன முட்டையோ—அழுது வெருட்டலாமென்ற யோசனை. உந்த நீலிக் கண்ணீருக்கு நான் பயப்படப் போவதில்லை. நான் உண்டு எனது வறுமையை உண்டு என் இருக்கத் தெரியாது. படிக்கத்தானே வந்தது நீ? வாயை மூடு. அழாதே! தரித்திரம் பிடிக்கும். நல்லாக முன்னுக்குவர வேண்டுமென்ற எண்ணம் இருந்தாலல்லவோ? செத்தையிற் பல்லியை மெத்தையிற் பிடித்து வைத்தாலும் அது செத்தைக்குத்தான் போகும். விதி அப்படி இருக்கும்போது நாம் என்ன செய்யலாம். வயது வந்த ஒரு பெண் நீ. நான் சொல்வதை விளங்க வேண்டும். கருத்தை உணர்ந்து நடக்கவேண்டும். அது தெரியாவிட்டால் பெண் என்று பிறந்ததில் என்ன பயன்? நான் எதைக் குறித்துச் சொல்கின்றேன் என்று தெரிகின்றதோ? இந்த அலுவலில் ஒரு வேட்டை நாயைப் பார், அது ஒரு முயலைக்கலைக்கும்போது வேறு எதையும் பற்றிக் கவனிக்குமோ? அது போலத்தான் நீயும் இருக்க வேண்டும். சரி போ" மரக்குத்தி ஒன்று எப்படி உயிர் பெற்று நடக்கின்றதோ அதுபோல நான் நடந்து சென்றேன். நாதன் ஏசியதும் பேசியதும் அச்சுப் போல என் உள்ளத்தில் படிந்தன. நான் செய்தது சரியோ பிழையோ என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் 'யாரொடு நோவேன் யார்க்கெடுத்துரைப்பேன்' என்பதாகிவிட்டது என் நிலை; அம்மாவிடம் சொல்ல முடியாது. சொன்னால் அவர் பெருஞ் சினம்கொண்டு என்னுடைய படிப்பையும் நிறுத்திவிடுவார். அறியாமல் தாடியை வளர்த்து அம்பட்டன் கையிற் கொடுத்தது போல என்னுடைய காதலைக் குமாரசாமியிடம் வளரச் செய்து நாதனிடம் கொடுத்துவிட்டேன். எங்களுடைய வீட்டிற்கு வருகின்ற ஒரு சாமியார் நித்திரைக்குப் போகும்போது "பூலோக வாழ்வு புளிக்குதப்பா இராமா.....இராமச்சந்திரா..... உலக வாழ்வு உழுத்துவிட்டது. கருணையே கருணிதி" என்று பெருமூச் செறிந்து கொண்டு செல்வார். அதனை அப்பொழுது கேட்கும்போது எனக்குப் புன்னகை வருவதுண்டு. அவர் சொல்வதின் கருத்து எனக்கு இப்பொழுது விளங்கியது. ஆனால் அந்தச் சொற்களில் உள்ள ஏக்கத்தை என்னால் உணர்ந்துகொள்ள அப்போது முடியவில்லை. இப்போது என்னால்....? நாதன் என்னை ஏன் இப்படியாக ஏசினர்? என்மேல் ஏதாவது அன்பு கொண்டிருக்கின்றாரோ? என்னை மணம் செய்யும் நோக்கம் அவருக்கு இருக்கின்றதோ? குமாரசாமி எனக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைவன் அல்லன் என்பது நாதனின் எண்ணமோ? இப்படியாகப் பல கேள்விகள் என் உளத்திலே தோன்றி பெரும் புயலை ஒன்றை எழுப்பின. இந்தக் கேள்விகள் ஏதாவது ஒன்றிற்கு மறுமொழியை நான் கண்டு பிடித்தால்..... என் உள்ளம் அமைதி அடையுமோ.....? "எது வந்தாலும் வரட்டும் அம்மா சொன்னாலும் சரி வற்புறுத்தினாலும் சரி என்னுடைய உயிர் உடலில் இருக்கும் வரையும் நான் - அதாவது பவானி செல்லையா - ஒரு போதும் இப்பிறப்பில் நாதனை மணம் செய்யமாட்டேன்" என்று என் உள்ளத்தில் உறுதி செய்தேன். வாழ்விலே சொல்ல முடியாத தொல்லையும் துன்பமும் ஏற்பட்டாலும் நாதனுக்கு நான் வாழ்க்கைப்படப் போவதில்லை. எந்த முடிவையும் காண முடியாத என் உள்ளம் தத்தளித்தது. சிறப்பான சோதனை இறுதி வகுப்பு மாணவர்களுக்கும் எங்களுக்கும் சேர்த்து ஒரு வகுப்பு நடக்கும் என்ற அறிவித்தல் ஒன்று மாணவர்களாகிய எங்களுக்குப் பேராசிரியர் நாதனிடம் இருந்து வந்தது. அந்த வகுப்பிலே குமாரசாமியைக் காணலாம்-கண்களித்திடக் காணலாம் - என்பதையிட்டு நான் மகிழ்ந்தேன். ஆனால் பேராசிரியர் நாதனே வகுப்பிற்கு வந்தார். மற்றைய வகுப்பு மாணவர்களுக்கு அந்த வகுப்பு சிறப்பாக எதையும் குறிப்பிடவில்லை. நாதனுக்கும், குமாரசாமிக்கும், எனக்கும் அந்த வகுப்பு எங்கள் மூவரும் ஒருவரை ஒருவர் வேவு பார்ப்பதற்கு ஏற்ற இடம் என நான் எண்ணினேன். முதலாவது நாளன்றே குமாரசாமியிடம்நாதன் நடந்து கொண்டவிதம் எனக்குப் பிடிக்கவில்லை. ஏதோ ஒரு கேள்வியை நாதன் கேட்டார். குமாரசாமி சரியாக மறுமொழி சொல்லவில்லை. உடனே நாதன் ஏசத் தொடங்கினர். பாடத்திற்காக ஏசவில்லை. வேறு ஏது காரணத்திற்காகத்தான் நாதன் ஏசுகின்றார் என்று என்னுடைய உள்ளத்தில் 'படக்' கென்று பட்டது. அந்தக் காரணத்தை நான் பல தூரம் தேடி அலைய வேண்டியதில்லை. என்னைக் குமாரசாமி விரும்புகின்றார். குமாரசாமியை நான் விரும்புகின்றேன். நாதனும் என்னை உள்ளூர விரும்பலாம். அதனை அவர் வெளியாகக் காட்டவில்லை. அதனால் வெறுப்படைந்த நான் குமாரசாமியை விரும்பத் தொடங்கினேன். இதனை யறிந்த நாதன் தன் அன்பிற்கு இலக்காகியவள் பிறனொருவனை விரும்பக் கண்டு அவனையும் அவளையும்எரித்து விடுபவர்போல இருக்கின்றார். இந்தக் காரணத்தினாலேதான் நாதன் என்னையும் அன்று ஏசினர். இன்று குமாரசாமியையும் ஏசுகின்றார். இப்படியாகக் குமாரசாமியை நாதன் ஏசியது ஒரு நாளல்ல; இரு நாளல்ல; பல நாட்கள். எனக்கு அதனைப் பார்க்கப் பார்க்க உள்ளம் பொறுக்க முடியவில்லை; மருந்து கசப்பாயிருந்தாலும் உடலுக்கு நன்மை செய்யும் என்பதற்காக நோயாளி அதனைக் குடிக்கின்றார். குமாரசாமியும் அப்படியே; ஏச்சுக் கசப்பாக இருந்தாலும் தன்னுடைய அறிவு வளர்ச்சிக்கு அது இன்றியமையாதது எனக் கருதினர். தன்னை நாதன் ஏன் அப்படியாக ஏசுகின்றார் என்பது குமாரசாமிக்கு விளங்கவில்லை. எனக்குச் சரியான காரணம் தெரியும். அதனை நான் எப்படிக் குமாரசாமிக்குச் சொல்வேன்? இரண்டாம் முறையாக ஏமாற்றம் அடைய நான் விரும்பவில்லை. குறுகிய காலத்தில் இரண்டாவது படுதோல்வியை நான் எப்படித் தாங்குவேன்.

அதிக லாபம் அடைவதற்கு

1955 வருட கலண்டர்

துணைபுரிகிறது!

தங்களின் வியாபார வாடிக்கைக்காரர்களின் மனதைக் கவரக்கூடிய நிலையில்-அபூர்வமான சினிகள், சினிமாலேடிகள், தேசதலைவர்கள், பேபி படங்கள், சுவாமி, புத்த, கிறிஸ்துவ, முஸ்லிம் படங்களும் பெரும் அளவில் இறக்குமதி செய்திருக்கிறோம்.

தங்களின் வியாபார வாடிக்கைக்காரர்கள் அதிகரிப்பதற்கு 1955ம் வருட கலண்டர்களை பூமகளில் பதிவுசெய்து அதிக லாபம் அடையும்படி வேண்டுகிறோம்.

பூமகள்ஸ்,

(கலண்டர் கிங்)

I.T. M. No. 13333.

111, செட்டியார் தெரு, கொழும்பு.

மயில் மார்க் மனிதர் மூடிகளும் கொண்டைகளும் உத்தரவாதமுள்ளது.

(2)

வெஞ்சாமரைக்குரிய வெள்ளைக் கவரிமான் மூடிகளும், நாடகத்திற்குரிய டோப்பா, தாடி மீசைகளும் கிடைக்கும். பூமகள்ஸ்.

எமது ஏஜண்டுகள்:-

A. R. H. M. சாலி, காலி
கண்டி டீ ஸ்டோர்ஸ், கண்டி
சரஸ்வதி ஸ்டோர்ஸ், வியாங்கொடை
M. M. மன்சூர், கேகாலை
சித்ரா ஸ்டோர்ஸ், கண்டி
பென்ஸி ஹவுஸ், அம்பலாங்கொடை

கடிகாரம் இனம்! இனம்!!

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 9—10.

மேற்குறிப்பிட்ட சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி ஒவ்வொன்றிற்கும் ஒரே கவரில் 150க்கு குறையாத கூப்பன்கள் அனுப்புபவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு அழகான மேசை அலாரம் கடிகாரம் இனமாகக் கொடுக்கப்படும்.

மானேஜர்
சுதந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சுவர்க்கத்தில்' பாரதி-இக்பால்-கார்க்கி சந்திப்பு

அல்லாமாவும்-அமரகவியும் அலறுகிறார்கள்

சொர்க்கம். அது கற்பனை. வெறும் 'ஆத்மீகக்' கற்பனை. இந்தகற்பனைப்பாணியிலேஉலகத்தின் ஒப்பற்ற முற்போக்கு எழுத்தாளர் மூவர் சொர்க்கத்தில் சந்திப்பதாக அமைந்தது, இந்த ஒற்றையங்க நாடகம். இந்த மூன்று எழுத்தாளர்களும் வெவ்வேறு தேசங்களிலே தோன்றி யிருந்தபோதிலும், வெவ்வேறு கலையையும் கலாச்சாரத்தையும் கொண்டிருந்தபோதிலும், வெவ்வேறு மொழிகளில் தங்கள் உள்ளக்கிடக்கைகளை வெளியிட்டிருந்தபோதிலும் இந்த மூன்று மனிதப் புனிதர்களின் இலட்சியம் மட்டும் ஒன்றே ஒன்றுகத்தானிருந்தது!—ஆம், 'வர்க்கபேதமற்ற ஒரு லட்சிய சமுதாயம் தோன்ற வேண்டும். வாழப் பிறந்த மனிதன் வாழ்ந்தே ஆக வேண்டும்' என்பது இவர்களின் இலட்சிய கீதம்.

இந்தியாவில் எட்டயபுரத்தில் தோன்றிய அமரகவி பாரதி, பாகிஸ்தானில் சியால்கோர்ட் டில் உதித்த மகாகவி இக்பால், ரஷ்யாவில் நிஜினி நோவோ கிரேட் என்ற நகரத்தில் பிறந்த மக்கள் இலக்கியத்தின் பிதா மாக்ஸிம் கார்க்கி ஆகிய மூவரும்தான் இந்த அமர எழுத்தாளர்கள்.

(பாரதியார் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருக்கிறார். 'பொழுது புலர்ந்தது' என்ற பாடல் பூமாளராகத்தில்தம்பூரா சுருதியுடன் இழைந்து அந்தஇடமெல்லாம்அலைஅலையாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. இக்பால் வருகிறார்).

இக்பால்.— ஜிந்தாபாத்! ஜிந்தாபாத்! ஹிந்துஸ்தான் ஜிந்தாபாத்! பாரதிஜீ ஜிந்தாபாத்!

பாரதி:— பல்லாண்டு வாழ்க! பல்லாண்டு வாழ்க! (இருவரும் மார்புறத் தழுவிக் கொள்கின்றனர்) கவிகள் திலகத்தின் வரவு நல்வரவாகட்டும்!

(இச்சமயம் இன்னொரு குரல் கேட்டு இருவரும் திரும்புகிறார்கள்).

கார்க்கி:— நினைத்தேன் அல்லாமா இக்பால் சொல்லாமல் மறைவதென்றால் அது அமரகவியைத் தேடித்தான் என்று நினைத்தது சரிதான்.

பாரதி:— வாழ்க!

இக்பால்:— ஜிந்தாபாத்!

கார்க்கி:— தவாரிஸ்! மீறுமீர்! (உலகுக்கும் உங்களுக்கும் சாந்தி) அமரகவி பாரதி பிறந்த தினத்தில் தமிழ் நாடெங்கும்-இல்லை, இல்லை; தமிழர்கள் உலகில் எங்கெங்கு இருக்கிறார்களோ அங்கெல்லாம் ஒரே அமர்க்களமாயிருந்ததே!

இக்பால்— நான் கூடப் பார்த்தேன். சென்னைக் கடற்கரையிலே அந்த ஜலக் கடலுடன் ஒரு ஜனக் கடல் போட்டிபோட்டுக்கொண்டு 'பாரதிக்கு ஜே!' என்று முழங்கிக் கொண்டிருந்தது!

கார்க்கி:— பச்சை, சிவப்பு, இருவர்ண, மூவர்ணக் கொடிகள் எல்லாம் பறந்தனவே!

இக்பால்:— தோரணங்கள் என்ன! உருவச்சிலைகள். படங்கள் என்ன! கதை, கட்டுரை, பாடல், பேச்சுப் போட்டிகள் என்ன!.....

கார்க்கி— அன்றுடங்காய்ச்சிகள், அரசாங்க ஊழியர்கள், மாற்றுக் காட்சியினர், மந்திரிமார்கள்.....எல்லோரும் 'நான், நீ' என்று போட்டி போட்டுக்கொண்டு கொண்டாடினார்களே!

இக்பால்:— ஏன், பாரதி, எங்கள் பேச்சைக் கேட்டு உங்கள் முகம் ஏன் அப்படி வாடிவிட்டது? இதெல்லாம் கூடாதா?

பாரதி:— ஆம். கூடாதுதான். நடிப்பு கூடாதுதான். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுகின்றதே ஓர் ஒப்பற்ற சமுதாயம் என்று நினைக்கும்பொழுது என் நெஞ்சம் வெடிக்கத்தான் செய்கிறது.

இக்பால்:
கார்க்கி:
பாரதி: } என்ன! .....

நெஞ்சிலுரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடி-கிளியே
-வாய்ச்சொல்வில் வீரரடி.
கூட்டத்திற் கூடிநின்று கூவிப் பிதற்றலன்றி
நாட்டத்திற் கொள்ளாரடி-கிளியே-நாளில் மறப்பாரடி

கார்க்கி:- அப்படியானால் பேசுகிறபடி நடக்கமாட்டார்கள் என்று சொல்கிறீர்களா?

பாரதி:-

தாயைக் கொல்லும் பஞ்சத்தைத் தடுக்க முயற்சியுறார்
வாயைத்திறந்து கிளியே-வந்தேமாதர மென்பார்

இக்பால்:- இவர்கள் இத்தனைபேரும் வேஷதாரிகள் என்று சொல்கிறீர்கள்?

பாரதி:- அப்படிச்சொல்ல மாட்டேன். நான் கனவு கண்ட லட்சிய சமுதாயத்தைத் தோற்றுவிப்பதற்காக தங்கள் உதிரம் சிந்திப் போராடும் ஒரு சில கோடிப்பேர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.....ஆனாலும் பெரும்பான்மை மக்களை நினைத்தால் நான் கண்ணீர் வடிக்கிறேன். ஆட்சியாளரைப் பார்த்தால் என் இதயம் ஆத்திரத்தில் துடிக்கிறது.

இக்பால்:— என்னதோ ழரே...,.....

கார்க்கி:— (ஆச்சரியத்துடன்) தோழரா!.....!....!

இக்பால்:— ஏன் இப்படி ஆச்சரியப்படுகிறீர்கள்? தோழர் என்ற பதம் முஸ்லிம்களுக்குப் புதிய சரக்கல்ல. நபிகள் பெருமான்

எம். ஏ. அப்பாஸ்

தன்னைப் பின்பற்றியவர்களை சீடர்கள் என்றோ, பக்தர்கள் என்றோ விழிக்கவில்லை. ஸஹாபாக்கள்- தோழர்கள் என்றே வாத்ஸல்யத்துடன் அழைத்தார்கள். ஆகவே முஸ்லிம்கள் ஒருவரையொருவர் தோழர் என்று அழைப்பதை விடச்சிறந்த பதம் என்ன செப்பமுடியும்?

பாரதி:- நானும் இது தெரிய மகிழ்ச்சியுறுகிறேன். அது இருக்கட்டும், ஏதோசொல்ல வந்தீர்களே.....

இக்பால்:- ஆமாம். நான் கனவுகண்ட பாகிஸ்தானைத்தான் நிலப்பரப்பில் காண்பதோடு நின்று விட்டார்கள். ஆனால் உங்களோடு ஒரு குரலெடுத்து 'வந்தே மாதரம்' என்று வானதிரக் கோஷித்த அதே கோஷ்டியல்லவா இந்தியாவில் இன்று ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கிறது. அதனால்தானே உங்களுக்காக இத்தனை கொண்டாட்டங்களும், கோலாகலங்களும்.

பாரதி:— கொண்டாட்டங்களுக்கும், கோலாகலங்களுக்கும் குறைவில்லைத்தான். ஆனால் எந்த இறுதி இலட்சியத்தை அடையுமட்டும் ஓய்ந்திருக்கக்கூடாது என்று நான் உள்ளங் கொதித்து உணர்ச்சிக் கவிகள் பாடினேனே அந்தக் கவிகளுக்கே இன்று தடைபோட்டு அரசாங்கம் வைத்துக்கொண்டது.

இக்பால்:-
கார்க்கி:- } ஆச்சரியம்!

பாரதி:— ஆனாலும் உண்மை. சுதந்திரம் சுதந்திரம் என்று நான் மூச்செல்லாம் முழங்கினேன். ஆனால் இன்று என் நாட்டிலே, என் சகோதரர்களின் ஆட்சியிலே எனக்கே அடக்குமுறை!

''இதந்தரு மனையினீங்கி
இடர்மிகு சிறைப்பட்டாலும்
பதந்திரு விரண்டுமாறிப்
பழிமிகுத்திழிவுற்றாலும்
விதந்தரு கோடியின்னல்
விளைந்தெனையழித்திட்டாலும்
சுதந்திர தேவி நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே?
தேவி நின்னெளி பெருத
தேயமோர் தேயமாமோ?
ஆவியங்குண்டோ? செம்மை
அறிவுண்டோ? ஆக்கமுண்டோ?
காவியநூல்கள் ஞானக்கலைகள் வேதங்களுண்டோ?
பாவியரன்றே நின்றன்
பாலனம் படைத்திலாதார்?''

கார்க்கி:— அப்படியானால் நீங்கள் பிறந்த பொன்னாட்டிற்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை என்றுசொல்கிறீர்கள்?

பாரதி:— மிகவும் துக்கத்துடன் ஒப்புக்கொள்கிறேன். வெள்ளையனின் வெளியேற்றத்தால் அரசியல் சுதந்திரம் மட்டும் கிடைத்தது. ஆனால் நான் கனவுகண்ட சமுக, பொருளாதார, கலாச்சார சுதந்திரங்கள் இன்னும் கனவாகவே இருக்கின்றன.

இக்பால்:— (சலிப்புடன்) சரிதான். கண்டகனவுகளில் கால்பங்கைக்கூட நனவாக்கிக் காணக் கிடைக்காத துரதிர்ஷ்டசாலி நான்தான் என்று எண்ணியிருந்தேன்...

கார்க்கி:— என்ன! என்ன?

இக்பால்:— ஆமாம் தோழரே, உங்களது ருஷ்யநாட்டிற்கு வாழ்த்துக் கூறும் பொழுதுகூட:

''ஐரோப்பாவின் அரசியல் முறைகாலத்துக்கு ஒவ்வாதது; சலிப்புத்தருவது. அந்த மனிதத்தன்மையற்ற கலாச்சாரத்தை இனி நீ கண்டெடுத்தும் பாராதே. உன்விதியும் கீழ்நாடுகளோடு

(11-ம் பக்கம் பார்க்க)

கொலை வெறி தடுத்து சாந்தி பரப்ப வல்லது இஸ்லாம்

அதன் சமரஸத் திட்டமே உலக சகோதரத்துவத்திற்கு அடிகோலும்

[ஏ. எல். எம். இப்ராஹிம்]

இன்று உலகம் அமைதியைத் தேடித்திரிகிறது. ஐக்கியநாடுகள் பாதுகாப்பு சபையின் நோக்கமும் அதுதான் என்று படாடோபமாகக் கூறப்படுகின்றது. உலக அறிஞர்களின், அரசியல் வாதிகளின் ஆலோசனையையும், கருத்தையும் கவர்ந்துநிற்கும் பிரதான பிரச்னையாகவும் இதுதான் இருந்துவருகிறது. மானிடவர்க்கம் மகாயுத்தங்களால் சூறையாடப்பட்டது போதும், போதுமென்று மனிதாபிமானம் படைத்த அறிவாளிகள் கூட்டம் அலறிக்கொண்டிருக்கிறது. மானிடவர்க்கத்தின் பாதுகாப்பிற்காக வழிகோலும் பொதுத்திட்டம் ஒன்றில்லையா எனும் எண்ணமே எல்லோரின் சிந்தனையைக் கிளறிக்கொண்டிருக்கிறது.

இந்தக் கட்டம்தான் இஸ்லாம்போதிக்கும் சமாதான சமரஸதிட்டத்தை உலகோருக்கு சமர்ப்பிக்கவேண்டிய கட்டம். இஸ்லாம் என்றால் கீழ்படிவது என்றுதான் அர்த்தம். இதர அவயவங்கள் கீழ்ப்படிவதால் உத்தேசித்தபலனை எதிர்ப்பார்க்கமுடியாது. ஹிருதயத்தைக் கீழ்படியுமாறு செய்வதில் தான் இஸ்லாத்திற்குத் தனிச்சிறப்புண்டு. சமரஸத்தன்மை இன்றி எதையும் சாதித்தல்முடியாது. மதத்துவேசம் என்பது மதப் பேய்தான். எனது சகோதரன் எனது கொள்கைகளைப் பின்பற்ற வேண்டுமென்பதில் தவறு இல்லை. ஆனால் அதற்காக அவனை நிர்ப்பந்திக்கும் உரிமை எனக்கில்லையென இஸ்லாம் எடுத்தோதுகின்றது.

ஆங்கிலேய அறிஞரொருவர் ''மதமென்பது அபினியைப் போன்று போதையுடைது'' என்றார். அந்தப்போதைதான் மண்டை உடைவதற்கும் பெரும், பெரும் அழிவுச்சண்டைகள் ஏற்படுவதற்கும் காரணமாயுமிருந்ததென்று மானிடவர்க்கத்தின் வரலாற்று ஏடுகளில் இருந்துகாண்கிறோம். இன்று உலகெங்கணும் அவ்அபாயகரமான போதைஏற்பட்டுவருகின்றது. மத்திய கிழக்கு நாடுகளில் அமைதியில்லை. அரசியல் கட்சிகள்

இரண்டு பிரிந்து தனித்தனியேவளர்ந்து எதிர்ப்புணர்ச்சியைப் பெருக்கி நாட்டின் குழப்பத்தை வளர்க்கின்றன. எகிப்திலே மதத்தின் பெயரால் அரசியல் கட்சிகள் பிரிந்து மக்களிடையே உள்ள நல்லுணர்ச்சியைக் கெடுத்துக்கத்தியாட்சியையும், இரத்தப் பெருக்கையும் விளைவித்துத் தூக்குமேடைகளை முத்தமிட வழிவகுக்கின்றன. ஏகாதிபத்திய வாதிகளின் சுயநலங்கள்தான் இவைகளினுள்தாண்டவமாடுகின்றன. யூதர்களுக்குச்சலுகைகாட்டிவரும் அமெரிக்காவுக்குச் சுயநலம்தான் குறிக்கோளாய் இருக்கிறது. அராபியர்களுக்கு ஆதரவுகாட்டும்பாவனை. பிரிட்டனின் நோக்கமும் அதுவே! யூதர்களை நேசிக்கும் அமெரிக்கா திரைமறைவில் யூதர்களின் எண்ணிக்கையையும், வலிமையையும் குறைத்துவிடதுர்எண்ணத்துடன் சூட்சி செய்துவருகின்றது. பிரிட்டன் அராபியர்களில் கொள்ளும் அபிமானமும் இத்தகையதுதான். மத்திய கிழக்குநாடுகளில் கையாளப்பட்டுவரும் தப்புத் தவறுன இஸ்லாமிய கொள்கைகள் இன்றைய தியாகக் கனல்களில் புடம்போடப்பட்டு வருகின்றன. கீழத் தேசங்களில் வெள்ளை ஆதிக்கம் விரட்டப்படும் நிலைமையில் பிரிட்டனும், அமெரிக்காவும் மத்தியகிழக்கு நாடுகளில் திருவிளையாடல்களுடன் கூடிய நர்த்தனம் புரிந்து வருகின்றன. கத்திக் கலகங்களும் இரத்தஓடைகளும் பெருகுவதற்கும், நாட்டின் நடுநிலைமை குலைந்து சந்துஷ்டியும், சமாதானமும் சிதைவதற்கும் காரணமாக உள்ளது ஏகாதிபத்திய வாடையாகும்.

இஸ்லாம் ஜனநாயக அடிப்படையில் அமைந்த தொரு மதம். இதன் கோட்பாடுகளெல்லாம் புத்திக்கும், யுக்திக்கும் மிகப்பொருத்தப்பட்டவை. இன்று உலகம் இஸ்லாத்தினைப் பரிசீலனை செய்துவருகிறது. நிம்மதியளிக்கும் பொதுத்திட்டம் ஒன்றை ஆராய்ந்து வருகிறது.

இஸ்லாமிய வாழ்விலே வாழ்ந்துவதற்கோ, அன்றி வன்சமர் செய்து மனிதனினத்தை அழித்தொழிப்பதற்கோ இடமில்லை. அவமானமுள்ள அலங்கோலக் கிரிகைகளில் ஈடுபட இஸ்லாம் வழிவகுக்கவில்லை. இஸ்லாம் மதத்தின் உயர்வையும் கௌரவத்தையும் முஸ்லிம்கள் உணர்ந்திருந்தால் இன்று இவ்வளவு கேவலத்துக்கு ஆளாகியிருக்க மாட்டார்கள்.

அன்றுபேரீச்சமரத்தடியில் மதீனாவை தலைநகராகக் கொண்டு சயனித்த, நாயகத்தின் இரண்டாவது தோழராய் இருந்த உமரே பாரூக்கின் ஆட்சியிலேதான் மத்தியகிழக்கு நாடுகள் நேர்மையும், நெறியும், வாய்மையும் புகழும் பெற்று பெறுதற்கரிய புகழை அடைந்தன என்பதை முஸ்லிம்கள் உணரவில்லையா? ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்குமுன் அனல் வீசும் அராபிய பாலைவனத்திலே தான் அகில உலக மக்களனைத்தும் அறநெறியின் ஜோதியைக் கண்டார்கள். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை உணரவில்லைபோலும். முஸ்லிம்களின் ஒழுக்கங்கள் குன்றிய பொழுதுதான் மோதுதல்களும், எதிர்ப்புகளும், பகைமை உணர்வுகளும் தாண்டவமாடுகின்றன. இஸ்லாமிய நெறிதவறுது நடந்தால் எல்லாப்பாதுகாப்புகளும், ஒற்றுமையும், உன்பாடும் ஏற்பாடும் என்பதை முஸ்லிம்கள் உணரவேண்டும். ஆப்பிரகாம் லிங்கனின் அத்தனை தியாகங்களுக்கும் பின்னரும் உலகிலேயே மிக முன்னேற்றமடைந்துள்ள, அணுக்குண்டைச் சிருஷ்டித்து உலகை நடுநடுங்கச் செய்யும் தேசமான அமெரிக்காவினுல் நீக்கிரோ ஜாதியாரின் அந்தஸ்து இதுகாறும் உயரவில்லை. போர் முனைகளில் தள்ளி பலியிடும்

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1955 ஜனவரி மாதம் 2ந் திகதி

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு. போன்: 3411

உள்ளும் புறமும்

புத்தாண்டிலே, நேயர்கள் இத்தலையங்கத்தை வாசிக்கும் சமயம் நமது பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை இலங்கை மக்களின் வரிப்பணத்தை வாரியிறைத்து, தமது பூப் பிரதட்சணத்தை அநேகமாக முடித்துக்கொண்டு நாடு திரும்பியிருப்பார் என்று நம்புகிறோம்.

பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை உரோமிலும், பிரான்ஸிலும், இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும், ஜப்பானிலும், மலாயாவிலும், இந்தியாவிலும், இந்தோனேஷியாவிலும், மற்றும் சென்ற சென்ற இடங்களிலெல்லாம் பிரசங்கமாரியாகப் பொழிந்து தள்ளியிருக்கிறார்.

உலக மக்களின் சுதந்திரத்தைப் பற்றியும், சுயாதீனத்தைப் பற்றியும், நலிந்த மக்களின் வாழ்க்கைத்தர உயர்வு பற்றியும், காலியான வயிற்றிலே கம்யூனிஸம் புகுந்து கொள்ளும் விந்தைபற்றியும், வலியோர்கள் எளியோரைஅடக்கியொடுக்கும் அக்கிரமம் பற்றியும் அத்தியாயம் அத்தியாயமாக அவர் ஆற்றிய பிரசங்கங்கள் படிப்பதற்கு மிகவும் அழகாகத்தானிருந்தன. சமாதானத்தையும் சகிப்புத் தன்மையின் அவசியத்தையும் பற்றிக்கூட அவர் குறிப்பிடத் தவறவில்லை.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்தோனேஷியாவிலுள்ள மலைப்பிரதேச நகரமான போகரில் ஐந்து கொழும்பு வல்லரசுகளும் கூடின. இலங்கையின் சார்பில் சேர் ஜோன் கொத்தலாவலையும் அம்மகா நாட்டில் கலந்து கொண்டார். ஆசிய-ஆபிரிக்க மக்களை விடுதலை செய்து அவர்களை சுத்த சுதந்திர சமத்துவ மக்களாக வாழச் செய்வதும் உலக சமாதானத்தை நிலைநாட்ட ஒன்றுசேர்ந்து உழைப்பதும் கொழும்பு வல்லரசுகளின் பிரதான நோக்கமாகும்.

சேர் ஜோன் கொத்தலாவலை ஆங்காங்கே ஆற்றிய சொற்பொழிவுகளைப் பத்திரிகை வாயிலாகப் படிக்கும்போதும், போகரில் கூடிய கொழும்பு வல்லரசுகள் மகாநாட்டில் அவர் என்ன நோக்கத்தோடு கலந்து கொண்டார் என்பதைப் பார்க்கும்போதும் நமக்கு சிரிப்புத்தான் வருகிறது. ''ஒய்யாரக் கொண்டையாம் தாழம் பூவாம் உள்ளேயிருக்குமாம் ஈரும்பேனும்'' என்ற பழமொழிதான் ஞாபகத்திற்கு வருகிறது.

ஒரு நாட்டின் பிரதமர் பிறநாடுகளுக்கு நேரில் சென்று ஆங்காங்குள்ள அரசியல், சமூகத் தலைவர்களுடன் மனங்கலந்த நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வது தவறுகாது. அந்த வகையில் பிரதமர் சேர் ஜோனின் உலக சுற்றுப் பிரயாணத்தை நாம் ஆட்சேபிப்பதற்கில்லை. ஆனல் சேர் ஜோனும் அவருடைய அரசாங்கமும் செய்துவரும் உட்சுவர் இருக்கப் புறச்சுவர் மெழுகும் அர்த்தமற்ற ஏமாற்று வேலையை நாம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

சமத்துவம் சமாதானம்பற்றியெல்லாம் சேர் ஜோன் பிரமாதமாகப் பேசியிருக்கிறார். சமத்துவத்தையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்ட போகர் மகாநாட்டிலும் கலந்து கொண்டிருக்கிறார். இவற்றின் மூலம் வெளியுலகத்திற்கு இலங்கையின் கொள்கை யென்ன நோக்கம் என்ன என்பதைப் பறைசாற்றி முற்பட்டிருக்கிறார். அதாவது புறச்சுவர் பூசியிருக்கிறார். ஆனல் இலங்கையின் உள்ளே உண்மையான நிலைமை என்ன? இங்கு சமத்துவம் நிலவுகிறதா? சமாதானம் நிலவுகிறதா?

நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பயங்கர ரூபமெடுத்து வருகிறது. மக்களுடைய பொருளாதாரம் மட்டுமல்ல அரசாங்கத்தின் பொருளாதாரமே அடிசாய்ந்துவிட்டது. இந்த இலட்சணத்தில் தேயிலைத் தோட்டங்களில் இலட்சக்கணக்கான தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்யத் திட்டமிடுகிறார்கள். நாட்டில் வறுமை காரணமாகவும், அரசாங்க நிர்வாகத்தில் நியாயம்கோர முடியாதபடி இலஞ்ச இலாவணங்கள் இடம்பெற்று விட்டதாலும் படுபாதகமான கொலைக் குற்றங்களும், பிறகுற்றங்களும் அதிகரித்து வருகின்றன. பாதுகாப்பு அதிகாரிகளின் கையாலாகாத் தனத்தாலும் பணப்பலத்தினலும் எத்தனையோ கொலைக் குற்றவாளிகள் தப்பித்துக்கொண்டு நம்மிடையே ''நல்ல மனிதர்'' களாக வாழ்ந்து வருகிறார்கள். நாட்டு மக்களின் நடத்தையும் நல்லொழுக்கமும் நாளுக்கு நாள் பங்கப்பட்டு வருகிறது. சிறுவர்களின் கல்வித்திட்டம் சீரழிந்துவிட்டது. பஞ்சமும் பட்டினியும் மக்களைப் பதம்பார்த்து வருகின்றன. இப்பேர்ப்பட்ட நிலையில் இலங்கையில் சமாதானம் நிலவுகிறது என்று யாராவது சொல்ல முடியுமா?

சமத்துவம் தானும் நிலவுகிறதா என்றால், துளிகூடக் கிடையாது. சோல்பரியின் ஒற்றையாட்சித் திட்டத்தின்கீழ் சகல அரசியல் அதிகாரங்களையும் கைப்பற்றிக் கொண்ட பெரும்பான்மை சிங்கள மக்கள், சிறுபான்மைத் தமிழ் மக்களை அடிமைகளாகவும் அலுதைகளாகவும் நடத்தி வருகிறார்கள். தங்கள் பாஷையையும், சமயத்தையும் சிறுபான்மை மக்கள்மீது திணித்து விடுவதோடு, சிறுபான்மை மக்கள் தொன்று தொட்டு வாழ்ந்துவரும் தமிழ்ப் பிரதேசங்களையும் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலம் ஆக்கிரமித்துக் கொண்டு வருகிறார்கள். வலிமைமிக்க ஒரு சர்வாதிகாரி தன் ஆயுத பலத்தினல் வலிமை குன்றிய பிறிதொரு நாட்டின்மீது படையெடுத்து அந்நாட்டின் எல்லையை ஆக்கிரமித்துக் கொள்வதற்கும், பெரும்பான்மை மக்கள் சிறுபான்மை மக்களின் வாழ்விடங்களை சட்டங்களின் மூலம் சாமர்த்தியமாக அபகரித்துக்கொள்வதற்கும் எதுவித வித்தியாசமுமில்லை. பிறநாட்டின் படையெடுப்பையும் யுத்த ஆவேசத்தையும் கட்டுப்படுத்துவதற்காக கூட்டப்படும் கொழும்பு வல்லரசுகள் மகாநாட்டில் அங்கம் வகிக்கும் சேர் ஜோன் கொத்தலாவலை உள்நாட்டில் நடைபெறும் இந்த அநியாய ஆக்கிரமிப்பை உலகத்தின் கண்ணில் இருந்து மறைப்பதில் பயன் இல்லை.

அடக்கியொடுக்கப்படும் மக்களின் விடுதலைக்காக கொழும்பு வல்லரசுகள் கூடுகின்றனவாம். மிகவும் நல்லகாரியந்தான். ஆனல் அந்த புனிதமான மகாநாட்டில் எந்த மனச்சாட்சியோடு சேர் ஜோன் கலந்து கொள்கிறார்? இங்கே, இலங்கையிலே, சுமார் பத்து இலட்சம் தமிழ் மக்கள், இந்த நாட்டை சொந்த நாடாகக் கொண்டு தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருபவர்கள், மண்மேட்டைப் பொன்மேடாக்கி, பொழிலும் காவும் படைத்து, தேயிலையின் மூலம் திரவியத்தைத் தேடித்தந்தவர்கள், வாக்குரிமை, பிரஜா உரிமை அற்றவர்களாகவும், வேலை செய்யும் உரிமை, உணவு உண்ணும் உரிமை அற்றவர்களாகவும் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். இதுதான் சமத்துவமா? மனிதன் மனிதனிடம் காட்டும் மனிதப் பண்பா? அடக்கியொடுக்கப்படும் மக்களின் விடுதலைக்காக உழைக்கும் உத்தமச்செயல் இதுதானு?

தனி மனிதனுய் இருந்தாலும்சரி, அரசாங்கமாய் இருந்தாலும்சரி, ஒரு புனித நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமானல் செயலிலும் சிந்தையிலும் அந்தரங்க சுத்தி நிலவவேண்டும். உள்ளும் புறமும் ஒன்றுயிருக்கவேண்டும். உள்ளுக்குள்ளே இத்தனை சீர்கேடுகளையும் வைத்துக் கொண்டு உலக சமாதானத்திற்காகவும், சர்வதேச நலனுக்காகவும் உழைப்பதுபோல் சேர் ஜோன் கொத்தலாவலை போன்றவர்கள் நடிப்பது வெறும் கேலிக் கூத்தாகும்.

இந்த கிறிஸ்தோதய ''ஸீஸனி''லே கிறிஸ்து பெருமானின் திருவாக்கியங்களில் ஒன்றுன ''அயலான் கண்ணிலிருக்கும் துரும்பை விலக்குமுன், உன் கண்ணை மறைக்கும் தூணை விலக்கிக்கொள்'' என்ற மணி வாக்கியத்தை சேர் ஜோன் போன்ற போலிப் பேர்வழிகளுக்கு புத்தாண்டுப் போதனையாகச் சமர்ப்பிக்க விரும்புகிறோம்.

கடந்த ஆண்டின் ஐந்தொகைக் கணக்கு

தமிழுணர்ச்சி சற்று தலைதூக்கியிருக்கிறது

ஒவ்வொரு ஆண்டும் முடிவடையும்போது வர்த்தகர்கள் கடந்த ஆண்டின் ஐந்தொகைக் கணக்கைப் பார்வையிடுவதும், எதிர்வரும் ஆண்டிற்கு வரவு செலவுத் திட்டம் அமைப்பதும் வழக்கம். இம்மாதிரியான ஒரு பரிசீலனை வர்த்தக துறைக்கு மட்டுமல்ல அரசியல் துறையுட்பட சகல துறைகளுக்கும் அவசியமானதே.

இலங்கையைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டின் ஐந்தொகைப் பட்டியல் என்னவென்று ஆராயந்தால் பல முக்கிய சம்பவங்கள் நம் மனக் கண் முன்பு வருகின்றன.

எலிஸபெத் இராணியார் இலங்கைக்கு விஜயம் செய்தது கடந்த ஆண்டில்தான். யு. என். பி. ஆட்சியினர் அவரை ஒரு காட்சிப் பொருளாக்கி தங்கள் கட்சி வளர்ச்சிக்குப் பயன்படுத்தினர். இந்த வகையில் இலங்கைப் பொதுமக்களின் வரிப்பணம் ஆறு இலட்ச ரூபாய் கரியாக்கப்பட்டது. பேச்சளவில் இலங்கை, சுதந்திரம், சுயாதீனம் அடைந்த நாடு என்று சொல்லப்பட்ட போதிலும் இலங்கை மக்கள் இன்னும் பிரிட்டிஷ் முடியாட்சியின் அடிமைகளே என்பது எலிஸபெத் இராணிக்கு நடைபெற்ற அளவிற்கு மிஞ்சிய ஆர்ப்பாட்ட வரவேற்புகளினல் நிரூபிக்கப்பட்டது. எலிஸபெத் இராணியை ஆட்சியினர் சிங்களப் பிரதேசங்களுக்கு மட்டுந்தான் அழைத்துச் சென்றனர். தமிழ்ப் பிரதேசமும் மக்களும் அவர் கண்களில் படாதவாறு திரையிடப்பட்டது. அவர் முன்னிலையில் அருமைத் தமிழ்மொழியும் புறக்கணிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தலைவராக விளங்கிய திருமதி விஜயலட்சுமி பண்டிட் இலங்கைக்கு விஜயம் செய்ததும் கடந்த ஆண்டில்தான். இலங்கை அரசாங்கத்தின் விருந்தினராக வந்த திருமதி விஜயலட்சுமியும் யாழ்ப்பாணம் போன்ற தமிழ்ப் பகுதிக்கு விஜயம் செய்ய முடியவில்லை.

கடந்த ஏப்ரல் மாதத்தில் கொழும்பு வல்லரசுகளின் மகாநாடு கொழும்பில்நடைபெற்றது. இதில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்த பாரதப் பிரதமர் திரு ஜவாஹர்லால் நேருவிற்கு இலங்கை அரசாங்கம்வாய்ப்பூட்டுப் போட்டு அவர் இலங்கை ஜனநாயகக் காங்கிரஸின் மகாநாட்டில் கலந்து கொள்ள முடியாதபடி தடை விதித்தது.

இலங்கையரான சேர் ஒலிவர் குணதிலகா இலங்கையின் கவர்னர் ஜெனரலானதும் கடந்த ஆண்டில்தான். இவருடைய நியமனம்பற்றி மற்றெல்லாப் பத்திரிகைகளையும் முந்திக்கொண்டு செய்தி வெளியிட்ட பெருமை சுதந்திரனைச் சார்ந்ததே என்பது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

கடிகாரம் இனம்! இனம்!!

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 9—10.

மேற்குறிப்பிட்ட சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி ஒவ்வொன்றிற்கும் ஒரே கவரில் 150க்கு குறையாத கூப்பன்கள் அனுப்புபவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு அழகான மேசை அலாரம் கடிகாரம் இனமாகக் கொடுக்கப்படும்.

மானேஜர்
சுதந்திரன்

வர்த்தக மந்திரியாயிருந்த திரு ஆர். ஜீ. சேனநாயகா ராஜினாமாச் செய்ததும், மத்திய வங்கி கவர்னர் திரு என். யு. ஜயவர்த்தனு பதவி நீக்கம் செய்யப்பட்டதும் கடந்த ஆண்டில் நடைபெற்ற சம்பவங்களே.

மலைநாட்டுத் தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிப்பதற்காக கடந்த ஆண்டில் இரண்டுமுறை இலங்கை இந்தியப் பிரதமர்கள் புதுடில்லியில் சந்தித்தனர். முதலாவது சந்திப்பின் போது ஏற்பட்ட ஒப்பந்தம் மலைநாட்டுத் தமிழ் மக்களை சிங்களவர்களாக்குவதற்கு ஏற்றதாய் அமைந்தது. இரண்டாவது சந்திப்பின் போது இலங்கை அரசாங்கத்தின் சூதுவாதுகள் பல அம்பலமாயின.

ஒற்துழைப்புத் தலைவராக விளங்கிவந்த திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் திடுதிப்பென்று அரசாங்கத்தை எதிர்த்து மற்றொரு குத்துக்கரணம் அடித்தது கடந்த ஆண்டில் அவசியம் குறிப்பிட வேண்டிய ஒரு நிகழ்ச்சி. தமிழ் அரசுக் கட்சியினர் வெளியிட்டுவந்த கருத்துக்களையே இவரும்வெளியிட்டு, சிறுபான்மை மக்களை ஒடுக்க சிங்கள ஆட்சியினர் செய்துவரும்காரியங்களுக்கு எதிர்க் கோஷம் கிளப்பினர்.

சேர் ராஸீக் பரீத்தைத் தலைவராகக்கொண்ட அகில இலங்கை சோனகர் சங்கமும் சிறுபான்மை மக்களுக்கு விளைக்கப்பட்டுவரும் இன்னலை எதிர்த்து குரல்

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கீட்டரிசி மறுக்கப்பட்டால் மலைநாட்டில்

பால் பொங்கல் நடைபெறுமா?

தோட்டப் பகுதிகளில் உருவாகி வரும் வேலை நிறுத்த திட்டம்

தமிழ் மக்களின் தனிப் பெரும் பண்டிகையான பொங்கல் பண்டிகை ''ஜாம் ஜாம்'' என்று வந்துகொண் டிருக்கிறது. ஆனல் மலை நாட்டுத் தமிழ் மக்களில் ஒரு பெரும் பகுதியினருக்கு இப்பண்டிகை வெறும் பட்டி னிப் பண்டிகையாகி விடு மோ என்ற கவலையும்கூடவே வந்துகொண்டிருக்கிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தலவாக்கொல்லைப் பகு தி யில் நடைபெற்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளிக ளின் பிரமாண்டமான கூட் டம் ஒன்றில் இலங்கை ஜன நாயக காங்கிரஸின் தலைவர் திரு எஸ். தொண்டமான் பேசுகையில் ''பொங்கல் பண்டிகைக்கு முன் பே மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பமாகி விடலாம். அதற்கு தொழி லாளர்கள் ஆயத்தமாயிரு க்க வேண்டும்'' என்று எச் சரித்திருக்கிறர்.

வேலை நிறுத்தப் போராட் டம் பட்டினிப் பண்டிகை யாக ஏன் முடியவேண்டும் என்று சிலர் நினைக்கக் கூடும். மற்ற மற்றத் தேசங்களி லெல்லாம் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தால் அவர்கள் கோரிக்கைகளைப் பரிசோதித்து மத்தியஸ்த சபைகள் மூலம் ஆராய்ந்து ஏற்கக் கூடியனவற்றை ஏற்று, விடக்கூடியனவற்றை விட்டு ஒரு சமரஸமான முடி வுக்குவர முதலாளிகள் முயற் சிப்பதுண்டு. அப்படியான ஒரு முடிவுக்குவர சம்பந்தப் பட்ட அரசாங்கமும் நட வடிக்கை எடுப்பதுண்டு. ஆனல் இங்கு நிலைமை அப் படியிருப்பதாகத் தெரிய வில்லை. டம்மேரியா, ஹைபோரஸ்ட், ஹொப் டன் ஆகிய தோட்டங்களில் நடைபெற்றுவரும் வேலை நிறுத்தங்களுக்கு முடிவு காண அரசாங்கம் சுறுசுறுப் பாக இயங்குவதாகத் தெரிய வில்லை. இதற்கு காரணம் என்ன?

மற்றத் தேசங்களில் தொ ழிலாளர் வேலை நிறுத்தம் செய்தால் அது அரசாங்கத் திற்கு ஒரு அவசிய பிரச்னை யாகிவிடுகிறது. ஆனல் இங்கு வேலை நிறுத்தம் செய் பவர்கள் அரசாங்கத்திற்கு வேண்டாப் பெண்டாட்டி களான மலைநாட்டுத் தமிழ் மக்களாய் இருப்பதனல் அர சாங்கம் அக்கறை காட்ட வில்லையோ என்று எண்ணு வது தவருகாது. மேலும் இன்றைய அரசாங்கமும் முதலாளிகளும் ஒருவர்க் கொருவர் பரஸ்பரம் ஆதர வாளர்களாயிருப்பதனல் தொழிலாளர்களின் கஷ்ட நஷ்டங்களை அவர்கள் அனு தாபத்தோடு நோக்குவார் களா?

அரசாங்கத்தின் பலம் தங் கள் பக்கத்தில் இருப்பதால் சமரசம் செய்து கொள்வ தைவிட நிர்ப்பந்தங்களின் மூலம் வேலை நிறுத்தத்தை நிறுத்தி விடலாம் என்று முதலாளிகள் நினைக்கின்ற னர். தொழிலாளிகளுக்கு பங்கீட்டரிசியைக் கொடுக்க மறுத்து பட்டினி போட்டு வதைத்தால் வேலை நிறுத் தம் முறியடிக்கப்பட்டுவிடும் என்று அவர்கள் எண்ணுகி றர்களாம். இதன் காரண மாகவே பொங்கல் பண்டி கை மலைநாட்டுத் தமிழர்களு க்கு பட்டினிப் பண்டிகை யாகி விடுமோ என்ற கவலை யைத் தெரிவித்தோம்.

ஆனல் திரு எஸ். எம். சுப் பையா இந்தக் கவலைக்கு இடமில்லையென்று மலைநாட் டுத் தமிழ் மக்களுக்கு ஆறு தல் அளித் திருக்கிறார். ''தொழிலாளரைப் பட்டினி போட்டு வெற்றியீட்டி விட லாம் என்று முதலாளிகள் நினைப்பார்களேயானல் அதைப் போன்ற மதியீனம் வேறென்று இருக்க முடி யாது. ரோபரித் தோட்டத் தில் நமது தொழிலாளர் 82 நாள் வேலை நிறுத்தம் செய் திருக்கிறார்கள். மற்றும் பல இடங்களில் 60 நாள் 70நாள் என்று வேலை நிறுத்தம் செய் திருக்கிறார்கள். ஆகையால் பங்கீட்டரிசி மறுப்புப் பூச் சாண்டி எங்களை ஒன்றும் செய்துவிடாது. உணவை மறுத்தால் அதன் விளைவு பார் தூரமானதாயிருக்கும். அத்த கைய விளைவுக்கு தோட்ட அதி காரிகளே பொறுப்பாளிகளாக வேண்டும்'' என்று அவர் கூறு வதிலிருந்து வேலை நிறுத்தம் நடைபெற்றேலும் மலை நாட் டுத் தமிழ் மக்கள் இல்லங் களில் பொங்கல் தினத்தன்று பால் பொங்குவே செய்யும் என்ற நம்பிக்கை நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

வேலை நிறுத்தங்கள் தொ டர்ந்து நடந்தால் தோட் டல்களை மூடிவிடுவதாக சில தோட்டத்துரைமார் பய முறுத்துகிறர்களாம். இது வும் ஒரு வெற்று வேட்டுத் தான். ஏனென்றால் தோட் டங்களை அவர்கள் இவ்வளவு சிரமப்பட்டு நடத்துவது, பாவம் தொழிலாளர் வாழ் ந்து போகட்டுமே என் ற பரோபகார எண்ணத்தினு லல்ல். தோட்டங்கள் தொ ழிலாளரை ஆதரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட தர் ம ஸ்தாபனங்களுமல்ல. முத லாளிகள் தங்களுடைய சொ ந்த லாபத்தைக் கருதியே தோட்டங்களை நடத்துகிறர் கள். இந்த உண்மையை தொழிலாளர் உணர்ந்து கொண்டால் இந்தப் பய முறுத்தல்களுக்கெல்லாம் அவர்கள் பணிந்து போக வேண்டிய அவசியமில்லை.

சேமலாபநிதி, ஓய்வுகால மான்யம், சம்பள உயர்வு, தோட்டம் கைமாறுகையில் நஷ்ட ஈடு போன்ற ஏழு கோரிக்கைகள் அடங்கிய ஒரு அறிவித்தலை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தோட்ட முதலாளிமார் சங் கத்திற்கு அனுப்பியிருக்கி றது. இவற்றில் பெரும்பா லானவை மிகவும் நியாய மான கோரிக்கைகளேயா கும். இவற்றிற்கு முதலாளி மார் சங்கம் ஜனவரி 5-ந் திகதிக்குமுன் திருப்திகர மான பதில் தராவிட்டால் வேலை நிறுத்தம் என்றுமுடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இலங்கையின் நலத்தில் அக்கறை கொண்ட யாரும், இப்பிரச்னை வெறும் முத லாளி—தொழிலாளிபிரச்னை தானேயென்று சும்மா இரு ந்து விடுவதற்கில்லை. நாட் டின் பொருளாதாரம் பல வகைகளிலும் பாதிக்கப் பட்டுவரும் இந்த நேரத்தில் தேயிலையின் மூலம் வரும் பெருந்தொகையான வரு மானமும் அரசாங்கத்திற்கு கிடைக்காமல் போனல்நாட் டின் ஸ்திரமான நிலையே நொறுங்கி விடலாம். இந்த நிலைபரத்தை மனதில் கொ ண்டு இப்பிரச்னையைச் சுமுக மாகவும் விரைவாகவும்தீர்த் துக்கட்ட ஆட்சியினர் முயல வேண்டும். பாதிக்கப்படுப வர்கள் மலைநாட்டுத் தமிழர் கள்தானே என்ற அலட்சிய மனேபாவம் இங்கும் தலை தூக்குமேயானல் அது நாட் டிற்கு ஒருபோதும் நன்மை யளிக்காது என்று வற்புறுத் திக்கூற விரும்புகிறோம்.

அரசாங்கத்தின் வீடமைப்புத் திட்டம்

கொழும்பு நகரசபையின் அதிருப்தி

(நமது நிருபர்)

அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ள தேசிய வீடமைப்புத் திட்டம் சம் பந்தமாக கொழும்பு முனிசிப்பல் கவுன்ஸில் தனது அதிருப் தியை சமீபத்தில் தெரிவிக்க இருக்கிறது என்று ஒரு செய்தி நமக்குக் கிடைத்துள்ளது.

வீட்டுத் தட்டுப்பாட்டு பிரச்னையை தீர்ப்பதில் ஸ்தலஸ்தாபனத்திற் குள்ள சகல பொறுப்புகளையும் மேற்படி சட்டம் உதாசீனப் படுத்தியுள்ளதாக நகர சபையின் எல்லாக் கமிட்டிகளும் தீர் மானித்துள்ளன.

நிலம் பெறுவதற்கோ அல் லது வீட்டு உடமையாளர் சம்பந்தப்பட்ட வழக்கு நட வடிக்கைகளை துரிதப்படுத்து வதற்கோ இந்த சட்டம் ஸ்தலஸ்தாபனங்களுக்கு அதிகாரம் அளிக்கவில்லை என்று இவர்கள் புகார் கூறு கிறார்கள்.

வீடு கட்டும் திட்டத்தை ஆரம்பிக்கும்போது திட்ட வட்டமான அளவு நிலப் பரப்பு பெற்றுக்கொண்டே வேலை ஆரம்பிக்க வேண்டும் என்ற ஷரத்து இந்த சட்டத் தில் இல்லாதது, நிலத் தட் டுப்பாடுள்ள ஸ்தலஸ்தாப னங்களுக்கு பெரும் தலையிடி கொடுக்கலாம் என்று கூறப் படுகிறது. இதற்கு, முன்கூட் டியே வீடு கட்டும் திட்டத் திற்கான இடம் கோடிடப் பட்டு ஒதுக்கப்பட் வேண் டும் என்று முனிஸிப்பல் சபை கருதுவதாகத் தெரிகி றது.

நான் கண்ட 'கல்கி'

கட்டுரையாளரின் சுக வீனங் காரணமாக இத் தொடர் கட்டுரை இவ் வாரம் இடம்பெற முடி யவில்லை. அடுத்த வாரம் வெளிவரும் -ஆசிரியர்

கடந்த ஆண்டின்....

(8ம் பக்கத் தொடர்ச்சி)

எழுப்பியது கடந்த ஆண் டில்தான்.

மொத்தத்தில் பார்க்கும் போது கடந்த ஆண்டு தமிழ்ப் பேசும் சிறுபான்மை மக்களிடையே ஒரு புது விழிப்பை ஏற்படுத்தியிருக்கி றது என்றே சொல்ல வேண் டும். இந்த விழிப்புணர்ச்சி மேலும் மேலும் பெருகி எதிர்வரும் ஆண்டில் அதிக பயனைத் தருமா என்பதை 1956ல்தான் தீர்மானிக்க வேண்டும்.

தமிழ்ப் பேசும் மக்கள் தங்கள் நிலையை உணர்வதற் கும் செயலாற்றுவதற்கும் சுதந்திரன் தன்னலான சிறு தொண்டைக் கடந்த ஆண் டில் செய்திருக்கிறது, எதிர் வரும் ஆண்டில் இத் தொண்டை மேலும் விரிவா கச் செய்ய திட்டமிடுகிறது. கூடியசீக்கிரம், தமிழ் மக்க ளின் இன்றைய நிலையையும், இந்நிலையிலிருந்து தமிழ் மக் கள் விடுதலையும் விமோசன மும் அடைவதற்குள்ள அரசி யல் வழிவகைகளையும்பற்றி சிறந்த தொடர் கட்டுரை களை வெளியிட ஏற்பாடு செய்து வருகிறது. தமிழ்ப் பேசும் மக்கள் என்றும் போல் தங்கள் நல்லாதர வைத் தருவார்களாக.

கடிகாரம் இனம்! இனம்!!

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 9—10.

மேற்குறிப்பிட்ட சுதந்திரன் குறுக் கெழுத்துப் போட்டி ஒவ்வொன்றிற்கும் ஒரே கவரில் 150க்கு குறையாத கூப்பன் கள் அனுப்புபவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு அழகான மேசை அலாரம் கடிகாரம் இனமாகக் கொடுக்கப்படும்.

மானேஜர்
சுதந்திரன்

ரமணரிஷி விழாவில் சச்சிதானந்த யோகீஸ்வரர் கலந்துகொள்வார்

பம்பாயில் நடைபெறவிருக்கும்ஸ்ரீரமண ரிஷிகளின் பிறந்ததின விழாவில் பங்குபற்றுவதற்காக திருகோணமலையிலுள்ள சிவானந்த தபோவனத்தின் தலைவரும், சுதந்திரன் ''சாந்திவழி'' ஆசிரியருமான சுவாமி சச்சிதானந்த யோகீஸ்வரர் சென்ற 27-12-54ல் இந்தியா புறப்பட்டார்.

யோகீஸ்வரர் இந்தியாவில் சுமார் 2 மாதங்கள் தங்குவார் என்று தெரிகிறது.

——

கராச்சியில் முஸ்லிம் சர்வதேசிய வாலிபர்மகாநாடு

அடுத்த மாதம் பாகிஸ்தான் தலைநகரான கராச்சியில்கூடஇருக்கும்முதலாவது சர்வதேசியமுஸ்லிம்வாலிபர் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் இயக்கத்தைச் சேர்ந்த ஒன்பது பிரதிநிதிகள் சென்ற 25ந் தேதி பிரயாணமானர்கள்.

இந்த தூதுகோஷ்டியில் கல்வி இலாகாவைச் சேர்ந்த திரு எஸ். பி. ஸி. ஹலால்தீனும் சென்றிருக்கிறார்.

மக்கள் வறுமையில் வாடும் போது உல்லாசக் கும்பலா?

லட்சக் கணக்கான மக்கள் வறுமையினல் உணவின்றி வாடும்பொழுது ஒருகூட்டத் தினர் எல்லா வசதிகளுடன் உல்லாச வாழ்வு நடத்துகின் றனர். இப்படி இருந்தால் ஜனநாயகம் நீடிக்காதுஎன்று உதவி ஜனதிபதி ராதா கிருஷ்ணன் எச்சரித்தார்.

ஒரு நாட்டில் ஜனநாயகம் நீடிக்க வேண்டுமானல் அந் நாட்டில் ஏழை பணக்காரன் போன்ற சமூக ஏற்றத்தாழ் வுகள்ஒழிக்கப்படவேண்டும்.

நாட்டின் செல்வத்தை மக் கள் எல்லோருக்கும் வித்தி யாசமில்லாமல் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும். இன்பமாபவும், வசதியுட னும் வாழ வசதிகளும், உரி மைகளும் கொடுக்கப்பட வேண்டும் என்றார்.

ஓய்வு நேரங்களைப் பயன் படுத்தி மாதம் ரூ. 100 முதல் ரூ.300வரை சம்பாதியுங்கள். மூலதனம் வேண்டியதில்லை. இலவச விபரங்களுக்கு எழு தவும் கிர்ஸன் நிட்டிங் வேர்க்ஸ், லுடியானு-10 (இந்தியா)

தருணத்தைத் தவறவிடாதீர்கள்!

தபாற்செலவு இனம்!!

லீலா தமிழ் டயறி (448 பக்கங்கள்)	ரூ. 2-00
மேற்படி பென்சிலுடன்	ரூ. 2-25
லக்ஷ்மி தமிழ் டயறி	ரூ. 1-00
மேற்படி பென்சிலுடன்	ரூ. 1-25
லீலா ஆங்கில டயறி	ரூ. 1-25
மேற்படி பென்சிலுடன்	ரூ. 1-50

தபாலில் ஆடர் செய்பவர்களின் வசதிக்காக முற்பணம் அனுப்பி தபால் மூலம் ஆடர் செய்பவர்களுக்கு மட்டும் தபாற் செலவு இனமாக அனுப்புவோம்.

எழுதுங்கள்:

லீலா ஸ்டோர்ஸ்,

249, நொறிஸ் ரோட், கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை:

இதோ, ஒரே ஒரு நிமிஷம்!

-ஜீவா-

முனிஸிபல் மணி ஐந்தடித்தது.

பத்து நிமிஷங்களுக்கு முன்னர்தான் ரகுநாதன் ஆபீஸைவிட்டு வெளியே வந்தான். அவன் அந்த வீதியிலே நடந்து கொண்டிருந்தான்.

தெரு முனையில் - முச்சந்தி மூலையில், கவர்ச்சிகரமான பெரிய சினிமா விளம்பரமொன்று காட்சியளித்தது. அதை அவன் சாதாரணமாகக் கவனித்திருக்கமாட்டான். ஆனால் அன்று அவனுக்குத் தனிக் குஷி. அன்று முதல் தேதி! சம்பளம் வேறு கரையாமல் சட்டைப் பையில் கனமாக இருந்தது. அவனுக்கு இன்று ராணியையும் மகிழ்ச்சியில் ஆழ்த்த வேணுமென்ற குதுகுதுப்பு வேறு உள்ளத்தில் கூத்தாடியது.

தலையை நிமிர்த்தி அந்த விளம்பரத்தைப் பார்த்தான்.

நல்ல சித்திரக்காரன் கண்ணைப் பறிக்கும் வர்ணங்களையெல்லாம் தாராளமாகக் குழைத்து அந்த விளம்பர ஓவியத்தைத் தீட்டியிருந்தான். அந்த எரிநட்சத்திரம் என்ற எழுத்துக்களை, உதிர்ந்து விழும் எரி நட்சத்திரங்களைக் கோர்த்து வரைவதில் தன்னுடைய கலைத் திறன் அவ்வளவையும் செலவழித்திருந்தான்.

எரி நட்சத்திரம்!

அழகானதும், விசித்திரமானதுமான பெயர்களை எப்படித்தான் இந்தப் படாதிபதிகள் தேடிப்பிடித்துவிடுகிறார்களோ, தெரியவில்லை! ஹாலிவுட்டில் படமகுடமிடுவதற்கென்றே சம்பளம் கொடுத்து நிபுணர்களை அமர்த்தியிருக்கிறார்களாம்! இதைப்போலவேதான் இப்பொழுது தமிழ்நாட்டுப் படாதிபதிகளும் ஆரம்பித்து விட்டார்களோ என்னமோ?

இந்தப் பட முதலாளிகள் பிரமாவின் சப ஏஜண்டுகள் என்றுதான் தங்களைநினைத்து விடுகிறார்கள். ஒரு காலத்தில் புராணக் கதைகளைக் கொலை செய்தார்கள். ரிஷிகளும், தெய்வங்களும் அலறிப் புடைத்து இவர்களிடம் படாதபாடு பட்டார்கள். பின்னர் ரஸிகர்களின் சுவை மாறிவிட்டதை உணர்ந்து, தமிழ் நாட்டு 'ராபீன்ஹூட்' டுகளைச் சிருஷ்டித்தார்கள். அந்தப் புதுப்படையல்களும் ரஸிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளவில்லை என்பதைக் கண்டு குடும்பம் குடும்பமாகப் படமெடுத்தார்கள். அம்மா - தந்தை; மகன் - மகள்; மாமி - மருமகள்; மனைவி இப்படியே இவர்களது குடும்பப் பட்டியல் நீண்டு கொண்டே போனது. இப்பொழுது இவர்கள் கண்ணோட்டம் வானவீதியில் வட்டமிடத் தொடங்கிவிட்டது. நாளைக்குச் சந்திரன், சூரியன், செவ்வாய், புதன் என்ற பெயர்களுடன் பேசும் படங்கள் வந்தால்கூட ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

ஒருவேளை இந்த எரிநட்சத்திரத்தின் டைரக்டர் ஒரு வானசாஸ்திரியாக இருப்பாரோ?-இதென்ன அவரின் பெயர் வாய்க்குள் நுழையாத பெயராக இருக்கிறதே! இந்தப் பெயரில் தமிழ் நாட்டு வாசனையே இல்லை. இதில் அதிசயப்படுவதற்கு என்ன இருக்கிறது? தமிழ் நன்முக உச்சரித்துப் பேசவே தெரியாத நடிகைகளெல்லாம் சினிமாவில் நடிப்பதுமட்டுமல்ல, பிரபல முன்னணிநட்சத்திரங்களாக ஜொலித்துக் கொண்டிருக்கும்பொழுது!

***

இப்படியெல்லாம் ரகுநாதனின் உள்ளத்திலே சிந்தனைகள் கூத்தாடின. அந்தச் சிந்தனை அலைகளில் மிதந்து கொண்டிருந்த அவன் வீதியில் நடந்து கொண்டிருப்பதை மறந்துவிட்டான்.

காரின் 'ஹார்ன்' சத்தம் அவனை மிரட்டியது. "ஏய்யா வீட்டிலே சொல்லி விட்டு வந்தியா?" என்ற கார் டிரைவரின் கேள்வி, அவனை 'இந்த' உலகத்துக்குக் கொண்டுவந்தது. திடுக்கிட்டுப் பார்த்தான்; 'பிரேக்' இருந்ததினால் மயிரிழையில் தப்பிவிட்டான். அவன் வீதியிலே ஒதுங்கி சற்று நிதானமாக நடக்கத் தொடங்கினான்.

அவனுடைய உள்ளத்தில் மட்டும் ஒரு தாகம்; இன்றைக்கு எப்படியாவது ராணியையும்அழைத்துக்கொண்டு இந்த எரிநட்சத்திரத்தைப் பார்த்துவிட வேண்டுமென்பதுதான்.

சென்ற வாரம் அவள், அவளுடைய பழைய கல்லூரியில் நடந்த, 'ஜூலை-பெயர்' களியாட்டத்திற்குப் போவதாக திட்டமிட்டிருந்தாள். முழுசாக பத்து ரூபாய்க்கு 'டிக்கட்'டுகள் வாங்கியிருந்தான். அன்று ராணிக்கு ஒரே உற்சாகம். பழைய கல்லூரியையும் சக மாணவிகளையும் சந்திக்கலாம் என்ற உற்சாகத்தில் பறந்து பறந்து வேலை செய்தாள். ரகுவை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்துவதற்காக ஸ்பெஷல் தோசையும் போட்டுக் கொடுத்தாள். அடிக்கொரு தடவை, "பின்னேரம் கெதியாய் வந்திடுங்கோ — கெதியாய் வந்திடுங்கோ...." என்று சொல்லி வைப்பதற்கும் மறக்கவில்லை அவள். அவளுடைய முகத்தில் மகிழ்ச்சியின் செழிப்பும், பூரிப்பின் மலர்ச்சியும் வழிந்தோடிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும், பண்பட்ட வள நிலத்தில் செழிப்பாக வளர்ந்திருக்கும் கொடியில் ஜோராக மலர்ந்திருக்கும் ரோஜாப் பூவின் ஞாபகம் தான் ரகுவிற்கு வந்தது.

ஆனால் அன்று மாலையில் அவன் வந்தபொழுது....!

'விதி' ஒரு சரியான குறும்புக்காரன்! அவன் தனது கைவரிசையை ராணியிடம் காட்டிவிட்டான். அவள் அவசரமாகப் பால் காய்ச்சிக்கொண்டிருந்த பொழுது பால் பொங்கி ராணியின் காலில் வழிந்து விட்டது. அப்பப்பா! அவள் துடித்த துடிப்பு! இந்தச் சம்பவத்தால் அன்றைய 'ஜூலை பெயர்' விஜயம் ரத்தாகி விட்டது.

அந்தத் துன்பம் இன்னமும் ராணியின் இதயத்தை அரித்துக் கொண்டிருந்தது. ஆனால் இன்று அவளையும் சினிமாவிற்கு அழைத்துச் சென்றால்.....கற்பனை சுகம் என்பது எழுத்தாளர்களின் ஏகபோக உரிமைச் சொத்தல்ல; அதை ஒரு குடும்பத் தலைவன் அனுபவிக்கும் போதுகூட அந்த இன்பத்தில் அவனும் மெய்மறந்து விடுகிறான். இந்த மெய் மறந்த நிலை ரகுநாதனை ஒரு கணம் மெய்மறக்கச் செய்தது..... இதை நினைத்த பொழுது அவன் இலேசாகச் சிரித்துக்கொண்டான்.

அப்படியானால் சினிமாவுக்குப் போவதைக் காலையிலேயேராணியிடம் சொல்லியிருக்கலாமே! சொல்லியிருந்தால் ஸ்பெஷல் தோசை கூடக் கிடைத்திருக்கலாம்! சே! அதில் அர்த்தமில்லை. மகிழ்ச்சியைத் திடுதிப்பென்று அள்ளிக்கொடுக்க வேண்டும். அதில்தான் இன்பமிருக்கிறது; மகிழ்ச்சியும் நிரம்ப இருக்க முடியும். சினிமாவிற்குப் போவதைத் திடீரென்று ராணிக்கு அறிவித்து அவளைத் திக்குமுக்காட வைக்கவேண்டும். அப்பொழுது மகிழ்ச்சிப் பெருக்கினால் அவளுடைய அழகிய முகம், பொய்க் கோபத்தினால் சிணுங்கித் துடிக்கும்! முதல் குழந்தையைப் பிரசவித்த தாய், தன் குழந்தையின் முகத்தை முதல் தடவை பார்ப்பதற்காகத் துடிதுடிப்பதைப் போல தவியாய்த் தவிப்பாள் — மனிதன் காதலினாலும், கற்பனையினாலும் மாத்திரம் கவிஞனாகி விடுவதில்லை. எல்லை மீறிய மகிழ்ச்சி வெள்ளத்தினாலும்கூடக் கவிஞனாகிவிடுகிறான்.

இந்த இளமை நினைவுகளில் மிதப்பது அவனுக்குச் சுகம் தந்தது. இளம் தென்றல் வீசும்பொழுது தேகமெல்லாம் ஒரு குதுகுதுப்பு ஏற்படுகிறதே அதைப்போல அவன் தேகத்தில் இந்த நினைவுகள் புல்லரிக்கச்செய்தது. அவனுக்குச் சிரிப்பு வந்தது. அந்தக் குறுநகை உதிர்ந்துவிடவில்லை; இதழ்களில் கூத்தாடியது.

வீட்டிற்கு வந்து விட்டான்.

***

ராணி!..... ஏ...ராணி...!

அடுக்களையிலிருந்து குரல் வந்தது, "ஏன் வந்ததும் வராததுமாகக் குழந்தையைப்போலக் கூச்சல் போடுகிறீர்கள்?"

"இங்கே வா; ஒரு விஷயம்!"

"என்னது? என்ன விஷயத்தைச் சொல்லப் போகிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே கையில் கரண்டியுடன் அடுக்களையைவிட்டு வெளியே வந்தாள் ராணி.

ஒரு சந்தோஷமான சங்கதி! சொன்னால் எனக்கென்ன தருவாய்?" என்று சொல்லிவிட்டு உதட்டைக் குவித்துக் காட்டினான் ரகு.

அவள் குறும்புப் பார்வையுடன் சிரித்துக்கொண்டு, "சொல்லுங்கள்; சந்தோஷமான செய்தியென்றால் நிச்சயம் ஒரு கரண்டி உப்புத் தருவேன்; நிச்சயமாக—" என்று சொல்லிவிட்டு மீண்டும் கலகலவென்று சிரித்துக் கொட்டினாள்.

"குறும்பைப் பார், குறும்பை!" என்று சொல்லிக் கொண்டே அவளின் முதுகில் ஒரு 'ஷொட்டு' வைத்தான். தொடர்ந்து "சொல்லட்டுமா? — சொன்னால் நீ மலைத்து விடுவாயாக்கும்" என்றான்.

"சொல்லுங்களேன்: ஏன் புதிர் போடுகிறீர்கள்? நான் சொன்ன 'நீயூ பாஷன் நெக்லஸ்' கொண்டு வந்தீர்களா? அல்லது சென்ற கிழமை நான் கேட்ட மாங்காய் பாடர் லில்க் ஸாரி வாங்கி வந்தீர்களா? அல்லது—"

"அதெல்லாமில்லை ராணி; அதைவிடச் சந்தோசகரமானது"

"அப்படியானால்....அப்படியானால்...." எதையுமே திடமாகச் சொல்ல முடியாமல் துடித்தபடி அவன் வாயையே ஆவலுடன் பார்த்தாள்.

"சொல்லட்டுமா? சொல்லப் போகிறேன்.... சொல்லப் போகிறேன்" என்று சொல்லிக் கொண்டே ஆவலால் துடிதுடிக்கும் அவள் கண்களைப் பார்த்து மனதிற்குள் சிரித்தான் அவன்.

"சொல்லுவதானால் சட்டென்று சொல்லுங்கள்; சொல்லாவிட்டால் போங்கள்!" என்றபடி பொய்க் கோபத்துடன் அடுக்களைக்குப் போகத் திரும்பினாள் ராணி.

ரகுநாதன் எட்டி ராணியின் பின்னலைப் பிடித்துக் கொண்டே "கோபமா, ராணி....! சரி; இதோ சொல்லுகிறேன்.... இதோ சொல்லிவிட்டேன்..ஹும்....இருவரும் இப்பொழுது சினிமாவிற்குப் போகப்போகிறோம்" என்றான். பின்பு அவளது முகத்தைத் தன்பக்கம் திருப்பிப் புன்னகைசெய்தான்.

"நிசம்மாகவா..பொய் இல்லையே?..அப்பொழுது ஏன் காலையில் சொல்லவில்லை?" என்று நம்பிக்கையற்ற தொனியில் கேட்டாள்.

"உண்மையாக — சத்தியமாக! உன்மீது.."

திடீரென்று ராணியின் மலர்க்கரம் அவனது வாயை பொத்தியது. பிறகு பிறந்து ஒரு மாதமாகிவிட்ட ஆட்டுக் குட்டியைப்போல துள்ளியோடிவிட்டாள் அவள்.

"இந்தா ராணி! சீக்கிரமா 'டிரஸ்' பண்ணு: இப்பொழுதே நேரமாகிவிட்டது" என்று துரிதப்படுத்தினான் ரகு.

சிறிது நேரத்தின் பின் கோப்பியுடன் வந்த ராணி "சாப்பிடுங்கோ: கோப்பி 'ஸ்ரோங்' காஸ்பெலாகப் போட்டிருக்கிறேன்" என்றாள். மீண்டும் "சாப்பிடுங்கோ; நான் அறைக்குள் போய் 'டிரஸ்' பண்ணிக் கொள்ளுகிறேன்" என்று சொல்லியபடி வந்த மாதிரியே மறைந்து விட்டாள்.

சுவரிலிருந்த மணி ஓடிக் கொண்டிருந்தது.

ராணியை இன்னமும் காணவில்லை.

உடை மாற்றிக் கொண்டு வெகு நேரமாகக் காவலிருந்த ரகு, பொறுமையிழந்தவனாய் ராணியின் அறைக் கதவைத் தட்டினான். "ராணி; ராணி! சீக்கிரம் புறப்படு; நேரமாகிவிட்டது" என்று குரல் கொடுத்தான்.

'கொஞ்சம் பொறுங்கோ; இதோ ஒரு நிமிஷத்தில்வந்து விடுகிறேன்' என்று உள்ளிருந்து பதில் வந்தது.

நேரம் போய்க்கொண்டிருந்தது.

"பக்கத்தில்தான் சினிமா கொட்டகை. பத்து நிமிஷத்தில் நடந்தே போய்விடலாம். அதிலும் இன்றைக்குக் கிழமை நாள்தானே?" என்று தன்னைத் தானே சமாதானம் செய்துகொண்டான் ரகு.

மீண்டும் கதவைத் தட்டினான். கதவு திறபடவில்லை!

"ராணி! ராணி!! இன்னமும் புறப்படநேரமாகவில்லையா? கெதியாய் வெளிக்கிடேன்!" என்றான். அவன் குரலில் சலிப்புத் தட்டியது.

"ஏன் அவசரப் படுகிறீர்கள்? ஒரே ஒரு நிமிஷம் பொறுத்துக் கொள்ளுங்கள்; இதோ வந்துவிட்டேன்"

ரகுநாதனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. மேலும்கீழுமாகக் குட்டிபோட்ட பூனையைப்போல நடந்தான். சொல்லி வைத்தால்போல் மணி ஆறடித்து ஓய்ந்தது.

அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இப்பொழுது போனாலும் ஒரு வழியாகப் படம் பார்க்கலாம். ஆனால் இனி நேரம் சென்று போனால் நடந்ததுதான் மிச்சமாகும் என்ற நினைப்பு அவனைப் படபடக்க வைத்தது. மீண்டும் கதவைப் பலமாக இடித்தான். "ராணி..! சீக்கிரம் வரப்போகிறாயா, இல்லையா? நேரமாகிவிட்டது: புறப்படு!" என்று இரைந்து கத்தினான்.

"ஏன் பிராணனை வாங்குகிறீர்கள்? கொஞ்சம் பொறுங்கள். இப்போதுதான் தலைவாரிக் கட்டுகிறேன்; ஒரு நிமிஷத்தில் வந்துவிடுகிறேன்" குரல் உள்ளிருந்துதான் கேட்டது.

கோபத்தினால் முகம் சிவக்க வீட்டைவிட்டு வெளியே நடந்தான் ரகுநாதன்.

சினிமாத் தியேட்டரை அடைந்ததும் விசாரித்துப் பார்த்தான். படம் ஆரம்பித்து ஓடிக்கொண்டிருப்பது தெரிய வந்தது. 'ஹவுஸ்—புல்' என்ற ஆங்கில அட்டை வாசலை அலங்கரித்தது. இதைப் பார்த்ததும் இந்த நிலையில் அவனுக்கு சிரிப்புத்தான் வந்தது. அடுக்கு மொழி மன்னன்—திரைக்கதை வசனப் பெருச்சாளி. கலைஞர் கலைதாசனின் கலைச் சிருஷ்டிகள் என ஒரு சிலரால் போற்றப்படும் படங்களே மண்கவ்வும் பொழுது கேவலம் அடுக்குத் தொடரில் தொண்டை கிழியக் கனல் கக்கும் வீரவசனம் இருக்க முடியாத இந்தப் படத்திற்கு 'ஹவுஸ்—புல்' என்று அட்டை போட்டால்—இதை நினைத்து மீண்டும் மனதிற்குள் சிரித்துக்கொண்டான்.

***

வீடு திரும்பினான். திரும்பும்போது மனைவியின்மீது அடக்க முடியாத கோபம் வந்தது. ராணியைப் பழிவாங்க இப்படியே நண்பன் பொன்னுத்துரையின் வீடு வரைக்கும் நடந்து அவனு

(15-ம் பக்கம் பார்க்க)

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்துகொள்ளலாம்

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை, என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ANANDA MEDICAL HALL 174, SEA STREET, COLOMBO 11

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில்வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சுவலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50 சிறியது ரூ. 3-00

வி. பி. பி. செலவு வேறு.

புரொப்ரைட்டர்: எம். பொன்னையா

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுவர்க்கத்தில்" பாரதி, இக்பால்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பிணைக்கப்பட்டதுதான்''— என்று சொன்னேன். அப்படியே இன்று உங்கள் ரஷ்யா கீழ்நாடுகளோடு நேசவுறவு கொண்டாடுவது கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் எனது கனவுத்திருநாடாகியபாகிஸ்தானைப் பாருங்கள்: 'மேல் நாடுகளிலே உன்னை அழிக்க சதிநடக்கிறது' என்று நான் பலமாக எச்சரித்திருந்தும் கூட தனது சொந்த ஆசியச் சகோதரர்களைப் பகைத்துக் கொண்டு எங்கோகிடக்கும் அடுத்துக் கெடுக்கும் அமெரிக்காவோடு கொஞ்சிக் குலாவுவதைக்காண என் நெஞ்சமே வெடிக்கிறது.

கார்க்கி:— வருந்துகிறேன். மகாகவிகளே, உங்கள் லட்சியங்களை இன்னும் சற்று விளக்கமாகக் கூறினால்.....

பாரதி:—(ஆவேசத்தோடு)

''எப்பதம் வாய்த்திடுமேனும்
நம்மில் யாவர்க்கும்அந்தநிலை
பொதுவாகும்
முப்பதுகோடியும் வாழ்வோம்
வீழில்
முப்பதுகோடி முழுமையும்
வீழ்வோம்.''

என்று பாடினேன். இன்று எனது முப்பது கோடிச்சோதரர்களும் வாழ்கிறார்களா? உழைக்கும் மக்கள் உதாசீனம் செய்யப்படுகிறார்கள்.

''உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனைசெய்வோம்-வீணில்
உண்டுகளித்திருப்போரை
நிந்தனைசெய்வோம்''

இக்பால்:— 'உன் உழைப்பின் பெருமையை உணர்
வாய் உழவனே!
நீதான் தானியம்! நீயேவயல்
வெளி! நீதான்மழைநீர்!
நீயே அறுவடை!'

பாரதி:—லட்சோபலட்சம் இந்தியர்கள் இலங்கையிலும் தென்னப்பிரிக்காவிலும் கண்ணீர் வடித்துக் கதறிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இங்கோ

'சொந்தச் சகோதரர்கள் துன்
பத்தால் சாதல்கண்டும்
சிந்தையிரங்காரடி- கிளியே
செம்மை மறந்தாரடி.'

இக்பால்:— ஆமாம். அடிமை வாழ்வு வாழ்வதை விட சாவதேமேல். 'வீலை மதிக்கமுடியாத ரத்தினமே, மனிதனே, உன் சுதந்திரத்தை விற்று அதன்மூலம் பெறும் இரணத்தைவிட மரணமே உனக்கு மேலானது' என்று நான் அன்றே பாடினேன்.

கார்க்கி:— தோழர்களே உங்கள் நாடுகளில்பெண்கள் சுதந்திரம்பற்றி ஏதாவது...

பாரதி:— சரியான கேள்வி கேட்டீர்கள். சுதந்திர பாரதத்தின் பெண்மணி களைப்பற்றி என் னென்ன வெல்லாம்தான் கனவு கண்டேன்.

'ஏட்டையும் பெண்கள்
தொடுவது தீமையென்
றெண்ணியிருந்தவர்
மாய்ந்துவிட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப்
பூட்டிவைப்போமென்ற
விந்தை மனிதர்
தலைகுனிந்தார்'

இக்பால்:— வாஹ்வா!.... சபாஷ்! என் கருத்தை அப்படியே பிரதிபலிக்கிறதே! 'இப்பொழுது ஏதற்காகப் பெண்கள் முகத்தை மறைக்க வேண்டும். ஆண்கள்தான் பெண்களாகிவிட்டார்களே!'

பாரதி:—

'ஆணும் பெண்ணும்
நிகரெனக்கொள்வதால்
அறிவிலோங்கியிவ் வையம்
தழைக்குமாம்

இக்பால்:— 'தாய்மை என்ற சுவர்க்கத்திலே உற்பத்தி என்ற பூக்கள் மலர்கின்றன. தீட்சண்யமான பார்வையுள்ளவளே ஒரு சமுதாயத்தின் செல்வம்.

பாரதி:—

'அன்னமூட்டிய தெய்வ
மணிக்கையின்
ஆணை காட்டில் அனலை
விழுங்குவோம்'

இக்பால்:— 'பெண்மையின் ஸ்பரிசத்தால் ஆண்மைத் தந்தி நாதம் எழுப்புகிறது. அவளை அடிபணிதல் அவனை அதிகப் பலவானாக்குகிறது.'

கார்க்கி:— போகட்டும் உங்கள் கனவுகள்தான் இன்னும் பலிதமடையவில்லை. ஆனாலும் உங்கள் கனவுகளைச் செயலாக்க எத்தகைய தியாகத்திற்கும் பின்வாங்காத எண்ணற்ற லட்சிய வீரர்கள் இருக்கிறார்களல்லவா? அவர்களை ஊக்குவிக்கும் பொறுப்பு நமது பரம்பரையில் வந்த முற்போக்கு எழுத்தாளர்களில்தானே தங்கியிருக்கிறது? அத்தகைய முற்போக்கு எழுத்தாளர்களுக்கு முதிர்ந்த அனுபவசாலிகளாகிய உங்கள் உபதேசம் என்ன?

இக்பால்:— நன்றாய்ச் சொன்னீர்கள். இனி அவர்களில்தானே எமது நம்பிக்கை தங்கியிருக்கிறது.

பாரதி:— ஆனால் எனது பரம்பரையில் வந்ததாகத் தம்பட்ட மடித்துக் கொள்ளும் சில எழுத்தாளர்கள் எழுதித்தள்ளும் காமவிகார ஆபாச நலிவு இலக்கியங்களை, கறுப்பு இலக்கியங்களைக் கண்டால் என் கண்கள் ரத்தக்கண்ணீர் கொட்டுகின்றன. அவர்களுக்கு நான் சொல்வதெல்லாம் இதுதான்:

'பிறநாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள் தமிழ்
மொழியில் பெயர்த்தல்
வேண்டும்
இறவாத புகழுடைய புது
நூலகள் தமிழ் மொழியில்
இயற்றல்வேண்டும்
மறைவாக நமக்குள்ளே
பழங்கதைகள்
சொல்வதிலோர்
மகிமையில்லை
திறமான புலமையெனில்
வெளிநாட்டார் அதை
வணக்கம் செய்தல்
வேண்டும்'

கார்க்கி:— கவிஞர் திலகத்தின் அறிவுரை.....

இக்பால்:— 'கவிஞனே உன்னிடத்தில் கவிதை என்னும் தங்கம் இருந்தால் அதை வாழ்க்கையென்னும் உரைகல்லிலே உரைத்துப் பார். நெடுநாள் நீ மஞ்சணையில் புரண்டாய், இப்பொழுது கரடுமுரடான கட்டாந்தரையில் படுத்துப் பார். கொதிக்கும் மணலில் உருளவும், குளிர்ந்த நீரில் குளிக்கவும் கற்றுக்கொள். எத்தனை நாள் குருவியைப்போல் கூவியலைவாய்? மலையில் உச்சியில் உன்கூட்டைக் கட்டு. வாழ்க்கைப் போராட்டத்திற்கு எழுத்தாளனே உன்னைத் தயாராக்கு.

அடிமையைப்போல் சொன்னதையே திரும்பத் திரும்பச்சொல்லாதே. சுதந்திரனுயிரு, உன் மனத்தந்தி புதுப்புது நாதங்களை எழுப்பும். நீ கோழை மனம் படைத்தவனுனல் பேனுவைத் தீண்டாதே. உன் பாட்டேரடு உன் இதய ரத்தமே சொட்டட்டும். கலை என்பது வாழ்க்கையின் பணிப்பெண். உன் கவிதைகள் தூங்கிக்கிடக்கும் மனித சமூகத்தைத் தட்டியெழுப்பி அவர்களின் விதியையே மாற்றி அமைக்கவேண்டும். நீ புது உலகத்தைச் சிருஷ்டித்து புத்துணர்ச்சி ஊட்டு.

கார்க்கி:— மெத்த சந்தோஷம். அமர கவியின் அமுத கீதங்களையும், அல்லாமாவின் ஆவேசச் சங்கநாதங்களையும் கேட்டுப் புளகாங்கிதம் அடைந்தேன்.

கவிஞர் திலகங்களே, கண்ட கனவுகளை நனவாக்கிக் காணும் பாக்யம் எனக்குக் கிடைத்ததால் நான் உங்களுக்கு ஒன்று மட்டும் உறுதியாகச் சொல்கிறேன். ஒரு நாளும் உங்கள் லட்சியக் கனவுகள் வீண்போகா. உங்கள் சந்ததியில் தோன்றியிருக்கும் உண்மையான முற்போக்கு எழுத்தாளர்கள் நீங்கள் விட்ட பணியைத் தொடர்ந்து செய்து வெற்றி பெற வீறுகொண்டு கிளம்பி விட்டார்கள். ஒவ்வொரு நாட்டிலும் இன்று உக்கிர திசை அடைந்துவரும் வர்க்கப் போராட்டங்கள் நீங்கள் கனவுகண்ட லட்சிய சமுதாயத்தை நிச்சயமாக உருவாக்கும். இந்தசரித்திர யதார்த்தத்தின் முன்னோடியே—தீபஸ்தம்பமான வழிகாட்டியே எங்கள் நாட்டில் வெற்றி கொட்டிய அக்டோபர் அமரப் புரட்சி.

இக்பால்:— ஆமாம். நான் கூட 'மனிதனுக்காக எத்தனையோ இரவுகள் அழுதழுது ஏங்கினேன். அதன் பின்னரே வாழ்க்கை மர்மங்களுக்கும் எனக்கும் இடையேயுள்ள திரையைக் கிழித்தெறிய முடிந்தது.'

கார்க்கி:— அமரர் பாரதி, தாங்கள் பாரத மக்களுக்கு-ஏன், மனித குலத்திற்குவிடும் செய்தியென்ன?

பாரதி:—(ஆவேசத்தோடு) இருக்கிறது, நான் கடைசியாகப் பாடிய பாட்டிலே! ''ஆகா என்றெழுந்தது பார் யுகப் புரட்சி'' என்று எந்தப் புரட்சியைப் பார்த்து நான் பாடினேனே—அந்தப் புரட்சியின் அமரத்துவம் பெற்ற வெளிச்சமே என் இறுதி லட்சியப் பாதையாக மாறியது.

'மூப்பதுகோடி ஜனங்களின்
லங்க முழுமைக்கும்
பொது உடைமை
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை
இனியொரு விதிசெய்வோம்
அதை எந்த நாளும்
காப்போம்
தனியொருவனுக்குணவில்லை
யெனில் ஜகத்தினை அழித்
திடுவோம்
பாரத சமுதாயம்
வாழ்கவே!'

கார்க்கி:—கவிஞர் திலகமே உங்கள் கட்டளையை நாளைய பாகிஸ்தானும், நானிலமும் புரட்சித்தாகத்தோடு எதிர் பார்க்கிறது.

இக்பால்:-(ஆவேசத்துடன்)

'எழுங்கள் என் உலகிலே!
எழுங்கள் ஏழைகளே!
அடியோடு பணக்கார
அரண்மனையை ஆட்டுங்கள்!
அடிமைகளின் உறைந்த
இரத்தத்தின் குளிரை
நம்பிக்கை அனல்மூட்டி
அன்புடன் போக்குங்கள்!
பாமர மனிதன் பாராளும்
காலமிது!

"ருஷிய பெண்ணைப் பிறக்க எனக்கு ஆசை"

சுத்தானந்த பாரதியார் விருப்பம்

''அடுத்த பிறவியில் நான் பெண்ணாக பிறக்க நேர்ந்தால், ரஷியப் பெண்ணாக பிறக்க வேண்டும் என்பதே என் ஆசை!'' என்று யோகி சுத்தானந்த பாரதியார் கூறினார்.

கோவை சமாதான கமிட்டியின் சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. மேற்படி கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் சுத்தானந்த பாரதியார் சொன்னதாவது:—

சமாதான இயக்கம் ரஷியாவிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டதல்ல. இந்தியாவிலேயே சமாதான இயக்கம் தோன்றி வளர்ந்தது.

வயலிலே வீளையும்
தானியத்தில் விவசாயிக்கு
உரிமையில்லையென்றால்
அவ்வயலில் நிற்கும்
அவ்வளவுகதிர்மணிகளையும்
தீயிட்டுப் பொசுக்குங்கள்
உலகம் உழைப்பவனின்
சொத்து.'

கார்க்கி:— ஆஹா ஹா! புரட்சிக் கவிஞர்களாகிய உங்களைப் புதல்வர்களாகப் பெற்ற பாகிஸ்தானும், பாரதமும் உண்மையாகவே பெருமையுடையவை. எழுத்தாளர்களை ஆத்மாவின் என்ஜினியர் என்றார் எங்கள் நாட்டின் சிருஷ்டிகர்த்தா: புதிய சமுதாயத்தை கட்டுவதில் எழுத்தாளர்களுக்கு மகத்தான பொறுப்பு அளிக்கப்பட்டது, ஏ! எழுத்தாளனே நீ எந்த முகாமில் என்று நான் அன்று முழங்கினேன். அது இன்று பலனளிப்பதைப் பார்ப்பதில் பெருமை—உவகை அடைகிறேன். புத்துலகம்—ஒரு தத்துவமாக இல்லாது வாழும் யதார்த்தமாகி வருவதுகண்டு அகமகிழ்கிறேன். நாம் சிருஷ்டித்த புரட்சிப் பாரம்பர்யத்தில் உலகம் புதிய சமுதாயத்தை நிர்மாணிக்கட்டும். அத்தோடுநமது முப்பெரும் நாடுகளும் தோளோடு தோள் நின்று உலக சமாதானத்தை நிறுவட்டும். நன்று. புத்துலகிற்கு நமது ஆசியைத் தருவோம்.

மூவரும்:— மனித குலம் வாழ்க! சாந்தி—யோங்குக! சமாதானம்—நிலவுக!

(திரை.)

நமது நாட்டின் பழைய காலத்து முனிவர்களும், யோகிகளும் சமாதானத்தையே நாடினார்கள்.

அணுகுண்டு, ஜலவாயு குண்டு முதலிய பயங்கர போர்க் கருவிகளை செய்து குவிப்பதால் ஏற்படும் ஆபத்தைத் தடுப்பதுதான் சமாதான இயக்கத்தின் நோக்கம். தேசங்களுக்கிடையே நல்லுறவை வளர்ப்பது அதன் மற்றொரு நோக்கம்.

ரஷிய நாட்டின் பெரும் பகுதி ஆசியா கண்டத்தில் இருக்கிறது. ரஷியாவும், சீனவும், இந்தியாவும் இயற்கையாகவேஒன்றுபட்டவை. இந்த மூன்று நாடுகளுக்கிடையேயும் நல்லுறவும் ஒற்றுமையும் ஏற்படுவது ஆசிய நாடுகளின் ஒற்றுமைக்கு மிகவும் அவசியமானது.

ரஷியா என்று சொன்னால் அது புது வாழ்க்கையைக் குறிக்கிறது. இங்கு இரண்டு குழந்தைகளைப் பெற்றுவிட்டால் போதும், போதும் என்று ஆகிவிடுகிறது.

ஆனால் ரஷியாவில் 12 குழந்தைகளைப் பெற்றவர்களும் சந்தோஷமாக இருக்கிறார்கள்.

ரஷியப் பெண்கள் சமஅந்தஸ்து பெற்றிருக்கிறார்கள்: அடுத்த ஜென்மத்தில் நான் பெண்ணாக பிறக்க நேர்ந்தால் ரஷிய பெண்ணாக பிறக்கவே ஆசைப்படுகிறேன்.

ரஷியாவில் பள்ளிக்கூடத்தில் படிப்பவர்களில் பாதிப் பேர் பெண்கள். மாஸ்கோ கலாசாலையில் 1,500 வாத்தியார்கள் இருக்கிறார்கள். அதில் பாதி பேர் பெண்கள். அங்கு என்ஜினியராகக்கூட பெண்கள் இருக்கிறார்கள். ரஷியாவில் பெண்ணாக பிறப்பதே ஒருபாக்கியம். அதற்கு கொடுத்து வைக்க வேண்டும் என்று சுத்தானந்த பாரதியார் கூறி முடித்தார்.

வேல் தைலம்
தலைவலி, ஜலதோஷம், வாதம் ஜன்னி முதலியனவிக்களுக்கு சிறந்த நிவாரணி

லக்சாலி
செரிமானத்தை முதலாக கொண்ட முதலியகல் காமவியாதிகளை குணப்படுத்துகிறது

கோபால் பல்பொடி
பல்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளை குணமாக்குகிறது

எஸ்.பி.எஸ்.ஜெயஜீவி
அவுடிப்பு மருந்து
அஜீரணவலி உண்டாதம் தலைவலி ஜலதோஷம், தீரேகவலி, காய்ச்சல்

அமிர்தா வாய்வு சூரணம்

இது சகலவிதமான வாய்வு தொந்தரவு, வயிற்றுவலி, புளிச்ச ஏப்பம், வாந்தி, அஜீரணம், இடுப்புவலி முதுகுவலி, பசியின்மை, சூதக வயிற்றுவலி, இருமல், இளைப்பு, ஆஸ்த்மா முதலிய வியாதிகளுக்கு நிச்சய நிவாரணி. கர்ப்ப ஸ்திரீகளுக்கோர் நல்ல மருந்து.

டின் விலை ரூ. 2-00 தபால் செலவு வேறு

நேத்திரா அமிர்த தைலம்

இதை நாள்தோறும் பாவித்துவந்தால் பீனிஸம், ஒருத்தலைவலி, பித்தக் கிறுகிறுப்பு, தூக்கமின்மை, மாலைக்கண், கண்கூச்சல், கண்ணெரிச்சல், நீர்வடிதல் முதலிய வியாதிகள் சுகமாகும். அளவுக்கு மிஞ்சிய உஷ்ணத்தைத் தணிக்கும். கண்களுக்குப் பிரகாசத்தையும், கூந்தலை அழகாகவும், கறுப்பாகவும் வளரச்செய்யும்.

12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா 4-50.
6 அவுன்ஸ் புட்டி விலை ரூபா 2-50.

தபால் செலவு வேறு.

T. K. (டி. கே.) ''மார்க்'' இருக்கிறதா என்பதைப் பார்த்து வாங்குங்கள்.

செல்லராஜா அன்கோ,

பாக்கியலெக்ஷ்மி வைத்தியசாலை

170, செட்டியார் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சினிமா வாழ யதார்த்த படங்கள் வேண்டும்

சினிமாக் கலையை பொது மக்களுக்கு அறிவூட்டவும், மகிழ்ச்சி யூட்டவும் உள்ள மகத்தான சாதனம் என்று அடிக்கடி சொல்லப் படுகிறது.

இதற்கு 'இந்திய சினிமா தொழிலில் மிக மிக முக்கிய தேவையாக உள்ளது அதன் தரத்தை உயர்த்துவது.... அதற்கு ஸ்டூடியோக்களில் நல்ல வேலை செய்யும் வசதி கள், கலைஞர்களுக்கும் டெக்னிஷன்களுக்கும் சரியான பயிற்சி, பணச் சிக்கனம் அவசியம்' என்று கூறப்படுகிறது.

''பொழுது போக்கும் படங்களுங்கு நான் வாக்களிக்கிறேன்'' என்ற கட்டுரையில் பிரபல இந்திய டைரக்டர் கே.அமரநாத்''நானும் என்னைப் போன்வர்களும் வர்த்தகத்துறையில் வெற்றியீட்டியுள்ளோம். எமது படங்கள்'முற்போக்கு' மகுடத்தில்விழுந்தவையல்ல. படங்கள்தனிப்பட்டோரின் தொழில்அவற்றைஉற்பத்தி செய்வதில் லாப நோக்கம் இருக்கத்தான் வேண்டும். படம் பார்க்கும் சாதாரண மக்கள் படத்தைப் பார்க்கும்போது எந்தவித மன உறுத்தலும் இருக்கப்படாது என்பதை விரும்புகிறார்கள். நான் சாப்பிட வேண்டும். நான் ஆதரிக்க ஒரு குடும்பம் உண்டு. பொழுது போக்குப் படங்களுக்கே எனது வாக்கை நான் ஊசலாடாது உறுதியோடு கொடுக்கிறேன்''

இவற்றைப் படிக்கும் போது 'வெள்ளித் திரையின் சகாப்தம்' ஆரம்பம் முதல் இன்றுவரை என் மனக்கண் முன் திரை ஓடியது. இந்திய பட உலகில் ஏதோ அழுகி நாறுவதாக நான் உணர்ந்தேன். இந்தியப் படங்களின் தரம் அதல பாதாளத்திற்கு இறங்கிவிட்டது. ஏதாவது உடனடியாகச் செய்யாவிட்டால் எதிர் காலம் பயங்கரமானதாகவும்—நாற்றமடிப்பதாகவுமே இருக்கும்.

இந்த சீர்கெட்ட நிலைமைக்கு 'பொழுது போக்கு' என்ற மகுடத்தில் வெளியாகும் குப்பைப் படங்களே காரணம் என்று நம்புகிறேன் இது ஒரு பெரும் பீடையாக நமது பட உலகத்தை கவ்விக் கொண்டுள்ளது. இத்தகைய படங்களுக்கு அமரநாத்தும் அவரைப்போன்ற சுயநல வெறி பிடித்தவர்களும் தூபமிடுகிறார்கள். இவர்கள் பட உலகம்பொன் முட்டையிடும் வாத்து என்று கருதுகிறார்கள்.

இவர்களுடைய முழு கவனமும் ''பக்ஸ் ஆபிஸிலேயே'' பணத்தேவதைக்கு இவர்கள் தங்கள் புத்தியை பணயம் வைத்ததோடு, தங்களின் மனச்சாட்சியையும் ஏலம் விட்டுவிட்டார்கள். பட உற்பத்திற்கு ஜெர்மன் யதார்த்தவாதம் சரியான சாட்டை கொடுக்கிறது. சினிமா உற்பத்தி ஒரு கலை. அதற்கு நேர்மையும், விஸ்வாசமான தியாக புத்தியும் வேண்டும். ''ஒரு நாட்டை அந்த நாட்டின் படத்தாலேயே அறியலாம்'' இந்திய மோடியில் அன்னிய சரக்குகளை திரையிடுவதை நிறுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது. படங்களை உற்பத்தி செய்வதற்கு ஒவ்வொரு நாட்டிலும் விலை மதிக்க முடியாத பொக்கிஷமான கருவூலங்கள் உண்டு. இதற்கு இந்தியா விதிவிலக்கல்ல. இரண்டு பிறப்பெடுத்த (இரு யுத்தங்களிலிருந்து) ஜெர்மனியர்களுக்கு முடிந்ததென்றால் ஏன் எங்களால் முடியாது.

எஸ் டப்ளியு. குல்கர்ணி
(நாக்பூர் நாடகக் கலை அக்கடமி செயலாளர்)

எமது சினிமாத் தொழில் ஒரு சில தனி நபர்களின் சொத்துடமை அல்ல என்பதை நாங்கள் ஞாபகத்திலிறுத்தவேண்டும். அது பொது மக்களின் சாதனம். எனவே அது மக்களுக்கு பொறுப்புள்ளதாக இருக்கவேண்டும். இன்று அது வெறும் ''மீன் சந்தை'' யாகவே உள்ளது. அது மக்களுடையதாக, மக்களுக்காக, மக்களாலேயே நிர்வகிக்கப்படுவதாக இருக்கவேண்டும்.

நாங்கள் ஒன்றுபட்டு, முதலீட்டை—கருத்துக்களை ஒருமிக்க குவித்து, தினசரி வாழ்வுச் சம்பவங்களிலிருந்து யதார்த்த படங்கள் தயாரிக்க முடியாவிட்டால் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது.

உயர்ந்த ''நட்சத்திரங்களுக்கு'' கொட்டி அளக்கப் படும் பெருந்தொகை பணவிரயத்தை நிறுத்தவேண்டும். அதற்குப் பதிலாக ஆற்றலும் ஆர்வமுமுள்ள புதிய கலைஞர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். வெட்டிக் கதைகளைவிட்டு யதார்த்த வாழ்விலிருந்து கருவுலங்களை பெறவேண்டும், படம் பார்ப்பவர்கள் காமவிகாரம் பிடித்த வெறியூட்டும் தப்பி ஓடும் பொழுது போக்குப் படங்களை விரும்பவில்லை. தம் வாழ்வுப் பிரச்னைக்கு வழிகாட்டும் படங்களையே பார்க்க விரும்புகிறார்கள்.

புதிய துறையிலே இந்திய சினிமா காலடி எடுத்துவைக்காவிட்டால்' கீழ்த்தரமான காமவிகாரப் படங்களை ஒழித்துக்கட்டி மக்கள் வாழ்வை அடிப்படையாகக் கொண்ட புதுமைப் படங்கள் வெளிவராவிட்டால் இந்திய சினிமா சீரழிந்து கெட்டொழியும் என்பது திண்ணம்.

'கண்ணோடு கண்' என்று காதல் மையலை கவிதாமேதைகள் கவினுற வர்ணிப்பர். ஆனல் அந்த காதல்மொழி பேசும் கண்கள் சந்தியாதே இவர்கள் பார்க்கிறார்கள், பேசுகிறார்கள்.

விரைவில் சென்ரல் படமாளிகையில் திரையிடப்பட விருக்கும் 'ஷாமா பர்வானு' என்ற படத்தில் ஷம்மி கபூரின் நெஞ்சகத்திலே துவழுகிறார் சூரியா. காஷியாப் புரடக்ஷன்ஸாரின் இந்தப் படத்தை டி. டி.. காஷியாப் டைரக்ட் செய்திருக்கிறார்.

கண்கள் திறந்தன!

அவன் அந்தகன். ஆனல் உலகைப் பார்க்கிறான். கண்கொண்டு பார்க்கிறான். எப்படித் தெரியுமா? அதோ, பிச்சையெடுத்தாலும் நீயே என் 'தெய்வம்' என்று கரம் பிடித்தவனின் கைவிடாது நிற்கும் தன் காதல் மனைவியின் கண்களைக்கொண்டே அவன் பார்க்கிறான். ஆனல் பிச்சைபோடும் அந்த கனவான் இருக்கிறாரே (மிஸ்டர் சகஸ்ரநாமம்) அவர் கண்ணுள்ள குருடன். தன் மனைவி கண்ணையிழந்துவிட்டாள் என்றதற்காக நம்பியவளை கைவிட திட்டமிட்டவர். இந்த கண்ணில்லா குருடனின் பத்தினியே அந்த கண்ணுள்ள குருடனின் கண்களைத் திறந்தாள். சினிமாஸ் லிமிட்டட் ஸ்தாபனத்தார் திரையிடும் 'கண்களி'ல் ஒரு காட்சி.

ஸ்டூடியோவில்

காவேரி:

திருஷ்ணு பிச்சர்ஸார் தமிழ் மக்களுக்கு பொங்கல் பரிசு தர 'காவேரியை' மடைதிறக்க விழைந்தார்களல்லவா? இப்போது பொங்கலுக்கு முன்னதாகவே வெள்ளித் திரையில் 'காவேரி' யை பாயவைக்க வேண்டும் என்று இரவும் பகலும் முழு மூச்சுடன் உழைத்து வருகிறார்களாம்.

நெப்டியூன் ஸ்டூடியோவில் 24 மணித்தியாலமும் ஓய்வு ஒளிச்சலின்றி படம் பிடிக்கப்பட்டுவரும் 'காவேரி'யில் சிவாஜி கணேசன், எம். என் நம்பியார், பீ. எஸ். வீரப்பா, புளிமூட்டை ராமசாமி, டி. பாலசுப்பிரமணியம், என். எஸ். கிருஷ்ணன், மதுரம், லலிதா, பத்மினி, ராகினி, குசலகுமாரி, ருஷ்யேந்திரமணி முதலிய பல நட்சத்திரங்கள் மிளிரப் போகின்றனர். ஏ. எஸ். ஏ. சாமி எழுதிய இக்கதையை யோகானந் டைரக்ட் செய்கிறாராம்.

அனர்கலி:

'அனர்கலி' தமிழ் பட உலகத்தில் ஒரு பெரும் ஆர்வத்தை தட்டி எழுப்புவதற்கு தயாராகிக்கொண்டிருக்கிறது. அஞ்சலி பிக்சர்ஸார் தயாரித்துவரும் இந்தப் படம் தமிழ் தெலுங்கு ஆகிய இரு பாஷைகளிலும் உருவாகி வருகிறது. நிப்டியூன் ஸ்டூடியோவில் வெகு வேகமாக தயாராகிவரும் இப்படத்தை வேதாந்தம் ராகவையா டைரக்ட் செய்கிறார். நாகஸ் வரராவ், அஞ்சலி தேவி, நாகையா, எஸ். வி. ரங்கராவ், கண்ணும்பா நடிக்கும் இப்படம் விரைவில் வெள்ளித் திரையிலே உலவ வரும் என்று நம்பப்படுகிறது.

மிஸியம்மா:

இன்று தமிழ் நாட்டிலே எத்தனையோ 'அறிஞர்கள்' தோன்றிவிட்டார்கள். இவர்கள் எல்லாம் எழுத்துத் துறையில், கலைத்துறையில், பேச்சுத் துறையில். எனவே சினிமாவிலே ஒரு 'அறிஞர் வேண்டாமா? இதோ ஒரு 'துப்பறிஞர்' இவர் யார் தெரியுமா? மிஸ்டர் தங்கவேலுதான். அவர் விசித்திரப் பிறவி. அவர் அறையும் அப்படித்தான். அறையில் நுழையும்போதே 'அடி' விழும். நுழைந்துவிட்டால் எத்தனை விசித்திரங்கள்.

இதெல்லாவற்றையும் விஜயா புரடக்ஷன்ஸாரின் 'மிஸியம்மா' வில் கண்டு களிக்கலாம். ஜெமினி கணேசன், ரங்கராவ், எம். என். நம்பியார், தங்கவேலு, சாவித்திரி, ஜமுனு முதலியோர் நடித்துள்ள 'மிஸியம்மா' சமீபத்திலேயே தமிழ் நாடு வெள்ளித் திரைக்குவரவிருக்கிறது.

வீர சுந்தரி:

தமிழ் நாடு எத்தனையோ வீரசுந்தரிகளை கண்டிருக்கிறது. ஆனல் இதெல்லாம் சங்ககால இலக்கியத்தில். இடையில் சிறு ஓய்வு. இது போலவே சிறிது கால 'மறைவு' க்குப்பின் சுந்தரி பிக்சர்ஸாரின் 'வீரசுந்தரி' புத்துயிர் பெற்றுவிட்டாள். வாஹினி ஸ்டூடியோவில் வளர்ந்து வரும் இவள் தமிழ் நாட்டு மாதர் குலத்திற்கு ஒரு பெருமையாக திகழப் போகிறாளாம். 'சுந்தரி' என்ற ஒரு வீராங்கனை. இவளின் வீர தீரச் செயல்களை சித்தரிக்கும் படம்தான் 'வீரசுந்தரி.' இந்தப் படத்தில் பயங்கர சம்பவங்களும் சண்டைகளும் திகிலுறுத்துகின்றனவாம், கே. பி. ஜே. சுந்தரம்பாள், பேபி டி. ஆர் ராஜகுமாரி, கே. பி. ஜானகிராம், ராஜம், அங்கமுத்து முதலியோர் இப்படத்தில் நடிக்கிறார்கள்.

நள்ளிரவில் நடந்தது:

என்ன பெயரைப் பார்த்ததும் அசந்து விட்டீர்களா? ஒரு புறம் ஏதோ திகிலும் மறுபுறம் இன்பக்கனவுகளும் தோன்றுகின்றனவா?

நள்ளிரவில் குழந்தையை கடத்திக் கொண்டு போய் விட்டார்கள். இது நடந்து பல ஆண்டுகள். பி. கே. சரஸ்வதி பெட்டியைத்திறந்தாள். குழந்தையின் சட்டைகள் அவள் கண்ணில் பட்டன. நீராருகப் பாய்கிறது. ரேவதியின் இந்தப் படத்தில் டி. ஆர். ராமச்சந்திரன் தங்கவேலு, சிவதாணு, டி. கே. பாலச்சந்தர், பி. கே சரஸ்வதி, எஸ். டி. சுப்புலட்சுமி முதலியோர் நடிக்கிறார்கள். வேம்பு டைரக்ட் செய்கிறார்.

நரம்புச் சக்தியும் இருதய பலமும் ரெனி

நரம்புப் பலவீனம், மூளை பலவீனம், மறதி, மயக்கம், தூக்கமின்மை, மூலச்சூடு, இரத்தக் கொதிப்பு, திரேக வறட்சி, ஊறல், தடிப்பு, உஷ்ணம், முதுகுவலி, இடுப்பு வலி, உடம்பு கை கால் வலி, அசதி, பசியின்மை, வயிற்றுநோவு, நெஞ்சு நோவு, இருதயத் துடிப்பு, நாட்பட்ட வாய்வு ரோகங்களைத் தீர்த்து திரேக சக்தியை அதிகப்படுத்தும்.

விலை ரூ. 5-85 சிறியது ரூ. 3.25 வி.பி.பி.தபால்செலவு வேறு

சென்ற் மேரி வைத்தியசாலை,
201,செட்டியார்தெரு,கொழும்பு

தினகரன், சுதந்திரன்

குறுக்கெழுத்துப் போட்டிகளுக்கு விரிவான விமர்சனங்கள் அடங்கிய பத்திரிகை

'கனேஷ்'

தனிப்பிரதிக்கு 30சதஸ்டாம்பு அனுப்பிப் பெறலாம்.

வருட சந்தா ரூ. 3-00

சோல் ஏஜன்ஸீஸ்:
மோகன் & கோ லிமிட்.,
74,டாம்வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்பின்ஸ்டன் — காலை 10, பி. ப. 2, மாலை 6, இரவு 9-30 மணிக்கும்

ரொக்ஸி — பிற்பகல் 2, மாலை 6, இரவு 930மணிக்கும்

பி. எஸ். சரோஜா, - ஏ. நாகராஜன் நடித்த

"மாங்கல்யம்"

வெள்ளி முதல்!

லலிதா, ராமசாமி நடித்த

கனவு



ஆங்கிலம் அதிகார பீடத்தி....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மொழிகளிலுள்ள பதங்களிலனேகம் பகுபதங்களாயிருப்பதனல் எக்கருத்துக் கொண்ட எப்பதத்தையும் ஆக்க முடியும். பெருவிஷயங்கள் ஒன்றும் இலேசாக அடைய முடியாது.

சுயபாஷைகள் அரசியல் மொழியாவதும் முடியாத காரியமல்ல. ஒரேயொரு நாட்டை உதாரணமாக எடுப்போம். ஹங்கேரி (Hungary) நாடு மோடியா (Magyars) சாதியினருடைய நாடு. அந்நாட்டில் அரசியல் மொழியாகப் பல நூற்றாண்டுகளாக உபயோகிக்கப் பட்டபாஷை இலத்தினுகும். ஆஸ்திரியா நாட்டுடன் இணைக்கப்பட்ட காலத்தில் ஜெர்மன் மொழி அரசியல் மொழியாக்கப்பட்டது. இவற்றுல் மக்களின் மனத்தில் புழுக்கம் ஏற்பட்டது.

1839-ம் ஆண்டு அவர்கள் தங்கள் தாய்ப் பாஷையாகிய மொடியரை (Maaggyar) அரசியல் மொழியாக்கினர். இந்த ஆண்டிற்கு முன்னர் இம்மொழி ஏழை மக்களால் மாத்திரம் பேசப்பட்ட ஓர் மொழியாயிருந்தது. இது போலவே எத்தனையோ நாடுகளில் புரட்சிகள் ஏற்பட்டன. எங்கள் நாட்டில் மாத்திரமா இது போன்ற காரியம் முடியாமலிருப்பது.

''ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே''

முருகன் தியேட்டர்

(ஜிந்துப்பிட்டி)

தினசரி மாலை 6-00 மணிக்கும், இரவு 9-30 மணிக்கும்,
சனி, ஞாயிறு பிற்பகல் 2 மணி, மாலை 6 மணி, இரவு 3-30 மணிக்கும்
ஞாயிறு காலை 10 மணிக்கும் காட்சிகள்.

மாதக்கணக்கில் ஓடி மக்கள் மனத்தை முற்றிலும் கவர்ந்த "பிச்சைக்காரி" மீண்டும் காட்சியளிக்கிருள்!

அவள் கீழ் சாதியில் பிறந்தவள். மனித அபிலாஷைகள் அவளுக்குமுண்டு. காதலிக்கப்பட்டாள் - காதலன் பெரிய பண மூட்டையின் தம்பி. காதல் தெய்வீகம் என்ற உண்மையை நன்கறிந்தவன் - இருவரின் காதலும் மலர்ந்தது. ஆலைச்சமுதாயத்தின் ஏகப்பட்ட எதிர்ப்பு-வீட்டை விட்டவேண்டியதாயிற்று .....துன்பத்தின் இறுதி இன்பந்தானே! இது இவர்களுக்கும் பாதகமா என்பதற்கு வெள்ளித்திரை விடையளிக்கும்.

மேரி மக்டலீன் நாடகத்தைக் காணத் தவருதீர்கள்.

குடும்ப சமேதரராய்ப் பார்த்து மகிழவேண்டிய படம்.

பி. எஸ். சரோஜா, சுகுமாரன்நாயர்

பேபி கிரிஜா நடித்த

"பிச்சைக்காரி"

அபிமானிகளுக்கும், வாடிக்கைக்காரர்களுக்கும் சிலோன் எண்டர்டெயின்மென்ட் ஸ்தாபனத்தாரின்

மங்களமான புத்தாண்டு வாழ்த்துக்கள்!

1955ம் ஆண்டில் உங்களை மகிழ்விக்க இருக்கும் "பொக்ஸ் ஆப்பீஸ்" படங்களை எதிர்பாருங்கள்!!

ரஞ்சன் & வரலக்ஷ்மி நடித்த என் மகள் (தமிழ்)

கே. ஆர். ராமசாமி, சிவாஜி கணேசன் நடித்த செந்தாமரை (தமிழ்)

சிவாஜி கணேசன் & பத்மினி நடித்த முதல் தேதி (தமிழ்)

சிவாஜி கணேசன் & பத்மினி நடித்த ராஜா - ராணி (தமிழ்)

வெற்றிமுரசுகொட்டும் மகத்தான 2வது மாதப்!

சென்ட்ரல் (கொழும்பு)

ராணி (யாழ்ப்பாணம்)

போகம்பரை (கண்டி)

தினசரி மாலை 6, இரவு 9-30மணி, ஞாயிறு பிற்பகல் 2-30, மாலை 6, இரவு 9-30 மணிக்கும்,
ஞாயிறு காலை 10 மணிக்கும் காட்சிகள்.

மனத்தை உருக்கி கண்ணீர் வடிக்கச்செய்யும்
மறக்க முடியாத உன்னத தீரை ஓவியம்!

வாழ்விலும் சாவிலும் நமக்கு வேண்டியவள் தாய்
- அவள் பாசம்.

குடும்பம்

(தமிழ்ப் படம்.)



சாவித்திரி, ஜி. வரலக்ஷ்மி, துரைராஜ்,
ஸ்ரீராம், டி. கே. ராமச்சந்திரன், தங்கவேலு நடித்தது.

யுனைடெட் [பண்டாரவளை] ராணி [கொச்சிக்கடை]

எம். ஜி. ராமச்சந்திரன், பி. பானுமதி நடித்த

"மலைக்கள்ளன்"

பின்னணி: வசந்தகுமாரி, பெரியநாயகி, ஜிக்கி, ராஜா, லீலா, கண்டசாலா, சவுந்தரராஜன், ராமராவ்.

போன்: 5033.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவும் சீரணமும் (2):

உணவும் சத்துக்களும்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

உலோகச் சத்துக்கள்:—

இவை உடல் தசைகளை ஆக்கவும், புதுப்பிக்கவும் உதவுகின்றன. நாம் பல உலோகச் சத்துக்களை உபயோகிக்கின்றோம். அவைகளில் முக்கியமானவைகளைப் பற்றி அறிந்துகொள்வதவசியமாகும்.

இரும்பு:—

இரத்தத்தின் சிவப்பு அணுக்களை உண்டாக்குகிறது. சிவப்பு அணுக்கள் (Red Corpuscles) தான் நுரையீரல்களிலிருந்து இரத்தத்திற்குப் பிராண வாயுவை

என். பி. கே. லிங்கம்

(Oxygen) கொண்டு செல்பவை. இரத்தச் சோகை (Anaemia) என்ற நோய்க்கு மூலகாரணம் இரத்தத்தில அயச்சத்து போதியளவு இல்லாததுதான். இச்சோகை பிடித்தவர்களுக்குச் சோர்வு அதிகமிருக்கும். உணவில் அயச்சத்துக் குறைவாக இருப்பதினாலேயே இந்த நோய் ஏற்படுகிறது, வெல்லம், பருப்பு வகைகள், கோதுமைத் தவிடு, பசளிக் கீரை இவைகளில் அயச்சத்து அதிகமாகவுண்டு.

கால்சியம்:—

(Calcium)-பாஸ்பரஸுடனும் விட்டமின் டி-யுடனும் சேர்ந்து நமது எலும்புகள் பற்களை உண்டாக்கிறது. இச்சத்து பற்களையும், எலும்புகளையும் உறுதியாக்கின்றன. இவை குறைவதினால் நமக்கு பருக்கள், பல் வியாதிகள் ஏற்படுவதுண்டு. இது பாவாடை, அவரை, போன்றவைகளில் காணப்படுகின்றது.

பொடாசியம்:—

(Potsasium) இச்சத்து உயிர் அணுக்களுக்கு மிக உபயோகமானது. இது பிராணவாயுவை எடுத்துக்கொள்ளவும் கரியமில வாயுவை வெளியில் போக்கவும் தூண்டுகிறது. தவிர நரம்புகளையும் பலமாக இருக்க உதவுகிறது. இச்சத்து பொதுவாக நாம் உண்ணும் மரக்கறி, பழங்களில் காணப்படுகின்றது.

மக்னியம்—

(Magnesium) இது முக்கியமாக இருதயத்தைப் பாதுகாக்கவும் மற்றும் இரத்தத்திலுள்ள சர்க்கரையை (Blood-Sugar) எரிக்கவும் உதவுகிறது. இச்சத்து பாலிலும், கீரை வகைகளிலும் காணப்படுகிறது.

கந்தகம்:—

(Suephur) இது நம் இரத்தத்தைச் சுத்தம் செய்ய உதவுகிறது, தலைமயிர் வளர்ச்சிக்கு இது அவசியமாகிறது. நீரழிவு ஏற்படாமல் சர்க்கரையை இரத்தத்தில் சரியாக இருக்கும்படி பாதுகாக்கிறது. கொட்டைப் பருப்புகள், தானியங்கள் முதலியவற்றில் நம் உடலுக்கு வேண்டிய கந்தகம் கிடைக்கின்றன. (தொடரும்)

அன்புள்ள மருமக்களே!

புத்தாண்டு பிறந்து விட்டது. புதுப் புது இன்பம்—புதுமையான அறிவு—அனுபவம் இவையெல்லாம் உங்களைத் தாவி வரக் காத்துக் கிடக்கின்றன.

புத்தாண்டுக்காக நீங்கள் எத்தனையோ புதுப்புதுத் திட்டங்களைதிட்டியிருப்பீர்கள். உங்களில் அனேகர்—ஏன் எல்லாருமே புதிய வகுப்பிலே பிரவேசித்திருப்பீர்கள். ஏனவே புதிய பாடங்கள்—புதிய அறிவுகள் பெற நீங்கள் தயாராகிக் கொண்டிருப்பீர்கள். சென்றுண்டிலும் புத்தாண்டில் உங்கள் படிப்பிலே மேலும் மேலும் வெற்றிபெற வேண்டுமல்லவா? விளையாட்டிலே, கலை—கலாச்சாரத் துறைகளிலே நீங்கள் புதிய சாதனைகளை சாதிக்க வேண்டுமல்லவா? புதிய இடங்களை நீங்கள் பார்க்க வேண்டுமல்லவா? எல்லாவற்றிற்கும் மேலாக வாழ்வுபற்றிய புதிய உண்மைகளை நீங்கள் பெறவேண்டுமல்லவா?

இவையெல்லாவற்றையும் நீங்கள் புத்தாண்டிலே சாதிப்பீர்கள் என்று நம்புகிறேன். இதற்கு உங்களின் 'மாணவர் மன்றம்' முடிந்த அளவு உதவ காத்து நிற்கிறது. புதிய துறைகளில் புதுமையான கட்டுரைகளை எழுதுங்கள்.

புத்தாண்டை தளிர்க் கரங்கள் கொண்டு வரவேற்று உவகைக் கூத்தாடும் உங்களுக்கு எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

சுதந்திரன் மாமா.

நல் ஆழுகம் (')

மது அருந்தாதே!

மதியை மயக்கும் மதுவை அருந்தி இளம் வயதிலேயே தங்கள் வாழ்நாளைப் பாழாக்கிக்கொண்ட இளைஞர்கள் பலர் இருக்கிறார்கள்; அவர்கள் இதனால் படும் அவஸ்தையையும் அல்லலையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

எமது அண்டை நாடாகிய பாரதத்தில் மது வொழிப்பு மசோதாவை அமுலுக்குக் கொண்டுவந்தும், இன்னும் கள்ளச் சாராயம் காய்ச்சுதல் முதலிய ஊழல்களையும், சட்ட விரோதமான செய்கைகளைப்பற்றியும் அறிகிறோம். இவ்வளவு கட்டுப்பாடுகளையும் மீறி மனித இனத்தையே செல்லரித்து வரும்மதுவைப்பற்றி ஓரளவு அறிந்து, அதனால் ஏற்படும் தீமைகளையும் அறிந்து இத்தீய அரக்கனிடமிருந்து எக்காலத்திலும் விலகிக் கொள்ள மாணவர்கள் வழி வகைகள் தேடிக்கொள்ள வேண்டும்!

மதுவைத் தயாரிப்பதற்கு முதலில் மாச்சத்து (Starch) அல்லது சீனிச் சத்துள்ள (Sugar பொருட்களிலிருந்தே தொடங்க வேண்டும். உதாரணமாக மாச்சத்தை உபயோகித்தால் முதலில் அதை சீனிச் சத்தாக மாற்ற வேண்டும். பின்பு டயஸ்ரேஸ் (Diastase) சத்துள்ள பொருட்கள் ஏதாவதையும் சேர்த்து வடிகட்டப்பட வேண்டும். ஈஸ்ட் (Yeast) முதலிய இச்சத்து நல்கும் பொருட்களைச் சேர்த்த வுடன் சீனிச் சத்து கரியமல வாயுவாகவும் மதுவாகவும் (Carbondioxide and alcohol) மாற்றப்படுகிறது.

இவ்வாறு தயாரிக்கப்படும் மதுதான் மக்கள் வாழ்வைப் பாழாக்கி உடல் நலனைக் கெடுக்கிறது. இது நல்கும் உணர்ச்சியில்தான் திளைத்து உலகம் போற்றும் கலைக் களஞ்சியங்களை ஈந்தனர்

நா. மு. குமாரசிங்கம்

ஷெல்லி (Shelley) மாப்பஸான் (Maupassant) ஒஸ்கார் வைல்ட் (Oscar wilde) முதலிய பேரறிஞர்கள். இவர்கள் இத்தகைய நூல்களை ஆக்குவதற்கு ஊக்கமும் உணர்ச்சியும் அளித்தது மதுதான், இளவயதில் இவர்களை இயற்கை எய்தச் செய்ததும் மதுதான் எனச் சொல்லத் தேவையில்லை.

ஒருவன் மது அருந்தும் பொழுது வயிற்றிலுள்ள மெல்லிய ஜவ்வை (Lining Membrane) க் கடந்து இரத்தத்துடன் கலக்கின்றது. பின்பு இருதயம் உணர்ச்சியால் அதிகமாகத் துடிக்கின்றது. இதனால் வெகுவேகமாகச் சுவாசிக்க வேண்டியும் இருக்கிறது. உடலிலுள்ள எல்லா உறுப்புகளும் மது அருந்தினால் வெகு வேகமாக இயங்குகின்றது. இதனால் தான் பலர் குளிர் காலத்தில் மது அருந்தினால் உடலுக்கு உஷ்ணம் நல்குகின்றது என அபிப்பிராயம் கொண்டிருக்கின்றனர். அதனால் அதிகம் மது அருந்தவும் செய்கின்றனர். ஆனால் உண்மையில் உடலில் உஷ்ணத்தைக் குறைத்து அதனால் தோலின் கீழ் உள்ள இரத்தக் குளாய்கள் உணர்ச்சியற்றும் போகவே ஏதுவாகிறது.

(தொடரும்)

விஞ்ஞான ஆராய்ச்சி:

ஒளியின் இயல்பு

சூரிய ஒளியை (Sunlight) விஞ்ஞானரீதியில் ஆராய்ந்து பார்ப்போமேயானால், அதன் இயல்பும், குணங்களும் நமக்கு நன்கு புலப்படும். உதாரணமாக; ஐலவாயு (Hyrogen), 'குளோநின்' (Chlonine) என்னும் மற்றையவாயுவுடன் சேரும் (Combine) பொழுது சூரியவெளிச்சம் அங்குதேவைப் படுகின்றது. சூரியவெளிச்சம், அந்தரசாயன சேர்க்கையில் ஒரு

வெ. செ. குணரத்தினம்

'ஊக்கியாக' (Cotalyst) கடமைபுரிகின்றது. அதன் பின்புதான் 'ஹைட்றஜன் குளோறயிட்' (Hydrogen chloride) உண்டாகும். இனி சூரிய ஒளியின் இயல்பைப் பார்ப்போம்.

சூரிய ஒளியை நாம் உற்று நோக்குமிடத்து, அது நிறமில்லாமல்(blank) தோற்றம் அளிக்கின்றது. ஆனால் அதே சூரியவெளிச்சத்தில், ஏழுவித வர்ணங்கள் அமையப் பெற்றிருக்கின்றன. இவ்வேழு வர்ணங்களையும் நாம் வானவில்லில் (Rainbow) காணமுடியும். அவையாவன 'வைலட்' (Violet), 'இன்டிக்கோ' (indigo), 'ப்புளூ' (Blue), 'க்கிரீன்' (green) 'யல்லோ' (Yellow), 'றெட்' (Red), 'ஆரன்ஜ்' (orange) என்பனவாகும். சூரிய வெளிச்சத்தைப் பிரித்தால் (Analysis) மேற்படி வர்ணங்களை நாம் பெறமுடியும். இந்த ஏழு வர்ணங்களையும் 'ஸ்பெக்ட்றம்' (Spectrum) என்று கூறப்படும். சூரிய வெளிச்சத்தைப் பிரித்து அதிலிருக்கும் இவ்வேழு வர்ணங்களையும் முதன் முதல் கண்டறிந்தவர் 'சேர் ஐஸாக்நியூட்டன்' Sir Isaac Newton) என்ற விஞ்ஞானியாகும்.

பிளாஸ்டிக் பொடி Plastic Body) யுடன் கூடிய இந்த விசித்திர மோட்டார் சைக்கில் பிரிட்டனில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதில் சௌகரியமாகப் பிரயாணம் செய்வதற்கும் இயந்திரம் பழுதாகாமலிருப்பதற்குமாக பல வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதன் தயாரிப்பாளரான வின்சென்ற்றின் மனைவி திருமதி பிரேடாவின் சென் மோட்டார் சைக்கிளுடன் காட்சியளிக்கிறார்.

விஞ்ஞான அற்புதங்கள்

பனிக்கட்டி வைத்தியம்:

நோயாளிகளைப் பனிக்கட்டியில் தூங்கவைத்து நோயை நீக்கும் ஒரு விந்தை முறையை டாக்டர் டெம்பிள் எஸ். பாவ் (Temple S. Pav) என்பவர் பரீட்சித்து வெற்றிகண்டுள்ளார். இம்முறையைச் சிலந்திப் புண்கள் உடையவர்களிடமே பரீட்சித்துள்ளனர். வியாதியானவர்கள் நிர்வாணமாக பனிக்கட்டிகளால் மூடப்படுகின்றனர். உஷ்ணம் 90 டிகிரிவரை குறைந்ததும் நோயாளி தூங்கிவிடுகின்றான். சில மணிநேரத்தின்பின் நோயாளி நோய் நீங்கப்பெற்று கண் விழிப்பதாகச் சொல்லப்படுகின்றது.

கடிகார ஒலி:

லண்டனில் உயர்கோபுரத்தில் பிக்பென் (Big Ben) கடிகாரம் ஒன்று இருக்கிறது. அக்கடிகாரம் மணி அடிக்கும்போது அம்மணி ஒலியைக் கீழ் வாழும் லண்டன் மக்கள் கேட்குமுன்னமே பல மைல்களுக்கப்பால் இருக்கும் ஆஸ்திரேலிய மக்கள் கேட்டு விடுகின்றனர். பி. பி. ஸி. (B. B. C.) வானொலி நிலையத்தார் உச்சி மீது அம்மணி அடிக்கும்போதே அவ்வொலியை வானொலிமூலம் பரப்புகின்றனர். வானொலி அலைகள் ஒரு செக்கனுக்கு 1,86,000 மைல் வீதம் செல்லுகின்றன. ஆனால் ஒலி அலைகள் ஒரு மணிக்கு 700 மைல்கள் தான் செல்ல முடியும். எனவே கீழ் வாழும் மக்களுக்கு மணியோசை எட்டமுன், ஆஸ்திரேலியருக்கு எட்டி விடும். விசித்திரம்தான் என்னே!

எஸ். வேலு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகச் செய்திகள்

பிரியாவிடை

வாழைச்சேனை அரசினர் ஆண்பாடசாலையிலிருந்து 40 வருட சேவையின் பின் இளைப்பாறிச் செல்லும் திரு பி. சோமநாதன் ஆசிரியருக்கும், கறுக்காமுனை அரசினர் கலவன் பாடசாலைக்கு மாற்றலாகி செல்லும் திரு ஏ. எம். கனகசபை ஆசிரியருக்கும் திரு எஸ். கனகரேத்தினம் தலைமையில் பிரியாவிடைக் கூட்டம் நடைபெற்றது.

உதவி ஆசிரியர்கள் மௌலவி ஐ. எல். ஏ. ஜுனைத் திரு எம். சதானந்தன் பழைய மாணவன் வை. எம். முஸ்தபா (யூனியன் மனேஜர்) ஆகியோர் இரு ஆசிரியர்களினதும் சிறந்த சேவையைக் குறித்துப் பேசினர்கள்.

எல்லாள வாலிப முன்னணி

கொழும்பு எல்லாள வாலிப முன்னணி இயக்கத்தின் முதலாவதுபொதுக் கூட்டம் 5-12-54ல் 162, நீர் கொழும்பு வீதியில் ஆசிரியர் ந. வேலுப்பிள்ளை தலைமையில் ஆரம்பமாகியது. திருவாளர்கள் எஸ். செல்வராஜன் அ. குணசிங்கம் என்போரும் இளைஞர்களின் கடமையையும்எடுத்துக் காட்டினர்கள். அடுத்து திரு எ. ஜே. சிறில் பேசுகையில், நீர்ப்பாசனதிட்டங்கள் மூலமாக தமிழ் பிரதேசங்கள் சிங்கள பெரும் பான்மை பகுதிகள் ஆக்கப் படுகின்றன. இலங்கையில் வாழும் தமிழ் இனத்தின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கத்துடன்எத்தனையோ மலை நாட்டுத் தமிழர்களை இந்தியர் என நாடு கடத்துகின்றனர் என்று கூறினர். கடைசியாக செல்வி பூமலர் செல்லத்துரை பேசினர். திரு கே. சு. சிவநேசன் தமது அறிக்கையில் 107 அங்கத்தவர்கள் புதிதாக மனுப்பண்ணியுள்ளதாக ஓர் சந்தோஷ செய்தியை கொண்டுவந்து எல்லோருக்கு கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் கூறி கூட்டத்தை 1955-ம் ஆண்டு தைமாதம் 4-ம் திகதிக்கு ஒத்தி வைக்குமாறு கேட்டுக் கொண்டார் சபை அதை ஏற்றுக்கொள்ளவே கூட்டம் இனிதே முடிவுற்றது.

வடமாகாண அதிபருக்கு ஊரதீவு மக்களின் வரவேற்பு

வடமாகாண அதிபர் திரு ம. ஸ்ரீகாந்தா ஊரதீவுக்கு முதன் முதல் விஜயம் செய்த ஞான்று ஊரதீவு கிராமமுன்னேற்றச் சங்கத்தினர் 12-12-54 ல் மகத்தான வரவேற்பொன்று அளித்தனர். சங்க மண்டபத்தில் பொதுக் கூட்டம் அதிபர் தலைமையில் நடைபெற்றது. சங்கத் தலைவர் திரு சி. நா. பாலசிங்கம் ஆசிரியர் வரவேற்புரை நிகழ்த்தினர். சங்கச் சார்பில் வரவேற்புப் பத்திரமொன்றை திரு இ. க. கணபதிப்பிள்ளை ஆசிரியர் வாசித்தளித்தார். தீவுப் பகுதிக் காரியாதிகாரி திரு செ. சிவஞானம் திரு வி, கே. சுப்பிரமணியம் திரு க. குமாரசாமி திரு க. செல்வத்துரை ஆசிரியர், திரு எ. வி. இராசகுலசிங்கம், சாஜன்க்ற்திருஇராமநாதன் ஆகியோர் சொற் பொழிவாற்றினர்.

ஊரதீவு மாதர் சங்க அங்குரார்ப்பணம்

வடமாகாண அதிபர் திரு ம. ஸ்ரீகாந்த அவர்கள் தலைமையில் ஊரதீவு மாதர் சங்கம், கிராம முன்னேற்றச் சங்க ஆதரவில் 12-12-54 ல் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தலைவியாக திருமதி நல்லதம்பி நல்லதங்கம், உபதலைவியாக திருமதி சின்னத்தம்பி வள்ளியம்மை, காரியதரிசியாக திருமதி அருளம்பலம் பராசக்தி, உபகாரியதரிசியாக திருமதி நமசிவாயம் நல்லம்மா, தனதிகாரியாகத் திருமதிஐயம்பிள்ளை அமிர்தம்மாவும் நிர்வாக சபை அங்கத்தவராக வேறு நால்வரும் தெரிவு செய்யப் பட்டனர்.

நாவலர் விழா

அகில இலங்கைச் சைவ இளைஞர் மகாசபையினரால் சென்ற 15-12-54 ல் இணுவில் சைவமகாசன வித்தியாசாலையில் மேற்படி பாடசாலை ஆசிரியர்களதும்மாணவர்களதும் ஆதரவுடன் நாவலர்விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

முற்பகல் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை ஆசிரியர் திரு வ. நடராசா தலைமை வகித்தார். திரு பொன். கருணாகரர் 'நாவலரின் நன்மொழிகள்' என்னும் பொருள் பற்றியும், கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு பண்டிதர் திரு ஆ. சின்னத்தம்பி 'நாவலரும் சைவமும்' என்னும் பொருள் பற்றியும், பேசினர்கள். மாவிட்டபுரம் கிராமவிதானை திரு இ. துரைசுவாமியும் சிவஸ்ரீ ச. மறைக்காட தேசிகமும் இடையிடையே திருமறைப் பாக்களை ஓதினர்கள்.

பிற்பகல் நிகழ்ச்சிகள் இணுவில் கந்தசுவாமி கோவில் வாசலிலிருந்து ஆரம்பமான ஊர்வலத்துடன் ஆரம்பமாயின. பிற்பகல் நிகழ்ச்சிகளுக்கு திரு வி. வீரசிங்கம் எம். பி. தலைமை வகித்தார். கூட்ட அறிக்கைகள் வாசிக்கப்பெற்றபின் உத்தியோகத்தர் தெரிவு நடை பெற்றது. தலைவர்: திரு வி. வீரசிங்கம் எம். பி. உபதலைவர்கள்: திரு சி. நாகையா, திரு ஆ. தியாகராசா திரு டி, டி. ஜெயரத்தினம், ஆர். என். சிவபிரகாசம் (இந்துசாதன ஆசிரியர்) திருசே, தியாகராசாகாரியதரிசி: ஆசிரியர் திரு வே. சங்கரப்பிள்ளை, தனதிகாரி: திருவை. கந்தையாஆசிரியர். பரிசோதகர் திரு வ. சோமசுந்தரம் நிருவாகசபை அங்கத்தவர்களாக 16 பேர் தெரிவு செய்யப் பெற்றனர்.

பாலர் முன்னேற்றக் கழகம்

தட்டாரத்தெரு பாலர் முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் பிறந்ததின விழா 19-12-54ல் கழகத் தலைவர் மா. சண்முகம் தலைமையில் கொண்டாடப்பட்டது. கழக மாணவ மாணவிகள் பேச்சு போட்டியிலும் தேவாரத்திலும் பங்கு பற்றினர்கள். விலக்கப்பட்ட தனதிகாரி எம். டி. குருசுக்கு பதிலாக செல்வன் க. ஆனந்தகுமாரசுவாமி தனதிகாரியென ஏகமனதாகத் தெரிவு செய்யப் பட்டார்.

பழைய மாணவர் சங்கக் கூட்டம்

மஹறகம கபூரியா அரபிக் கலாசாலை பழைய மாணவர் சங்க வருடாந்தக் கூட்டம் 12-12-1954ல் கல்லூரி அதிபரும் சங்கத் தலைவருமான மௌலவி ஷம்சுத்தீன் (பாகவி) தலைமையின்கீழ் கல்லூரி மண்டபத்தில் கூடிற்று. கூட்டம் மாணவர் எம். எஸ். அபூதாஹிரின் கிரு அத்துடன் ஆரம்பமாயிற்று.

சங்கக் காரியதரிசி மௌலவி எஸ். எம். ஏ. எம். முஸ்ஸம்மில் (கபூரி) அவர்களால் சென்ற கூட்ட நிகழ்ச்சி, சென்ற வருட அறிக்கை, வரவு செலவு விபரம் ஆகியன சமர்ப்பிக்கப்பட்டன. அடுத்தபடியாக நடப்பு வருட உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்ட விபரம் பின்வருமாறு:

தலைவர்: கல்லூரியின் அதிபர் மௌலவி முஹம்மது ஷம்சுத்தீன் (பாகவி) உபதலைவர்: மௌலவி யு. ஏ. உபைதுஸ்ஸத்தார் (அஹ்ஹரி) கூட்டுக் காரியதரிசிகள்: மௌலவிகளான எஸ். எம். ஏ. எம். முஸ்ஸம்மில் (கபூரி) செய்யிது றூஹுல் ஹக் (கபூரி) தனதிகாரி: மௌலவி வி. எஸ். எஸ். புகாரி (பாகவி). நிர்வாகக் குழு: (சங்க உத்தியோகத்தருடன்) மௌலவிகள் அலவி அப்புல் ஹஸன் எம். ஏ. (அல் அஸ்ஹர்) பி. ஏ. என். பி. முஹம்மது கஸ்ஸாலி (அப்ஸல் உலமா) அல் ஹாஜ் மௌலவி கொ. கா. மு. அபூபக்கர் ஆலிம்.

பெற்றூர் தினவிழா

உடப்பு அரசினர் உயர்தர தமிழ் பாடசாலை பெற்றூர் தினவிழா கடந்த 3-12-54ல் நடைபெற்றது.

விசுவாசப் பிரமாண அதிகாரி திரு ந. சிற்றம்பலம் விழாவுக்குத் தலைமை வகித்தார். பாடசாலை வருடத்துக்கு வருடம் அதிசயிக்கத் தக்க முறையில் அபிவிருத்தியடைந்து வருவதைப் பாராட்டிவிட்டு "இனிமேல் பெற்றூர் கேளாமலே ஒத்துழைப்பர். ஏனெனில் ஒத்துழைப்பின் பலனை இன்று ருசித்துள்ளனர்" எனக் கூறித்தலைமை ஆசிரியரையும் உதவி ஆசிரியர்களையும் பாராட்டினர்.

உடப்புத் தனவந்தரும் ஒருவரான சலாபம் சிற்றம்பலங் குடும்பத்தார் சிறந்த மண்டபம் அமைத்துத்தர விருப்பதால் பாடசாலையின் இடநெருக்கடி விரைவில் நீங்கும் என நம்பிக்கை தெரிவித்து ஒத்துழைத்தவர் அனைவர்க்கும் தலைமை ஆசிரியர் நன்றி தெரிவித்தார்.

இந்து சன்மார்க்க சங்கம்

உணுப்பிட்டி இந்து சன்மார்க்க சங்கத்தின் ஆதரவில் மேற்படி மண்டபத்தில் ஆறுமுகநாவலரின் குருபூசை சமீபத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பூசை நைவேத்தியத்துக்குப் பின்னர் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. இறுதியாக எல்லோருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டு விழா இனிது முடிவுற்றது.

கொலை வெறி தடுத்து சாந்தி...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தர்ப்பங்களில் இராணுவ ரீதியாக அவர்களை அமெரிக்கா உற்சாகப் படுத்தி வருகிறது. இன்னும் அவர்களின் ஹோட்டல்கள் வேறு ரயில்கள் வேறு, உலகசுதந்திரப் பிரகடனப் படுத்தும் அமெரிக்காவின் மனப்பான்மையே இவ்வாறு இதுகாறும் மாறுதலடையாமல் இருந்துவருகிறதென்ற ஏனைய நாடுகளின் ஏற்றத் தாழ்வு மனப்பான்மைகளைச் சொல்லவும் வேண்டுமா? வெள்ளையன், கறுப்பன், என்ற வேறுபாடுகளை, உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடுகளை, முதலாளி, தொழிலாளிப் பிரச்னைகளை இஸ்லாத்தினால்தான் பஸ்மீகரமாக்க முடியுமென்பதை முஸ்லிம்கள் அமெரிக்கர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். இஸ்லாத்தின் லட்சியங்கள் பரந்தவை. அதன் குறிக்கோள் விரிவானது. அது உலக சகோதரத்துவத்தையே தனது லட்சியமாகக் கொண்டது என்பதை முஸ்லிம்கள் நடைமுறையில் எடுத்துக்காட்டவேண்டும்.

இ. தி. மு. க. இரத்தினபுரிக் கிளை

இ. தி. மு. க. இரத்தினபுரிக் கிளையின் சார்பில் கடந்த 11-12-54ல் இரத்தினபுரி வாசிகசாலையில் ஒரு பொதுக் கூட்டம் திரு டி. எம். பீர்முகம்மது தலைமையில் நடைபெற்றது.

திருவாளர்கள் எம். ஐ. ராசமணி 'மதம்' என்னும் பொருள்பற்றியும் திரு கே. எஸ். எம். கலாநேசன் "தி. மு, கவும் தீந்தமிழும்" என்னும் பொருள்பற்றியும், திரு என். கதிரவன் "குமரி கண்டம்" என்னும் பொருள் பற்றியும் சொற்பொழிவாற்றினர்கள்.

தமிழையும் தேசிய மொழியாக்க வேண்டுமென்ற தீர்மானத்துடன் அண்ணாதாஸன் நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது.

பெற்றோர் தினமும் பரிசளிப்பு விழாவும்

பொகவந்தலாவ பரிசுத்த மரியாள் பாடசாலையின் பெற்றோர் தினமும் பரிசளிப்பு விழாவும் சென்ற 27-11-54ல் பாடசாலை முகாமைக்காரர் வணக்கத்துக்குரிய சாம் டி. கோசிங்கரன் தலைமையில் நடைபெற்றது.

ஹற்றன் பகுதித் தமிழாசிரியர் சங்கக் காரியதரிசி திரு டொ. சை. க. வனசிங்கம் பேசுகையில் உயர்தர வகுப்புவரை மாணவர்களுக்கு அவர்கள் தாய்மொழியில் கல்வி போதிக்கப்பட வேண்டும் என்று கூறினர்.

பாடசாலை உதவியாசிரியர் திரு செ. ப. ஜீவானந்தம் வந்திருந்தோரை வரவேற்றுப் பேசினர். பாடசாலை தலைமையாசிரியர் திரு யே. கிரியோன் பாடசாலையின் வருடாந்த அறிக்கையை வாசித்தார். மாணவ மாணவிகளால் கதம்ப நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

கொள்ளுப்பிட்டி இ. தி. மு. க. கிளை

கொள்ளுப்பிட்டி இ. தி. மு. க. கிளையின் ஆதரவில் கடந்த 22-11-54ல் கிரீண் லேண்ட் ஹோட்டலில் விருதைதனிஅரசு' ஆசிரியர் திரு ஆசைத்தம்பியவர்கட்கு தோழர் எஸ். கே. சுந்தரராசன்தலைமையில்ஓர் தேநீர் விருந்து நடத்தப்பட்டது.

காலியில் திருநபி தினம்

சென்ற 8-11-54ல் காலி வை. எம். எம். ஏ. மண்டபத்தில் மேற்படி தினம் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் காலி மாநகராதிபதி அல்ஹாஜ் ஏ. ஆர். எம். தாஸிம் தலைமை வகித்தார்: ஜனாப்களான ஆலிம் பி. கே. எம். ஏ. காதர், பாகவி எஸ். டி. எஸ். மௌலானா, மௌலவி எம். எம். ஸுஹ்றுதீன் (பஜ்ஹி), தலைமை ஆசிரியர் டீ. எஸ். ஏ. லதீப், எம். ஐ. எம். ரூஸிக், அதிபர் ஏ. ஆர். எம். ஏ. காதர் தலைமை ஆசிரியர் எம். ஸீ. எம். சாப்தீன் மௌலவி எஸ். எம். எஸ். செய்யிது அலவி, மௌலானா (பஜ்ஹி) மௌலவி என். டீ. எம். அபூஉபைதா ஆலிம்(பாகவி) ஆசிரியர்கள்: எம். டீ. எம். ஹஸன், ஏ. ஏ. முகம்மது ஆகியோர் முறையே சொற்பொழிவாற்றினர்கள்.

இதோ, ஒரே ஒரு நிமிஷம்!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

டன் அரட்டை அடித்துவிட்டுப் பத்து மணிக்கு வீடு திரும்பினால் என்ன? என்ற எண்ணமும் அவன் மனதில் தோன்றியது. உடனே அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான். வீட்டிற்குப் போய் ராணியைத் திட்டு திட்டென்று திட்டவேணுமென்ற நோக்கத்துடன் வீட்டை நோக்கி நடந்தான்.

வீட்டை நெருங்கும்பொழுது அவனைப் 'பயம்' பிடித்துக் கொண்டது. தன்னை அழைத்துப் போவதாகச் சொல்லிவிட்டு, வேண்டுமென்றே ஊர்சுற்றக்கிளம்பி விட்டதாகக் குற்றம் சாட்டுவாளோ? அல்லது "நானுங்களிடம் வலியவந்து சினிமாவிற்குக் கூட்டிப் போங்கள் என்று கேட்டேனை என்ன? நீங்கள்தானே சினிமாவிற்குவா; என்று சொல்லிவிட்டு என்னை ஏமாற்றி விட்டீர்கள்?" என்று சிணுங்கத் தொடங்கினால்— ராணியின் பிடிவாதம் அவனுக்குத்தெரியும். தாய் தகப்பனுக்கு ஒரேயொரு மகள். சின்னவயதில் செல்லம் கொடுத்துக் கொடுத்து அவளைக் குட்டிச்சுவராக்கி விட்டார்கள். அந்தப் பிடிவாத குணத்தை அடிக்கடி அவனிடமும் காட்டியிருக்கிறாள். எவ்வளவு அன்புள்ளமும், வெள்ளை மனமும் படைத்தவளோ, அவ்வளவிற்கவ்வளவு பிடிவாத குணமும் முரண்டுத் தனமும் படைத்தவள் ராணி. சில்லறை விஷயங்களுக்கே இவ்வளவு பிடிவாதம் பிடிக்கும் அவள் இப்பொழுது மட்டும்—?

அவன் சிந்தனை இறக்கை கட்டிப் பறந்தது.

வீட்டுப் படியில் கால் வைத்தான்; வீடு இருளடைந்து கிடந்தது. விளக்கேற்றப்படவில்லை. "சரிதான் காளிமாதா சுயரூபம் எடுத்து விட்டாள் போலும்! எந்தப் பலிகொடுத்துத் தேவியைத் திருப்திப் படுத்துவதோ தெரியவில்லை" என்றெல்லாம் அவன் நெஞ்சில் நினைவுகள் குமிழ்விட்டன.

விளக்கை ஏற்றினான்.

ராணியின் அறையில் சத்தமே கேட்கவில்லை. தன்னை ஏமாற்றியதற்கு வட்டியும் முதலுமாகப் பழிவாங்குகிறாளாக்கும் என்ற எண்ணமோடியது அவனுக்கு.

ராணியின் அறைக்கதவின் ஊடாக—கதவின் இடைவெளியின் ஊடே உள்ளே எரிந்த விளக்கின் வெளிச்சம் ஒளிக்கோடாகத்தெரிந்தது.

ரகுநாதன் மனதைத்திடப் படுத்திக் கொண்டான். எதற்கும் தயாராகத் தன்னைத் தயார் படுத்தி நிற்கும் தேச பக்தனைப்போல தன்னை நினைத்துக் கொண்டான். தொண்டையைச் சிறிது கனைத்துத் திருத்தியபடி முதல் முதல் மேடையில் சந்தர்ப்பக் கோளாறினால் பேச எழுந்து நிற்கும் பேச்சாளனைப்போல குரல் கரகரக்க "ராணி! ராணி!" என்று குரல் கொடுத்தான். அந்தக் குரலில் கனிவையும் குழைவையும் கலந்திருந்தான். கதவை இலேசாகத் தட்டினான்.

உள்ளேயிருந்து ராணி குரல் கொடுத்தாள்:

"ஐயோ....! ஏன் அவசரப் படுகிறீர்கள்? பொறுத்ததுதான் பொறுத்தீர்கள்; கொஞ்சம் பொறுங்கள்! இதோ ஒரேயொரு நிமிஷத்தில் வந்துவிட்டேன்!"

'சுதந்திரன்'
சந்தா விபரம்
1955 ஜனவரி முதலாம் தேதி தொடக்கம்
வருட சந்தா ரூபா 7-50
ஆறுமாத சந்தா ரூபா 4-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிங்ஸ்லி வெல்லிங்டன் விஜயா

[கொழும்பு] [திருகோணமலை & யாழ்ப்பாணம்] [மட்டக்களப்பு]

வெற்றி முரசுகொட்டும் 2-வது வாரம்!

சினிமா உலகிலே ஒரு புரட்சிப் பாதையை அமைத்து கண்களுக்கு களிப்பூட்டும் கதை "கண்கள்"

காணத் தவறுதீர்கள்!

கைப்பிடித்த கணவனை கண்களைக் காட்டிலும் முக்கியமானது எனக் கருதும் பெண்மணிகள் நமது நாட்டிலும் பலருண்டு. இவர்களில் ஒருவளின் கதையைக் காட்டுகிறது "கண்கள்"



சிவாஜி கணேசன்,
பண்டரிபாய், சகஸ்ரநாமம்,
மைலாவதி நடிக்கும்

"கண்கள்"

வெற்றிகரமான 2-வது வாரம்!

காமினி ஸைபையர் குயின்லன் வெம்பிளி

[கொழும்பு] [வெள்ளவத்தை] [நுகேகொடை] [கண்டி]

மற்றும் ஆறு திரைகளில்

"ரதல பிலிறுவ"

[சிங்களப் படம்]



★

நட்சத்திரங்கள்:

லடி ரணசிங்க, ரீடா ரத்னயக்க,
டொம்மிஜயவர்தன, சாந்திலேகா
பெர்ட்ரம்பர்ணந்து, பத்மடிமெல்

மகத்தான 2-வது வாரம்!

மைலன் தியேட்டர்

(கொழும்பு)

ஒவ்வொருவரும் பார்த்து மகிழவேண்டிய ஓர் உன்னதமான படம்

கே. ஆர். ராமசாமி, கே. சாவித்திரி

முதலியோர் நடித்த

சுகம் எங்கே?

இப்பத்திரிகை கொழும்பு கட்டடா தெரு 196ம் இல்லத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் லிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் என்ற ஸ்தாபனத்தின் சார்பாக தட்டச்சுசெய்து அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு 1955 ஜனவரி 2ந் திகதி பிரசுரம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org